236

# சாந்தி

ஆசிரியர் : ரகுநாதன்

மார்ச் 1955

விலை 6 அணா

1236
1-55
MAR 1955
MADRAS
5 MAR 1955
MADRAS



தந்தி: பெய்த்.
FAITH



போன்: 149
112

ACL-THAL
02599

நவ நாகரீகத்திற்கேற்ற பவுன் தங்க நகைகள்
வெள்ளிப்பாத்திரங்கள் & கல் நகைகள்
உத்தரவாதத்துடன் கிடைக்குமிடம்



சித. கோ. இ. பெருமாள் பிள்ளை
ஜுவல்லர் திலி. டவுண்

# சித. கோ. இ. பெருமாள் பிள்ளை

43. கீழ ரத வீதி

தலைமை ஆபீஸ்:

கூளக்கடை பஜார் - திருநெல்வேலி டவுண்.

சாந்தி

கலை இலக்கிய மாத இதழ்



1236
1-53

இந்த இதழில்

ஆட்சிமொழிக் கோரிக்கை (தலையங்கம்) 3
பாராட்டுக்கள் 8
சலிப்பு ஜயகாந்தன் 9
புதைபொருட் செல்வம் நா. வானமாமலை 17
லாட்டரிச் சீட்டு ஆண்டன் செஹாவ் 21
அனுமந்தபுரம் மகாராஜா முல்க் ராஜ் ஆனந்த் 27
நம் நாடு திருச்சிற்றம்பலக்கவிராயர் 36
சத்திய சோதனை டி. செல்வராஜ் 39
டி. கே. சி. – சில நினைவுகள் ல. சண்முகசுந்தரம் 47
வீரமும் புகழும் சி. சுப்பிரமணியம் 52
பேராசைக்காரனும்.... (குட்டிக்கதை) 59
சிவகங்கைச் சிங்கங்கள் ரகுநாதன் 60
தெரியுமா? (பரீட்சை) 69
"தாய் உள்ளம்" கே. பாலதண்டாயுதம் 70
வள்ளியின் செல்வன் (விமர்சனம்) 74
புத்தக விமர்சனம் தொ. மு. சி. 76

கதைகளில் வரும் பெயர், சம்பவம் அனைத்தும் கற்பனை: எவரையும் குறிப்பிடுவன அல்ல.

## நீங்கள் படித்துவிட்டீர்களா?

### கீழ்க்கண்ட நூல்கள் அரசியல் கலைப் பொக்கிஷங்கள்

1 ஜார் ரஷ்யாவில் தொழிலாளர் விவசாயிகளின் வாழ்க்கையும் விடுதலைப் போரும். விலை ரூ. **0—6—0**

2 மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி. விலை ரூ. **0—6—0**

3 சோவியத் யூனியனில் சோஷலிஸ சமுதாய அமைப்பு. விலை ரூ. **0—6—0**

4 மக்களின் வாழ்க்கை நிலையும், கட்சியின் வேலை முறையும். விலை ரூ. **0—1—6**

---

கிடைக்குமிடம்:—

**நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ் லிமிட்டெட்**

**திருநெல்வேலி ஜங்ஷன்.**



# சாந்தி

ஆசிரியர் : ரகுநாதன்

## விளம்பர விகிதம்

| | |
|---|---|
| பின்புறம் கவர் | .... ரூ. 75—0—0 |
| உள்புறம் கவர் | ... ரூ. 60—0—0 |
| முழுப் பக்கம் | ... ரூ. 50—0—0 |
| அரைப் பக்கம் | ... ரூ. 30—0—0 |

★

# சாந்தி

''நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற் குழைத்தல்'' — பாரதி

மலர் 1 | ஜய, மாசி ○ மார்ச்சு 1955 | இதழ் 4

## ஆட்சி மொழிக் கோரிக்கை

○

சென்ற மாத மத்தியில் சென்னையில் மூன்றாவது தமிழ் எழுத்தாளர் மகாநாடு நடைபெற்றுள்ளது. அம்மகாநாடு தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் அரும்பணியாற்றியுள்ள முதுபெரும் புலவர்களான திருவாளர்கள் எஸ். வையாபுரிப்பிள்ளை, மு. ராகவய்யங்கார் இருவருக்கும் கேடயங்கள் பரிசளித்துக் கௌரவித்துள்ளது. இன்றைய இலக்கிய வளர்ச்சிக்கெல்லாம் வழி சமைத்து, நமது தமிழ் மொழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே பண்பட்டுப் பதப்பட்டு வந்துள்ளது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே நமது பண்டைய இலக்கியத்தையும் பாரம்பரியத்தையும் சரித்திரத்தையும் கற்றுத்தந்த தமிழறிஞர்களைக் கௌரவிப்பது எழுத்தாளர்களின் முழுமுதற் கடமையாகும். இந்தக் கடமையை நிறைவேற்றிய எழுத்தாளர் மகாநாட்டை நாம் மனமார வாழ்த்துகிறோம்.

அடுத்து இம் மகாநாடு தமிழைத் தமிழ் நாட்டின் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்பதுபற்றித் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்தத் தீர்மானத்தால் எழுத்தாளர் மகாநாடு மிகுந்த முக்கியத்துவம் பெற்று விட்டது. நாட்டின் அவசர அவசியத் தேவையை உணர்ந்து இத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளதை நாம் வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம். நம்மையும் நமது கலாசாரத்தையும் அடிமைகொண்டு ஆட்சி செய்த அதே ஆங்கில மொழிதான், சுதந்திரம் வந்து எழு ஆண்டுகளாயும் இன்றும் ஆட்சி மொழியாக இருப்பதைக் கண்டு நாம் வெட்கப்படத்தான் வேண்டும். நாட்டு மக்களில் பெரும்பான்மையோருக்குத் தெரியாத மொழியில், நாட்-

டுக்கே அன்னியமான மொழியில் ஆட்சி நடைபெறுமானல், அந்த நாட்டில் ஜனநாயகமே இல்லை என்றே கூறிவிடலாம். ஏனெனில், சாதாரணப் பொதுமக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் அரசியலிலும் சமூகத்தின் வேறுபல துறைகளிலும் பங்கு பெற்றுச் செயலாற்றுவதற்கு அன்னிய மொழி தடையாயிருக்குமென்ருல், அது அந்நாட்டு மக்களின் வாயையே கட்டிப்போடுவதாகவே இருக்கும். மேலும் அன்னிய மொழி ஆட்சிபீடத்தில் இருந்தால், அது அந் நாட்டு மக்களின் தாய் மொழியின் ஊட்டத்தையும் வளர்ச்சியையும் உறிஞ்சித் தீர்க்கும் புல்லுருவியாகத்தான் விளங்கும். எனவே தாய் மொழியை ஆட்சி மொழியாக்குவதே ஜனநாயகப் பண்பு என்றும், அதுவே ஜனநாயகத்தின் முதற்படி என்றும் நாம் கருதுகிருேம். இந்த உண்மையை எழுத்தாளர் மகாநாடு உணர்ந்து செயலாற்ற முன் வந்ததைப் பாராட்டுகிருேம்.

ஆனல், இன்ருே நாட்டின் ஆட்சியாளர்கள் தாய் மொழியின் வளர்ச்சிபற்றிச் சலிக்காமல் பேசுவார்கள். தமிழிசை மகாநாட்டில் பங்குபெற்று, தமிழிசை வளர்ச்சிக்கான ஆலோசனைகளைக் கூறுவார்கள்; தமிழ் இலக்கிய கர்த்தாக்களை ஊக்குவதற்காகப் பரிசுகளும் வழங்குவார்கள்; 'வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர்!' என்று தேசிய கீதமும் பாடுவார்கள். ஆனல் அரசாங்க அலுவல்களிலோ, சட்டசபையிலோ தமிழுக்கு இடம் தருமாறு கேட்டால் 'தமிழில் அது சாத்தியமா?' என்று கேட்பார்கள்; 'சாத்தியமா இல்லையா என்பதை ஒன்றிரண்டு ஜில்லாக்களில் பரிசோதித்துப் பார்க்கிருேம்' என்பார்கள். 'தமிழ் நாட்டோடு கன்னடப் பகுதியும் கேரளப் பகுதியும் இணைந்திருக்கிறதே. அவர்களை மறந்து விட்டு நாம் மட்டும் தமிழை ஆட்சி மொழியாக்க முடியுமா?' என்று அங்கலாய்ப்பார்கள். ஆனல் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்குவது பற்றிய உறுதி மொழியையோ அதற்கான காலவரையறையையோ மட்டும் மறந்தும் கூறிவிட மாட்டார்கள். இதுதான் நாம் கண்கூடாகக் காணும் நிலைமை.

எனவே தமிழை ஆட்சி மொழியாக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றுவதோடு நாம் திருப்தியடைந்து விடக்கூடாது; தீர்மானத்தை வெற்றிகரமாக்குவதற்கான திட்டங்களையும் நிறைவேற்றத் தொடங்க வேண்டும். தமிழை ஆட்சி மொழியாக்குவோம் என்று ஆட்சியாளர்கள் சொல்லளவில் சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது; அதற்கான தேதியையும் குறித்து விடவேண்டும் என்று வற்புறுத்த வேண்டும். தமிழ் ஆட்சி மொழியாவதற்கு கன்னடப்பகுதியும் கேரளப் பகுதியும் தடையாக இருக்கின்றனஎன்ருல், அவற்றையும் அதனதன் தாயகத்தோடு இணையவிட்டு, அதுபோல் தமிழ்த்தாயகத்திலிருந்து பிரிந்து வாழும் திருவிதாங்கூர் தமிழ்ப்பகுதி

யையும்தமிழ் நாட்டுடன் இணைத்து, அவரவர் நாட்டில் அவரவர் ஆட்சியும் மொழியும் தழைக்குமாறு செய்யவுமே நாம் ஆட்சியாளரை வற்புறுத்த வேண்டியதுதான். அதாவது மொழிவாரிமாகாணக் கோரிக்கைக்கும் சேர்த்தே, நாம் ஆட்சி மொழிக் கோரிக்கைக்காகப் போராட வேண்டும். சட்டசபையிலுள்ள சகல தமிழ் அங்கத்தினர்களும் தமிழ் மந்திரிகளும் தமிழில்தான் பேசவேண்டும் என்றும் நாம் வற்புறுத்த வேண்டும். முன்னர் அபிப்பிராய சுதந்திரத்துக்காக இந்தியப் பத்திரிகைகள் பலவும் வெளியிட்டு வந்தது போல், 'தமிழ் நாட்டில் தமிழை ஆட்சி மொழியாக்கும் வரையிலும் நாங்கள் ஓய்ந்திருக்கமாட்டோம்; ஆக்கியே தீருவோம்' என்ற சபதத்தைத் தமிழ்ப் பத்திரிகைகள் அனைத்தும் வெளியிட்டு வரவேண்டும். அத்துடன் எழுத்தாளர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் இந்தக் கோரிக்கைக்காகப் பொது மக்களின் ஆதரவையும் ஒன்று திரட்ட வேண்டும். தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்குவதற்காகவே ஒரு பெரும் மொழிப் போராட்டத்தைத் தொடங்க வேண்டியே நேர்ந்தாலும், எழுத்தாளர்களும் பத்திரிகாசிரியர்களும் அந்தப் போராட்டத்தில் பங்கு பெறவும் முன்னின்று நடத்தவும் தயாராயிருக்கவேண்டும். ஆட்சி மொழிக் கோரிக்கை பற்றி ஆலோசிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எழுத்தாளர் ஆலோசனைக் குழு இவைபற்றியெல்லாம் தீர ஆலோசித்து முடிவுக்குவரும் என்று நாம் நம்புகிறோம்.

## தமிழ் வளர்த்த பெரியார்கள்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழர்கள் பாக்கியசாலிகள். ஏனெனில் கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்குப் பின்னர் தோன்றிய சிறந்த மகாகவியான பாரதியார் இந்த நூற்றாண்டில்தான் தமிழுக்குப் புதிய புதிய கவிதைச் செல்வத்தை வாரி வழங்கி வளப்படுத்தினார்; அதுபோலவே, கால வெள்ளத்தால் அடிபட்டும் அரிக்கப்பட்டும் ஒதுங்கிக் கிடந்த நமது பண்டை இலக்கியங்களான சங்க நூல்களையும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காவியங்களையும் எங்கெங்கிருந்தோ தேடி எடுத்து, அவற்றைத் திருந்திய முறையில் பதிப்பித்து வெளியிட்டு, தமிழின் இலக்கியச் செல்வத்தை வளப்படுத்தினார் உ. வே. சாமிநாதய்யர். அச்செல்வங்களை வெளிக்கொண்டுவந்ததால் நமது பண்டைப் பெருமையையும் பண்பாட்டையும் சரித்திரத்தையும் தெரிந்து கொள்ளவும், பழைய கவிதைகளின் நயத்தை உணர்ந்து அனுபவிக்கவும் வழியமைத்துக் கொடுத்தார் அவர். அந்தத் தமிழறிஞரின் நூற்றியோராவது ஜென்ம தினம் சென்ற மாதம் சென்னையிலே விமரிசையாகக் கொண்டாடப்பெற்றது குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

பாரதியாரும் சாமிநாதய்யரும் புதிய கவிதையாலும், பழைய கவிதையாலும் தமிழை வளமுறச் செய்தார்களென்றால், தமிழ்க் கவிதையின் வளத்தையும் நயத்தையும் அழகையும் நாமனைவரும் உணர்ந்து அனுபவிக்கவேண்டும் என்ற பெருநோக்கோடு, தம் வாழ்நாளைப் பயன் படுத்திய பேரறிஞர் டி. கே. சி. ஆவர். தமிழ் வளமும் அழகும் வெறுமனே ஏட்டில் மட்டும் இல்லாமல், நமது நெஞ்சத்திலே உருவேறுமாறு செய்து வந்தவர் அவர். டி. கே. சி. நம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டுக் காலம் ஆகின்றது. அன்னாரது நினைவு நாளையும் சென்ற 27-ம் தேதியன்று தமிழன்பர்கள் பலர்கூடி, அம்பாசமுத்திரத்திலே அதிவிமரிசையாகக் கொண்டாடியது குறித்தும் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

நமது மொழிக்கும் நமக்கும் அருந்தொண்டாற்றி மறைந்த தமிழறிஞர்களின்நினைவைச் சிந்தையில் வைத்துப் போற்றி, அவர்தம் நினைவு நாட்களைக் கொண்டாடுவதன்மூலம் தமிழ்மொழியை மேன் மேலும் வளர்ப்பது தானே நமது கடமை. அன்னாருக்கு நாம் செய்யும் சிறந்த கைம்மாறும் அதுதானே!

## பார்மோஸா பிரசினை

சீன நாட்டின் கடற்கரைக்கு 200 மைல் அருகிலுள்ள பார்மோஸா தீவு இன்று உலக மக்களின் கவனத்தையே கவர்ந்துள்ளது. அந்தத் தீவை ஆளும் உரிமை பெற்றவர்கள் ஐம்பது கோடி மக்களின் பிரதிநிதியாய் விளங்கும் மாசேதுங் அரசாங்கம் தான் என்பதை நியாய புத்தி உள்ளவர்கள் அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். இந்தியப் பிரதமர் நேருவும் பார்மோஸா சீன மக்கள் குடியரசைச் சேர்ந்ததே என்பதையும் ஐயந்திரிபறக் கூறியிருக்கிறார்.

எனினும் ஐசன் ஹோவரின் அமெரிக்காவும், சர்ச்சிலின் பிரிட்டனும் இன்று பார்மோஸா தீவு சியாங்கே ஷேக்குக்கே சொந்தம் என்று கூறுகின்றனர் நாட்டு மக்களால் புறக்கணிக்கப்பட்டு, ஓடி ஒளிந்துகொண்ட சியாங்கே ஷேக்கைத் தூண்டிவிட்டு, சீன நாட்டின் அமைதியைக் குலைத்து அழிவை விதைக்கவும் அவை முயலுகின்றன. அணுகுண்டு ஹைட்ரஜன் குண்டு போன்ற நாசக் கருவிகளுக்கு வேலை கொடுக்கத் திட்டமிடுகிறார்கள், போர் வெறியர்கள்.

இதனால் உலக சமாதானத்துக்கே பெரும் குந்தகம் விளையும் நிலைமை ஏற்பட்டுள்ளது; உலக மக்கள் இந்தப் பிரசினைக்கு ஒரு நல்ல முடிவு வேண்டும் என்று கூறுகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் உலக மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் முறையில் சோவியத் ருஷ்யா ஒரு நல்ல யோசனையைக் கூறியுள்ளது.

பார்மோஸா பிரசினையைத் தீர்க்க, உலகத்தின் ஐந்து வல்லரசுகளும், இந்தியா, பர்மா, இந்தோனேஷ்யா, பாகிஸ்தான், இலங்கை

முதலிய ஏனைய ஆசியநாடுகளும் டெல்லியிலோ ஷாங்காயிலோ ஒன்று கூடி ஆலோசிக்க வேண்டும் என்பதே ருஷ்யாவின் யோசனை, இந்த மகாநாட்டில் சீன மக்களால் விரட்டியடிக்கப்பட்ட சியாங்கே ஷேக்குக்கு நிச்சயம் இடமில்லை. எனினும், அவரும் மகாநாட்டில் இடம் பெற வேண்டும் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் கூறுகின்றன. ருஷ்யாவின் யோசனையை நடைமுறை சாத்தியமற்றதாக்கி, யுத்த நடவடிக்கையை மேலும் வலுப்படுத்துவதே இதன் நோக்கம்.

ஆனல் நமது பிரதமர் நேருவும் சமீபத்தில் நடந்த காமன்வெல்த் மகாநாட்டிற்குப் பின்னர், 'சியாங்கும் வரட்டுமே' என்ற தோரணையில் பேசியிருக்கிருர். இது மிகவும் வருந்தத்தக்கது. சீன மக்கள் குடியரசின் நெருங்கிய நண்பரான பண்டித நேரு பத்து நாடுகள் மகாநாட்டை ஆதரிக்கிருர் என்பது உண்மை. எனவே இவ்வாருன இரண்டுங்கெட்டான் பேச்சு பிரசினையைத் தீர்க்க உதவாது. உலக அமைதிக்குச் சீரிய முறையில் பணியாற்றிவரும் பண்டித நேரு பத்து நாடுகள் மகாநாட்டை நமது இந்தியத் தலைநகரிலேயே விரைவில் கூட்ட ஏற்பாடு செய்து, பார்மோஸா பிரசினைக்கு ஒரு நல்ல முடிவுகாண முயல வேண்டும். உலக மக்களும் இந்திய மக்களும் பண்டிதநேருவிடம் இந்தப் பணியைத்தான் எதிர்பார்க்கிருர்கள்.

★


மகிழ்ச்சிக்குரிய செய்தி

**1955 ஏப்ரல் மாத இதழிலிருந்து**

**சாந்தி**

**4 அணு விலையில்**

**வெளிவருகிறது!**

★

நிர்வாகி, ''சாந்தி''

# பாராட்டுக்கள்



[சாந்தியை வாழ்த்தி வரவேற்று மேலும் பல தமிழன்பர்களும் வாசக நேயர்களும் கடிதங்கள் எழுதியுள்ளார்கள்; பத்திரிகைகள் மதிப்புரையும் வழங்கியுள்ளன. அவற்றின் மூலம் பாராட்டுக்களையும் பயனுள்ள ஆலோசனைகளையும் தந்துள்ளார்கள். அவர் தம் ஆலோசனைகளை, 'சாந்தி' எதிர்காலத்தில் இயன்றவரையிலும் நிறைவேற்றி வைக்கும் என்று உறுதிகூறுகிறோம். கடிதங்கள் எழுதி ஊக்குவித்த அன்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். பாராட்டுக்களில் சிலபகுதிகளை இங்கு மனமகிழ்ச்சியோடு வெளியிடுகிறோம். — ஆசிரியர் 'சாந்தி']

"சமீபகாலத்தில் வெளிவந்துள்ள இலக்கிய மாத இதழ்களில் 'சாந்தி'யைச் சிறந்த தொன்றாகக் கொள்ளலாம். நல்ல இலக்கிய சிருஷ்டிகள் கிடைக்காதா என்று ஆவலுடன் எதிர்பார்க்கும் இலக்கிய ரசிகர்களுக்கு ரகுநாதனின் 'சாந்தி' மிகவும் மகிழ்ச்சியைத் தரும் என்பது திண்ணம்.......சிந்தனையாளர்களாயுள்ளோரும் விரும்பிப் படிக்கக்கூடியதாக விளங்கும் சாந்திக்கு அமோகமான ஆதரவு கிடைக்கும் என்பது நிச்சயம். அவ்வகையில் நாம் சாந்திக்கு நல்வரவு கூறி வாழ்த்துகின்றோம்."

**'பிரசண்டவிகடன்' (மதிப்புரை) சென்னை.**

"இப்பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ ரகுநாதன் தமிழர்களுக்கு முன்னரே நன்கு அறிமுகமான சிறந்த முன்னணி எழுத்தாளர். எந்த விஷயத்தையும் புதிய கோணத்தில் அலசி ஆராய்ந்து சிந்தனைக்குகந்த கதைகளையும் கட்டுரைகளையும் சரளமான நடையில் எழுதும் திறன் படைத்தவர். ஆகவே இவரை ஆசிரியராகக்கொண்டுள்ள இப்பத்திரிகைக்கும் தனிச் சிறப்பு உண்டு."

**'விந்தியா' (மதிப்புரை) பம்பாய்.**

"சாந்தியின் மூன்று இதழ்களும் பார்த்தேன். கவிராயரின் கவிதைகள் மிகமிக ஜோர். உங்கள் கட்டபொம்மன், மருது பாண்டியன் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அற்புதமாக அமைந்திருக்கின்றன. இதர சிறு கதைகள் இருதயத்தைத் தொடுகின்றன..."

**"இளங்கோவன்" (திரைப்பட வசனகர்த்தா) சென்னை.**

# சலிப்பு

## ஜெயகாந்தன்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

**வாழ்க்கைப் போராட்டத்தின் கஷ்ட நஷ்டங்களைக் கண்டு மருண்டு, எதிர்கால நம்பிக்கையை நிராசையாக்கி விடும் நிலையில் சிலர் சலிப்புணர்ச்சி பெறுகிறார்கள். வேறு சிலரோ வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியாமல் புளிப்புத்தட்டிய மனத்தின் விரக்தி நிலையில் சலிப்புணர்ச்சி அடைகிறார்கள். ஆனால் வாழப் பிறந்தோம் என்ற தெளிவோடும் வாழ வகையுண்டு என்ற நம்பிக்கையோடும் வாழ்கின்றவர்களுக்கு ஏற்படும் சலிப்போ வேறு மாதிரி. கதாநாயகன் ராசாக்கண்ணுக்கு ஏற்பட்ட சலிப்பு எது?**

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அன்று ராசாக்கண்ணுக்கு ஏக குஷி! ஆமாம், வாரத்துக்கு ஒரு நாள் அவனுக்கு அப்படி ஒரு வியாதி வருவது வழக்கம். வியாதி வருவதற்கு நேரமென்றும் காலமென்றும் உண்டா? ராசாக்கண்ணுவைப் பொறுத்த வரை உண்டு.

அந்த நோய் பிரதி சனிக்கிழமை தோறும் காலை அரும்பி, பகலெல்லாம் ஜெபமாகி மாலை மலரும்.

மாலை கழிந்து விட்டால், அதன் பிறகு நோயின் உக்ரம். அதன் விளைவுகள் பல.

அந்தப் புனித தினமான, சனிக்கிழமையன்றுதான் அவனுக்கு வாரச் சம்பளமாக ரூபாய் மூன்று கிடைக்கும்.

மூன்று ரூபாய்!...

அடேயப்பா! வெள்ளிக்கிழமை இரவிலிருந்தே அவன் மனம் குதியாட்டம் போட ஆரம்பித்து விடும்.

"சும்மா மொறைக்காதே, நாய்னா! ஒனக்கு ரெண்டு ரூபாதானே பாக்கி? என்னமோ ஒரேயடியா பேசிக்கினே போறியே? நாளைக்கிச் சம்பளம் வாங்கி மொதல்லே ஒங்கடனைத் தீர்த்துட்டுப் போறேன். அப்பாலே ஒனக்கும் எனக்கும் பாக்கி சாக்கி இல்லே..." என்று வெற்றிலைப் பாக்குக் கடைக்காரனிடம் ஜவாப் சொல்லிவிட்டு 'மொதல்ல இந்தப் பய சள்ளையெத் தீக்கணும்' என்று மனத்திற்குள் முனகிக்கொள்வான். அதெல்லாம் மறுநாள் வரப்போகும் சனிக்கிழமையை நினைத்துக் கொண்டுதான்.

சனிக்கிழமை காலையில் வேலைக்குப் புறப்படும் போது, வரும் வழியில் ஆப்பக்காரக் கிழவி ராசாக்கண்ணுவைப் பார்த்து விடுவாள். ராசாக்கண்ணு மெள்ள மறைவான். "டேய், திருட்டுச் சோமாறி! கெய்வியெ எச்சுப்புட்டுப் போகலாம்னு பாத்தியா?.... அந்தப் பஜனையெல்லாம் எங்கிட்ட நடக்காதுடா, மவனே...! மரியாதையா துட்டெக் கீழேவை..." என்று சிம்மக் குரலில் கர்ஜிப்பாள்.

"ஏ! ஆயா, உன் தட்டைத் தூக்கிக்கினு பூடுவேன்? ஒரேயடியா அய்வுறுயே.... ஒனக்கு எம்மாத்தம் பாக்கி?... நாலு ரூபா தானே?.... சாயங்காலம் சம்பளம் வாங்கி ரெண்டு ரூபா குடுக்கறேன். மீதி அடுத்த வாரம் தான்.... ஆயா... ஆயா... நாழியாச்சி... வேலைக்குப் போவணும்" என்று அவசரப்பட்டுக் கொண்டே கிழவியிடமிருந்து தப்பியோடுவான்.

கிழவி ஆபாச வார்த்தைகளால் அர்ச்சனை செய்து கொண்டே திரும்புவாள்.

"சாயங்காலம்.... வாங்கிக்க ஆயா...." என்று தூரத்திலிருந்து குரல் கொடுப்பான் ராசாக்கண்ணு.

★ ★ ★

அவன் வேலைக்குப் போகும் வழியில் ஒரு கல்லூரி. அங்கு நடமாடும் 'நாகரிகக் கோமகன்கள்' அவன் பார்வை வெறித்து வட்டமிடும்.

"அந்தமாதிரி 'புளு'விலே ஒரு புஷ்கோட் தைக்கணும்; நல்லதா ஒரு 'டவுசர்'; காலுக்கு ஒரு செருப்புணச்சும் வாங்கணும்..." என்று அவன் மனசில் ஆசை நெளிந்து புரளும்.

"ஹூம்... சாயங்காலம் பணம் வாங்கிப் பாத்துக்கலாம்."

'டிங்... டிங்...' என ரிப்பன் பில்டிங் மணிக் கூண்டு நாதம் முழங்குகிறது.

"ஐயோ நாழியாச்சே!..." என்று பதறி ஓடுகிறான்.

அவன் வேலை செய்யும் சோப்புத் தொழிற்சாலையருகே ஒரு பெரிய சினிமா விளம்பரம்.

"அட, புதுப்படம்.... நாயித்திக்கிழமைதானே? நாளன்னைக்கு.... அதுக்கென்ன போனுப் போச்சி... குட்டி ஷோக்கா போஸ் குடுத்து நிக்கிறளே!... அவளுக்கும்,.......க்கும் தான் ஜோடி!... இந்த மலையாளத்துக் குட்டிங்கதான் எப்படி இருக்காங்க? நம்மூர்ப் பொம்பளைங்களையும் பாக்கலே.... இதுங்க மூஞ்சியும் மோரையும்......"

"ஏய், ராசாக்கண்ணு.... நாழியாவலெ? சினிமாக்காரியெப் பாத்துக்கினே நிக்கிறியே. நாளைக்குக் கொஞ்சம் வச்சிக்கப்பா..."

"யார்ரா அது?"

சகதொழிலாளி மாணிக்கம் தான்.

"மாணிக்கம், ஒரு நாலணா இருந்தா குடு. 'டீ' குடிச்சிட்டு ஓடியார்ரேன்..."

"எங்கிட்ட ஏதுப்பா துட்டு?"

"சரிதாம்பா... குடு... சாயங்காலம் சம்பளம் வாங்கிக் குடுத்துடறேன்."

"சொன்ன நம்பமாட்டே... இப்பதான் 'டீ' குடிச்சிட்டு அரையணா பீடி வாங்கிக்கிட்டு வந்தேன். மீதி ஒண்ணரையணா தான் இருக்கு..."

"அதெணச்சும் குடு..." என்று வாங்கிக்கொண்டு, டீக்கடையை நோக்கி நடக்கிறன் ராசாக்கண்ணு.

"ஹூம்... அவன்தான் என்ன பண்ணுவான்? வாரச் சந்திக்

கட்டு! சாயங்காலம் மாணிக்கத்துக்குத் திருப்பிக் குடுத்துட்டா போச்சி" என்ற சமாதானம் மனத்திற்குள்.

★ ★ ★

அன்று முழுவதும் அவனுக்கு வேலை மும்முரமாக ஓடுகிறது.... மாலை மணி ஐந்து!

மானேஜர் ரூம் அருகே நிற்கும் வாரச் சம்பளக்காரர்கள் கூட்டத்தில் முதலிடத்தில் நிற்பவன் ராசாக்கண்ணு.

"ராசாக்கண்ணு!" என்று கேஷியர் கூப்பிட்டவுடன் 'ஸார்' என்று ஒரே துள்ளலில் மேசையருகே போய் நிற்கிறான்.

மூன்று ரூபாய்!

அவன் கையிலே மூன்று ரூபாய்!

அவ்வளவுதான்! அதன் பிறகு ராசாக்கண்ணுவை யார் பார்க்க முடியும்?

மாணிக்கம், வெற்றிலைப்பாக்குக்கடைக்காரன், ஆப்பக்காரக் கிழவி எல்லோர் கண்களுக்கும் அவன் மாய மனிதனாக மாறி விடுவான்.

அன்று அவன் கம்பெனியை விட்டுத் திரும்பிப் போகும் வழியே புது வழியாகஇருக்கும்.

கையிலே மூன்று ரூபாய்.

மனசில் ஏக குஷி!

அதுதான் சனிக்கிழமை!

★ ★ ★

அதோ, ராசாக்கண்ணு பிராட்வேயில், பிளாட் பாரத்தின்மீது, பாதத்தருகே தார் தாராகக் கிழிந்து தொங்கும் முழுக்கால் சட்டையின் பாக்கட்டுக்குள் கைகளை நுழைத்துக்கொண்டு சிரம் நிமிர்த்தி அலட்சியமாக நடக்கிறான். அவன் சட்டையும் நிஜாரும் கிழிந்து, அழுக்கின் தடிப்பேறித்தான் இருக்கின்றன. அதைப்பற்றி அவனுக்கு இப்பொழுது லக்ஷ்யமில்லை. கையில் தான் ரூபாய் இருக்கிறதே!

அவன் மனசில் என்னென்னவோ அர்த்தமற்ற சிந்தனைக் குழப்பங்கள், ஆனால் அவன் என்னதான் குஷியாயிருந்தபோதிலும் தன் வயதொத்த நாகரிக வாலிபர்களை அவன் மனம் வெறுத்தது. கையில் சல்லிக்காசு இல்லாத சமயத்தில் அவன் மனம் அவர்களைக் கண்டு வியந்தது. பணம் இருந்தால் அவர்கள்மீது என்ன வெறுப்பு? "சீ, என்ன மனுசனுங்க? ஸ்டைல் என்ன, ஸ்டைல்... நாரப்பசங்க!" என்று சலித்துக்கொண்டான்.

"சீ! இது வேற நடக்கச்சே தடுக்குது..." பாதங்களுக்கருகே நைந்து கிடக்கும் கால் சட்டையின் கிழிசலைப் பக்குவமாகப் பிய்த்தெறிந்தான். கையிலிருந்த மங்களூர் பீடியை ஒரு 'தம்' இழுத்து விடுகிறான். மார்பைக் கொஞ்சம் முன்னுக்குத்தள்ளி, தன் உடைகளை ஒரு முறை பார்த்துக்கொண்டு திருப்தியோடு நடக்கிறான்.

சட்டையின் தோள்பட்டையிலிருந்து மார்பு வரை நாலு அங்குலத்திற்கு ஒரு கிழிசல்... என்னதான் சேர்த்து வைத்தாலும் காற்று அடிக்கும்போது

விலகிக்கொள்கிறது. உடம்பெல்லாம் தெரிகிறது, அசிங்கம் பிடித்தமாதிரி!

சட்டையை இழுத்துவிட்டு ஒருவாறு அதை மறைத்துக் துக் கொள்கிறான்.

"வயித்தெப் பசிக்குதே!. மத்தியானம்கூட சாப்பிடலே...."

அங்கே ஒரு முஸ்லீம் ஹோட்டல். உள்ளே நுழைகிறான். ஒரே கூட்டம்; பீங்கான் தட்டுகளும், கண்ணாடி டம்ளர்களும் இடிபடும் ஓசை!

கரகரத்த ரேடியோ சங்கீதம் ஏதோ ஹிந்திப்பாட்டை வெடித்துக் கிளம்பிப் பொரிகிறது!

ஹோட்டலுக்குள் நுழைந்த ராசாக்கண்ணு, கை கழுவி, முகம் கழுவி, 'பேசின்' அருகே உள்ள கண்ணாடியில் முகம் பார்க்கிறான். தலையைச் சரிப்படுத்திக் கொள்கிறான். சட்டைப் பையில் சில்லறை குலுங்குகிறது. மேஜையருகே உட்காருகிறான்.

"யாரப்பா அது? அரைப் பிளேட் பிரியாணி குடு" என்று உத்திரவு போடுகிறான்.

ரேடியோவின் ஹிந்திப் பாட்டு தாளத்தோடு அவனை ஆகர்ஷிக்கிறது!

"ஹம்ஸேனு பூச்சோ... பூச்பியார் கியாஹை!... பூச்பியார் கியாஹை!.... பூச்சோ பஹாருஸே.... ஏ....ஏ...ஏ!பூச்சோ பஹாருஸே... ஒஹ்ஹோஹ்ஹோ... ஒஹ்ஹஹ்ஹோ..." அந்த அடிகளைப் பாடிக்கொண்டு மேசைமீது தாளம் போடுகிறான், ராசாக்கண்ணு. அவன் மனம் இப்பொழுது சந்தோஷமாக, நிர்விசாரமாக இருக்கிறது... ஆனால் இந்த 'வியாதி' அவனுக்கு நிரந்தரமானது அல்ல.

பாட்டு முடிந்தது.

"ஏய், யாருப்பா அது.... பிரியாணி கேட்டேனே... சை! என்னடா ஒட்டல் நடத்துறீங்க?" என்று அலுப்புடன் சர்வரை நோக்கி விறைக்கிறான்.

"என்னய்யா, ரொம்ப அவ்ஸரப்படறே?..." என்று பதிலுக்கு விறைக்கிறான் அருகே நின்றிருந்த சர்வர்.

"டேய், மூஞ்சியெப் பேத்துடுவேன்!....சோமாறி!... எவ்வளோ நாழி மனுசன் ஒக்காந்திருப்பான்?..கேட்டா மொறைக்கிறே!..." என்று எரிச்சலுடன் எழுந்திருக்கிறான். பக்கத்திலிருந்தவர்கள் அவனைச் சமாதானப் படுத்துகின்றனர்.

"என்னடா நெனைச்சிக்கினே, ஒம்மனசுலே?" என்று கருவுகிறான் ராசாக்கண்ணு.

ஹோட்டல் முதலாளி உருதுவில் என்னவோ சொல்லி சர்வரை விரட்டுகிறார்.

சிறிது நேரத்தில் பிரியாணி வருகிறது. வெங்காயமும் மசாலா நெடியும் சேர்ந்து ஒருவித கந்தந்தை ஆவி கிளப்புகிறது!

"என்னங்கடா கறியையே காணோம்?... இந்த ஒட்டல் மகா மட்டம்!" என்ற சர்டிபிகெட்டைக் கொடுத்துவிட்டுக் கையைக் கழுவுகிறான்.

"ஒரு 'டீ' கொண்டாய்யா..."

"ஏக் சிங்கிள் சாய்...."

டீயைக் குடித்துவிட்டு மேசை மீதுள்ள பில்லைப் பார்க்கிறான்.

பதிமூன்றணா.

பில்லுக்குப் பணம் கொடுக்கிறான்.

"என்னாப்பா, பிரியாணியிலே கறியே இல்லே!.... கறி என்னா மரமாட்டம் இருக்குது?...."

"என்னா சார், இன்னிக்கு 'பஸ்ட்கிளாஸ்' கறியாச்சே?..."

"மூஞ்சி எரிஞ்சிது... நீயும் ஒன் கறியும்..." என்று முணங்கிக்கொண்டே சில்லறையை எறிந்துவிட்டு வெளியே வருகிறான். அருகே வெற்றிலைப்பாக்குக் கடை. பைக்குள் கைவிடுகிறான். அவன் விரல்களில் ஒரு மங்களூர் பீடி. "சீ! தரித்திரம்! இன்னிக்குமா பீடி?" அதை ஒடித்து எறிகிறான்.

"ஒரு பீடா குடு...ஒரு 'வில்ஸ்' குடு...." சிகரட்டைப் பற்றவைத்துக்கொண்டு சைனா பஜார் பக்கம் வருகிறான்.

அவன் இப்பொழுது யாரையும் மதிக்கமாட்டான். சாதாரண காரியத்திற்கெல்லாம் அவனுக்கு ஒரே கோபமாக வரும். இப்பொழுது எவனாவது, சற்று நேரம் அவனை உற்றுப்பார்த்தால்..அவ்வளவுதான். அதுதான் சனிக்கிழமை வியாதியின் பலன்

எதிரே காலேஜ் மாணவிகள் கூட்டம் ஒன்று வருகிறது. பல வர்ணங்களில், 'டிஷ்யூ', 'ஜார்ஜெட்', 'கிரேப் ஸில்க்!....' தாவணிகள் காற்றில் பறக்க, மோகப்பரவச நிலையில் சிரித்துப் பேசிக்கொண்டு ஒரே இரைச்சலுடன் 'எங்களுக்கு நிகர் எவரே?' என்ற ரீதியில் வருகின்றனர் அப்பெண்கள்.

ராசாக்கண்ணு சட்டையின் காலரை உயர்த்தி விட்டுக்கொள்கிறான். ஒரு பெரிய ஏப்பம் விட்டுக்கொண்டே அவர்களை ஒரு மாதிரியாகப் பார்க்கிறான். அவன் மனசில் என்னமோ ஒரு வெறி! ஒருவித அரிப்பு! அவர்களை வெறித்துப் பார்த்தவண்ணம், ஒரு மூச்சு, பலமாக சிகரட்டை இழுக்கிறான்...

புகைச் சுருள்கள் உள்ளே புகுந்து, தொண்டைக் குழியில் சுழன்று திரும்பி, 'குபுகுபு'வென வெளியே வருவதில்தான் என்ன ஆனந்தம்!

அவன் பார்வை அவர்களை என்ன செய்துவிடும்? இது போன்ற எத்தனை விதமான, எத்தனை பேருடைய பார்வைகளுக்கு அவர்கள் ஈடு கொடுத்திருக்கிறார்கள்! அவர்கள் அவனுக்குச் சளைத்தவர்களா? விறைத்த பார்வையும் வெகுளிப் பார்வையும் மோதித் தெறிக்கின்றன. அவன் மனசில் எதுவோ சுண்டித்தெறித்ததுபோல்,'விண்'ணென்று நெக்கு விட்டதுபோல் என்னவோ ஒரு உணர்ச்சி! கழுத்து நரம்புகள் புடைத்துக்கொள்கின்றன. ஹிருதய தாளம் கட்டுக்குமீறித் தட்டுத்தடுமாறுவது போன்ற உணர்ச்சி! அவர்கள் 'பக்'கென்று சிரித்துவிட்டனர்!

அவன் முகத்தில் ரத்தம் குழம்புகிறது. தலையைக் குனிந்துகொள்கிறான். அது அவனை

மீறிய உணர்ச்சி! அவர்களைக் கடந்து செல்கிறான். திரும்பிப் பார்க்கிறான். அவர்கள் அவனைப் பார்த்துச் சிரிக்கின்றனர்.

அவன் மனசில் எங்கோபோய் ஒளிந்துகொண்ட குறும்புத்தனம் தலை கிளப்புகிறது....

"ஹம்ஸேனா பூச்சோ... பூச்பி யாருக் கியாஹை..." என்ற ஹோட்டல் ரேடியோ பாட்டை முணுமுணுக்கிறான்... பஸ் வருகிறது.

காலேஜ் மாணவிகள் பஸ்ஸில் ஏறுகின்றனர். அவனும் ஓடி அதே பஸ்ஸில் ஏறுகிறான்.

அவனைக் குறித்து அவர்கள் ஆங்கிலத்தில் ஏதோ பேசிக் கொள்கின்றனர்;சிரிக்கின்றனர். தலைக்குமேல் தொங்கும் 'தோல்வார்ப்பிடியை'ப்பிடித்துக் கொண்டு அவன் அலட்சியமாக வெளியே பார்த்துக்கொண்டிருக்கிறான்.

"டிக்கட்!"

"ஒரு டிரிப்ளிகேன்!" கடைசி வரைக்கும் வாங்கிக்கொண்டால் எங்கே வேண்டுமானாலும் இறங்கிக்கொள்ளலாம் அல்லவா?

அவர்கள் என்னவோ பேசுகிறார்கள். இன்னும் சிரிக்கிறார்கள்! அவனுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வருகிறது. எல்லோரும் அவனைப் பார்த்துத் தான் சிரிக்கிறார்கள். ஆங்கிலம் தெரிந்த சில வேறு பிரயாணிகளும் அவர்கள் பேசுவதைப் புரிந்துகொண்டு அவனைப் பார்த்து நகைக்கின்றனர்...... ஒருத்தி முதுகில் ஒருத்தி விழுந்து முகத்தை மறைத்துக்கொண்டு சிரிக்கின்றனர்!

ஏன் சிரிக்கிறார்கள்?

அவனுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை... தன்னையே ஒரு முறை பார்த்துக் கொண்டான். ஒரு கையை மேலே உயர்த்திக் கொண்டு அவன் நிற்கும்பொழுது வலது மார்பிலிருந்த நீளக் கிழிசல் விலகி, இடை வெளியில் அவன் மார்பு வெளியே தெரிந்தது.... அவ்வளவுதான்...

அவன் உடனே கிழிசலை மறைக்க முயன்றான்.

சிரிப்பு பெருகிற்று.

ஏதோ ஒரு ஸ்டாப்பில் —

எவனோ ஒருவன்–நாகரிக யுவன்-ஏறினான்.லினன் பேண்ட், ஸ்லாக் ஷர்ட், மூக்குக் கண்ணாடி கையில் சிகரட்....கடைசி முறையாகப் புகையை இழுத்துவிட்டுக்கொண்டே உள்ளே ஏறினான். அவனைப் பார்த்த நாகரிகச் சீமாட்டிகள், 'ஹல்லோ' என்று ஒரு முகமாக வரவேற்றனர். என்னவோ பேசினர். அவனும் சிரித்தான்.

"ஹூம்...நா ஆம்பளே... என் மாரு வெளியே தெரிஞ்சா என்னவாம்?.... இந்தச் சிறுக்கிக ரெண்டையும் தெறந்து போட்டுகினு வர்ராளுங்களே!...தூ..!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டே வெளியே காரி உமிழ்ந்தான்.

"ஹேய்... இடியட்! பார்த்துத் துப்பக்கூடாது?..." என்று முகம் சுளித்தான் மைனர்.

ராசாக்கண்ணுக்குப் பொன்னை சந்தர்ப்பம். நழுவ விடுவானு?

"எண்டா,பொறுக்கி நாயே!... திருட்டுச்சோமாறி!.... என்ன சொன்னே?..." என்று பல்லைக் கடித்துக்கொண்டு அவன் மீது பாய்கிருன். அவனுக்கிருந்த ஆத்திரமெல்லாம் மூன்று நான்கு குத்துகளாக மாறி அந்த மைனரின் முகத்தில் வலுவுடன் விழுந்து, தன் ஆண்மைக்கு விட்ட சவாலை ஏற்றுக்கொள்கிறது.

"எண்டா?...பேண்ட் போட்டுக்கினு என்ன வேணும்னுலும் பேசலாம்னு நெனைப்பா?..." என்று உறுமுகிருன் ராசாக்கண்ணு.

மைனர் தடுமாறி நிற்கிருன்· கைகால் உதற, வாய் குழறுகிறது அவனுக்கு...

"இடியட்'டாமில்லே... இடியட்!...." என்று கருவுகிருன் ராசாக்கண்ணு.

கல்லூரி மாணவிகள்—நாகரிகச் சிமாட்டிகள்— 'ஹாய்....ஹீய்'... என்று அலறுகின்றனர். கண்டக்டர் ராசாக்கண்ணுவைப் பிடித்துச் சமாதானப்படுத்துகிருன்.

மைனருக்குக் கண்கள் கலங்குகின்றன. "பின்னே என்னு சார்... எடுத்த எடுப்பிலே இடியட்டுன்னிட்டாரே.."என்று எல்லோரும் ராசாக்கண்ணுவுக்குப் பரிந்து பேசினுர்கள்.

அடித்தவனுக்குப் பரிந்து பேசுவது 'மெட்ருஸ்' வழக்கம்!

"ஸ்டாப்பிங் ஹோல்டான்!" என்ருன் ராசாக்கண்ணு! பஸ் மவுண்ட் ரோடில் நின்றது!

ராசாக்கண்ணு கீழே இறங்குகிருன்.

"டிரிப்ளிகேனும், டிரிப்ளிகேன்!... அங்கே என்னு நமக்கு வேலை?..." என்று டிக்கட்டைக் கசக்கி எறிகிருன்.

பஸ் நகர்கிறது!

பஸ்ஸின் பின்புறக் கண்ணுடி வழியாக காலேஜ் மாணவிகள் அவனை வெறித்துப் பார்க்கின்றனர். ஆனுல் சிரிக்கவில்லை!

"தூ!" வென்று காரித் துப்பிவிட்டு, காசினே தியேட்டரை நோக்கி நடக்கிருன் ராசாக்கண்ணு.

★ ★ ★

சனிக்கிழமை போய்விட்டது! ஞாயிற்றுக் கிழமையும் ஓடிவிட்டது!

அன்று திங்கட்கிழமை! கையில் சோற்று மூட்டை; அதே கிழிந்த நிஜார்; கந்தல் சட்டை. ராசாக்கண்ணு வேலைக்குப் போகிருன்.

அவன் மனம் நிர்விசாரமாகத்தான் இருக்கிறது. அவனுடைய ஆசைகள் மிகவும் குறைவானவை, மலிவானவை! அவை நிறைவேருத பொழுது அவன் பெருத்த நஷ்டமேதும் அடைந்துவிடுவதில்லை.

அவனுக்கென்ன பிய்க்கலா, பிடுங்கலா?

அவன் அம்மா எங்கோ அவனைப் போலவே கூலிவேலை செய்கிருள். அவளுக்கும்

அவனுக்கும் 'தாய்—மகன்' என்ற உறவு மட்டுமே! பிறகு என்ன, பிதுரார்ஜித சொத்து சம்பந்த உறவா இருக்கும்? அதற்குத் தான் வக்கில்லையே! சமயத்தில் இரண்டணு, நாலணு உறவு எற்பட்டு விட்டாலே, பெரும் ரகளை ஆரம்பமாகி விடும்!

★ ★ ★

மணி ஒன்பதரை.

கம்பெனிக்கு லேட்டாக வந்திருக்கும் ராசாக்கண்ணுவைப் பார்க்கிறார் மானேஜர்.

"ஏய்.... ராசாக்கண்ணு, என்டா நாழி? கூலி மட்டும் கருக்கா வாங்கறேஇல்லே? இந்த மாதிரி வந்தா ஒண்ணும் நடக்காது... ஆமா... சொல்லிப்பிட்டேன்...."

"அதில்லே சார்...."

"சரி...சரி... போடா, போயி வேலையெப்பாரு.

"அடேயப்பா, இந்த நொள்ளைக் காசு மூணு ரூபாயிக்கு அதிகாரத்தைப் பாரு... கூலி! தூ!....மானங் கெட்டபசங்களா! இருங்கடா..! கேப்மாறிங்களா..! ஒங்களுக்கும் ஒரு நாளு வருது.." என்று முணுமுணுத்துக்கொண்டே வேலையில் முனைகிறான்.

அவனும் என்றோ ஒரு நாளை எதிர்பார்க்கிறானு? அது எந்த நாள்?

அவனுக்கு என் அத்தனை சலிப்பு?

அன்று திங்கட்கிழமை!

இன்னும் ஒரு வாரத்திற்கு உழைத்தால், அவள் சொல்வது போல், 'நொள்ளைக் காசு மூணு ரூபாய்' கிடைக்கும். சனிக்கிழமை வீட்டுக்குப் போகும் போது வழிச் செலவுக்குக்கூட காண்பதில்லை அது.

அது நொள்ளைக் காசுதானே? அல்லாமல், வேறென்ன? மனுஷனுக்குச் சலிப்பு வாராமல் என்ன செய்யும்? வரும்; நன்ருக வரும்; வரத்தான் வரும்! வெள்ளிக்கிழமையன்று தானுகவே போகும், "சீ! என்ன பொழைப்பு?...."என்று சலித்துக் கொள்கிருன் ராசாக்கண்ணு.

ஆனுல் அந்தச்சலிப்பு வாழ்வை வெறுத்த சாக்குருவி வேதாந்தச் சலிப்பல்ல! வாழவேண்டுமென்ற துடிப்பில் பிறக்கும் வேகம்! வாழ விடாமல் பின்னுக்கிழுக்கிழுக்கும் 'வாழ்வோரி'ன் மீது கொண்ட வெறுப்பு!

இல்லையா? ★

### எது ஜனநாயகம்?

"நான் எவ்வாறு அடிமையாக இருக்க மாட்டேனே, அது போலவே எஜமானனுகவும் இருக்க மாட்டேன். ஜனநாயகத்தைப் பற்றிய எனது கருத்து இதுதான். இதிலிருந்து எந்த அளவுக்கு வித்தியாசங்கள் ஏற்படுகிறதோ அந்தஅளவுக்கு ஜனநாயகம் குறைபடுகிறது என்றே அர்த்தம்"

— ஆப்ரகாம் லிங்கன்

"நாடு என்ப நாடா வளத்தன" என்று நாட்டுக்கு இலக்கணம் வகுக்கிறார் திருவள்ளுவர். தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமான இரும்பும் எஃகும் நம் நாட்டில் ஏராளமாகக் கிடைப்பதற்கு வாய்ப்புண்டா? அல்லது நாடும் 'வள'த்ததுதானா நம் நாடு?... எஃகின் வரலாற்றைக் கூறுவதோடு, நம் நாட்டுத் தொழில் வளர்ச்சியைப் பற்றியும் கூறுகிறது இந்தக் கட்டுரை.

# புதை பொருட் செல்வம்

**நா. வானமாமலை**

"இரும்பைக் காய்ச்சி
உருக்கிடுவீரே
இயந்திரங்கள் வகுத்திடு
வீரே"

என்று பாரதி நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே முழக்கம் செய்தார். 'மக்களது தேவைப் பொருள்களனைத்தையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்தல் வேண்டும்; அயல் நாடுகளை நம்பியிருந்தால் நம் செல்வம் வளராது' என்று பாரதி நமக்குப் போதித்தார்.

பாரதி ஏன் அவ்வாறு பாடினார்? இது இரும்பு யுகம். அவ்வாறு சொல்வதுகூட முழு உண்மையல்ல; இது எஃகு யுகம். நமது தேவைப் பொருள்களில் மிகப்பல இயந்திரங்களின் உதவியால் செய்யப்படுகின்றன. உதாரணமாக நீங்கள் அணியும் உடைகளைப் பாருங்கள். பஞ்சைக் கோது நீக்குவதும், நூலாக நூற்பதும், ஆடையாக நெய்வதும், சட்டையாகத் தைப்பதும் எவற்றின் உதவியால்? இயந்திரங்களின் உதவியால்தான். தையல் இயந்திரத்தையும், நூற்பு இயந்திரத்தையும், நெசவு இயந்திரத்தையும் எவற்றின் மூலம் செய்கிறார்கள்? இயந்திரத்தின் தாயும் இயந்திரமே. இயந்திரங்களைச் செய்யும் இயந்திரங்கள் மூல இயந்திரங்கள் என்று அழைக்கப்படும். இவ்வாறு நாம் உபயோகிக்கும் ஆயிரக்கணக்கான பொருள்களைச் செய்யும் இயந்திரங்களை, மூல இயந்திரங்கள் செய்து தருகின்றன. இவை யாவும் எஃகினால் ஆனவை.

அதுமட்டுமல்ல. நாம் பிரயாணம் செய்யவும், பொருள்களைத் தேவையான இடங்களுக்கு விரைவில் அனுப்பவும், லாரிகள், மோட்டார் வண்டிகள், ரயில்கள், கப்பல்கள் பயன்படுகின்றன அல்லவா? இவற்றையெல்லாம் செய்ய இரும்பும் எஃகும் தேவை. ரயில் தண்டவாளங்கள் எஃகினால் ஆனவை. கப்பல் தகடுகள் எஃகுத் தகடுகள்.

சாமான் ஏற்றும் குட்ஸ்-வண்டிகள் எஃகுத்தகடுகளினால் செய்யப்பட்டவை. இவற்றை இயக்கும் எஞ்சின்கள் எஃகினால் செய்யப்பட்டவை. இன்று பல அணைத்தேக்கங்கள் கட்டப்படுகின்றன அல்லவா? அவற்றின் அஸ்திவாரமும், சுவர்களும் கான்கிரீட்டினால் செய்யப்பட்டவை. கான்கிரீட்டில் இரும்புக் கம்பிகள் உள்ளன. இன்று கிராமங்களில்கூட மின்சார விளக்குகள் எரிகின்றன அல்லவா? மின்சாரத்தை வழிப்படுத்தும் கம்பிகளைத் தாங்கி நிற்கும் தூண்கள் எஃகுத் தூண்கள். சுருங்கச் சொன்னால் எந்தப் பொருளை உற்பத்தி செய்யும் தொழிலானாலும் இரும்பும் எஃகும் இடம் பெறுவதில்லை. எல்லாத் தொழில்களுக்கும் மூலத் தொழில், தாய்த் தொழில், எஃகு உற்பத்தித்தொழிலே.

இரும்பும் எஃகும் உற்பத்தி செய்வதற்குத் தேவையான இயற்கைப்பொருள்கள் எவை? இந்தியாவில் அவை கிடைக்குமா? கிடைக்காவிட்டால் குழந்தை சந்திரன் வேண்டும் என்று அழுத கதையாகப் போகுமல்லவா, பாரதியின் வாக்கு? இதோ தொழிலுற்பத்தி மந்திரி கனம். கே. சி. ரெட்டி அவர்கள் கூறியுள்ளதைப்படியுங்கள்: "எஃகு உற்பத்திக்குத் தேவையான இரும்புத்தாதுவும், நிலக்கரியும் இந்தியாவில் ஏராளமாக பூமியில் புதையுண்டு கிடக்கின்றன. அவை உலகிலேயே உயர்தரமான தாதுவுக்கும், நிலக்கரிக்கும் நிகரானவை. சுமார் 500 கோடி டன் உயர்தர இரும்புத்தாது இந்தியாவில் கிடைக்குமென்று தரை இயல் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். நிலக்கரி 75 கோடி டன் கிடைக்கக் கூடும். '7 வருஷங்களுக்குள் வருஷமொன்றுக்கு 30 லட்சம் டன் எஃகு உற்பத்திக்கு வழி செய்ய வேண்டுமென' சர் பத்மாஜி கின்வாலா சொல்வது மிகவும் சரியே."

இரும்பு, இயற்கையில் இரும்பாகக் கிடைக்கவில்லை. இரும்பின்மீது துருப் படர்ந்திருப்பதைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? துருவைப்போலப் பூமிக்கடியில் இரும்புத்தாது அகப்படுகிறது. பீஹாரிலும், அஸ்ஸாமிலும், தமிழ் நாட்டில் சேலத்திலும் இது கிடைக்கிறது. தாதுவில் இரும்போடு, காற்றிலுள்ள ஆக்ஸிஜன்(பிராணவாயு)சேர்ந்திருக்கிறது. தவிர மண், கல் போன்ற வேறு மாசுகளும் உள்ளன. இவற்றை நீக்கி, தாதுவைச் சுத்தப்படுத்திப் பின்னர், பிராணவாயுவை நீக்க வேண்டும். கரி எரியும் பொருள்; பிராணவாயு எரிய உதவும் வாயு. கரியையும், தாதுவையும் சேர்த்து பிரம்மாண்டமான உலைகளில், குழாய்களின் மூலம் காற்றைச் செலுத்தி உருக்கினால் இரும்பு உருகி வெளியாகிறது. வேறு மாசுகளை நீக்க சுண்ணாம்புக்கல்லை, தாதுவோடு சேர்க்கிறார்கள். இவ்வாறு கிடைக்கும் இரும்பில் சிறிதளவு கரி சேர்ந்திருக்கும். கரி சேர்ந்திருந்தால் இரும்பு கண்ணாடிபோல உடைந்து விடும். வலுவிருக்காது; அழுத்தம் தாங்காது. கரி முழுவதையும் நீக்கி விட்டால் இரும்பு வளையும்; மிருதுவாகிவிடும். இத்

தகைய இரும்பைத் தேனிரும்பு என்பார்கள். சங்கிலி, ஆணி முதலியவை இதனால் செய்யப் படுகின்றன.

எஃகு செய்வது எப்படி? எஃகு தேனிரும்பிலிருந்து செய் யப்படும். உலையிலிருந்துகிடைக் கும் உருகிய இரும்பை மண் கூஜாவடிவிலுள்ள மிகப்பெரிய பாத்திரத்தில் ஊற்றுவார்கள். பாத்திரத்தினடியிலுள்ள குழாய்கள் மூலம்காற்றை, திரவ இரும்பினுள் செலுத்துவார்கள் அது குமிழ் குமிழாய் மேலே வரும். அப்போது காற்றிலுள்ள பிராண வாயு கரைந்திருக்கும் கரியை எரித்து விடும். கரி முழு தும் நீங்கிவிட்டால் தேனிரும்பு கிடைக்குமல்லவா? இது வளையக்கூடியதென்று முன்பே சொன்னேன். உறுதியானதாக வும், அழுத்தம் தாங்கக் கூடியா கவும், கூர்மையான முனையுள்ள தாய் ஆக்கத்தகுதியானதாகவும் இரும்பு இருந்தால்தான் இயந் திரங்கள் செய்ய அதை உபயோகிக்க முடியும். இதற்கு குறிப்பிட்ட அளவு கரி அதில் இருக்கவேண்டும்; அதிகமாக இருக்கக் கூடாது. மாங்கனீஸ் என்ற உலோகமும் இரும்பைக் கடினமாக்குகிறது. இவ்வளவு இரும்புக்கு இவ்வளவு கரி, மாங்கனீஸ் சேர்க்க வேண்டு மென்ற கணக்குப்படி கரியும், மாங்கனீசும் சேர்ந்த 'ஸ்பீஜிலி ஸன்' என்ற பொருள் பாத்திரத் தினுள் சேர்க்கப்படுகிறது. இவ்வாறு உண்டாகும் உருகிய எஃகுத் திரவத்தை வெளியே ஊற்றி வேண்டிய உருவம் கொடுப்பார்கள். இதுதான் எஃகு. இம்முறையைக் கண்டு பிடித்தவர் பெயர் பெஸ்ஸிமர் என்பது. தாதுக்களில் சிலவேளை நம் எலும்பிலுள்ள ஒருபொருள் அதாவது பாஸ்பேட்டுகள் இருக்கலாம். இருந்தால் இம் முறை ஆகாது. கரி பாஸ்பேட்டு களை நீக்காது. அதற்குத் திறந்த உலைகளில் சுண்ணும்பு தடவி, உலையிரும்போடு நிலக்கரி சேர்த்து உஷ்ணக் காற்றை மேலே செலுத்துவார்கள். இரும்பு உருகும்போது பாஸ்பேட்டுகளைச் சுண்ணும்பு இழுத்துக்கொள்ளும். இரும்பு கரியோடு சேர்ந்து எஃகாகும். இம்முறையைக் கண்டுபிடித்த வர் கில்கிரைஸ்ட் என்ற ஆங்கில விஞ்ஞானி.

இப்பொழுது எஃகோடு பல உலோகங்களை வெவ்வேறு அளவில் சேர்த்து நூற்றுக் கணக்கான கலப்பு உலோகங் கள் செய்கிறார்கள். அவற்றில் பல ராணுவ தளவாடங்கள் செய்யவும், ஆயுதங்கள் செய்யவும் பயன்படுகின்றன.

முதலாளித்துவம் வளர்ச்சி யுற்ற பின்னர் எஃகுத் தொழில் தோன்றியது. அது எல்லாத் தொழில்களுக்கும் தேவையான தால் மிகப் பெரும் அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டிய தாயிற்று. மிகப்பெரிய தொகையும் மூலதனமாக வேண் டியிருந்தது. ஆகையால் சிறு முதலாளிகள் போட்டியில் நிலைக்க முடியாமல் அழிந்து மிகப் பெரிய முதலாளிகள் தலை தூக்கினர். அவர்கள் ஒன்று சேர்ந்து ஏகபோகங்களை அமைத்துக்கொண்டனர். 'கார் னஜி' (அமெரிக்க எஃகுத் தொழில் ஸ்தாபனம்) ஷ்னெய் டர் (ஜெர்மனி), கிரப் (ஜெர் மனி) போன்ற மிகப் பெரிய

எஃகுத்தொழில் ஸ்தாபனங்கள் எஃகு உற்பத்தியிலும், வியாபாரத்திலும் உலகம் முழுவதும் ஆதிக்கம் பெற்றன. உலகில் (சோஷலிஸ நாடுகளைத் தவிர) எப்பகுதியில் எஃகுத் தொழில் ஆரம்பித்தாலும், தங்கள் மூலதனத்தையும், தொழிலறிவையும், பயன்படுத்தி அவற்றில் ஆதிக்கம் செலுத்த அவை முயலுகின்றன. இப்பெரிய ஏகபோகங்கள் உற்பத்தி செய்யும் எஃகில் முக்கால் வாசிக்குமேல் ராணுவ தளவாடங்கள் செய்யவே பயன்படுத்தப்படுகின்றன. ராணுவ தளவாடங்களின்மூலமே அவை கொழுத்த லாபத்தைப் பெறுகின்றன. 'சமாதானம்' என்ற சொல்லே அவற்றின் முதலாளிகளுக்கு விஷம். காரணம் சொல்லாமலே விளங்குகிறதல்லவா?

இந்தியாவில் உற்பத்தியாகும் இரும்பு, எஃகின் அளவு 18,30,000 டன். நாம் மேற்குறிப்பிட்ட ஏகபோகங்களிலிருந்து இறக்குமதி செய்யும் அளவு, 1951ல் 1,77,000 டன்; 1952–1953ல் 1,96,000 டன்; 1953–1954ல் 2,47,000 டன். இதுதவிர அமெரிக்க 'உதவி' மூலம் நாம் பெற்ற எஃகு, இரும்பின் அளவு சுமார் ஒரு லட்சத்து இருபதினாயிரம் டன். வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்து கொண்டிருக்கிறோம். வருஷா வருஷம் அதிகப்படியான இரும்பும் எஃகும் இறக்குமதியாகிறது. மேற்குறித்த ஏகபோகங்கள் நமது தொழிலுக்கு 'உதவி'யளிக்க பல நிபந்தனைகள் போடுகின்றன; தொழிலில் பங்கு கேட்கின்றன; அநியாய வட்டி கேட்கின்றன; நிர்வாகத்தில் பங்கு கேட்கின்றன; கொள்ளை லாபத்தை ஏற்றுமதி செய்து கொள்ள வசதி கேட்கின்றன. அவற்றின் 'உதவி'யால் பெறும் நன்மை "கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கிய" கதைதான்.

சோவியத் நாடும் உதவி தர முன்வந்திருக்கிறது. இத்தகைய நிபந்தனைகளை அது போடவில்லை. "இந்திய மக்களின் நட்பு ஒன்றே எங்களது லாபம்" என்று சோவியத் நிபுணர்கள் கூறுகிறார்கள். தன்னலமற்ற இது போன்ற உதவியை மேன்மேலும் பெற்று இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவோமா? இயந்திரங்கள் வகுத்திடுவோமா? ★

O

**உண்மை**

"உண்மையை மூடி மறைத்து, குழி தோண்டிப் புதைத்தீர்களானால், அந்த உண்மை முளைத்துக்கிளைத்து விம்மி வளர்ந்துவிடும்; அந்தப் பிரம்மாண்டமான வளர்ச்சியினால், உண்மை வெடித்து வெளிக்கிளம்பும்; அப்படி அது வெடித்துக்கிளம்பும்போது அதன் வேகத்தைத் தடை செய்யும் சகல சக்திகளுமே தவிடுபொடியாகிவிடும்!"

— எமிலி ஸோலா.

★ ருஷ்யச் சிறுகதை

# லாட்டரிச் சீட்டு

## ஆண்டன் செஹாவ்

**********************************************

போட்டிப் பரிசுகள் பெருத்துவிட்ட காலம் இது; குறுக்கு வழியில் குபேரனுக முயலும் மனிதர்களின் மனப்பான்மையில் தோன்றும் ஆசா பாசங்களும் கனவுகளும்தான் எத்தனை? ஆனல் அதிருஷ்டக் கனவிலேயே வாழும் அவர்களது ஆசாபாசங்கள் அஸ்திவாரமற்றுக் கலகலத்துச் சரியும் போதோ?— வாழ்க்கையே அவர்களுக்கு வெறுத்துவிட்டால்கூட ஆச்சர்யப் படுவதற்கில்லை. அதிருஷ்டத்தை எதிர்பார்க்கும் மனப்பான் மையை அழகாக உருவாக்கியுள்ளார் பிரபல கதாசிரியர் செஹாவ்.

**********************************************

ஐவான் டிமிட்ரிச்சுக்கு வருஷ வரும்படி ஆயிரத்து இருநூறு ரூபிள்கள். இந்தச் சிறுதொகையைக் கொண்டு, அவன் தன் குடும்பத்தைச் செட்டும் கட்டுமாக நடத்திவந்தான். அன்றிரவு அவன் சாப்பிட்டு முடிந்ததும், வழக்கம்போல் அன்றைய பத்திரிகையைப் படிப்பதற்காக உட்கார்ந்தான்.

"இன்று பத்திரிகையைப் பார்க்கவே மறந்து போனேன்!" என்று சாப்பாட்டு மேஜையைச் சுத்தம் செய்து கொண்டிருந்த அவன் மனைவி அவனிடம் கூறினுள்: "லாட்டரிப் பரிசு விவரங்கள் அதில் வந்திருக்கின்றனவா என்று கொஞ்சம் பாருங்களேன்!"

"ஆமாம். வந்திருக்கிறது. சரி உன் சீட்டின் நம்பர் என்ன?" என்று கேட்டான் ஐவான்.

"9499-ம் வரிசையில் 26-ம் நம்பர்".

ஐவானுக்கு லாட்டரிச் சீட்டு மூலம் கிட்டும் அதிருஷ்டத்தில் நம்பிக்கையில்லை; எனவே பரிசு பெற்ற எண்களைத் துருவிப் பார்ப்பதில் அவனுக்குச் சிரத்தை இல்லை. எனினும், அன்றைய இரவில் அவனுக்குப் பொழுது போக வேறு வேலை இல்லையாதலால், பத்திரிகையில் வந்திருந்த எண்களின் மீது விரல்களை ஓட்டிப் பார்க்கத் தொடங்கினுன். அவனது சந்தேக புத்தியைக் கிண்டல் செய்வது போல் இரண்டாவது வரிசையிலேயே அவன் 9499-ம் நம்பரைக் கண்டு விட்டான். அதைக் கண்டதும் அவன் தன் கண்களையே நம்ப மாட்டாமல், கையிலிருந்த பத்திரிகையைக் கைசோர நழுவ விட்டான். அவனது அடிவயிற்றில் ஏதோ ஒரு இனிமையான, இன்பகரமான சிலிர்ப்புணர்ச்சி திடீரென்று குளிர்ந்தோடிப் பரவுவதை அவன் உணர்ந்தான்.

"மாஷா!" என்று கம்மிப் போன குரலில் அவன் தன் மனைவியைக் கூப்பிட்டான்:

''9499-ம் வரிசைவந்திருக்கிறது, பாரேன்!''

வியப்பும் திகைப்பும் நிறைந்த அவனது முகத்தைக் கண்டதும், அவனது மனைவி மாஷாவும் தன் கணவன் தன்னிடம் விளையாடவில்லை என்று உணர்ந்துகொண்டாள்.

''9499-ம்வரிசையா?'' என்று அவளும் வியந்து கூறினாள்; அவள் முகம் வெளிறியது; கையில் மடித்து வைத்திருந்த மேஜை விரிப்பு பிடி நழுவி மேஜை மீது விழுந்தது,

''ஆமாம்... ஆமாம்... இதோ பாரேன்!''

''நம்பர் 26 இருக்கிறதா?''

''பொறுபொறு...இருக்காது என்றே நினைக்கிறேன்...எப்படியும் 9499-ம் வரிசை மட்டும் இருக்கிறது... தெரிகிறதா?''

சிறு குழந்தையின் முகத்துக்கு நேரே பிரகாசமான பொருளைக் காட்டினால், அந்தக் குழந்தை எப்படிக் கண்களைக் கூசி முகத்தைச் சுழிக்குமோ, அதுபோல் ஐவான்முகத்தைச் சுழித்தவாறு அர்த்தமற்றுப் புன்னகை செய்தான்; அவனுடைய மனைவியும் பதிலுக்குப் புன்னகை புரிந்தாள்.பரிசுபெற்ற வரிசையைக் கேட்டவுடனேயே அவள் ஆனந்த பரவசமாகி விட்டாள்: பரிசு பெற்ற எண் எது என்பதை அறிந்துகொள்ளவே அந்தக் கணத்தில் மறந்து விட்டாள்.குருட்டாம்போக்கில் அதிருஷ்டம் கிட்டி விட்டதா என்று எண்ணியெண்ணி, அந்த எண்ணச் சுழலின் இன்ப லஹிரியிலேயே சிக்கி மயங்குவதில் தான் எத்தனை இன்பம்? எத்தனை பரவசம்?

''இது தான் நமது எண் வரிசை. எனவே நமக்கும் ஒரு வேளை பரிசு கிடைத்திருக்கலாம். கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது!'' என்று நெடுநேர மௌனத்துக்குப் பின்னர் சொன்னான் ஐவான்.

''சரி சரி. நம்பரைப் பாருங்களேன்!'' என்று கெஞ்சினாள் அவள்.

''கொஞ்சம் பொறேன். நாம் ஏமாறுவதற்கு இன்னும் நேரம் இருக்கிறது. இந்த எண்வரிசை இரண்டாவது பிரிவிலேயே வந்து விட்டது. பரிசுத் தொகை எவ்வளவு தெரியுமா? எழுபத்தி ஐயாயிரம் ரூபிள்கள். எழுபத்தி ஐயாயிரம் என்றால் வெறும் பணம் தானா? இல்லை அது மாபெரும் சக்தி;மாபெரும் மூலதனம்! சீக்கிரமே நான் விவரங்கள் முழுவதையும் பார்க்கிறேன். நிச்சயம் அதில் நம்பர்26-ஐக் கண்டுபிடிப்பேன். நாம் ஏன் ஜெயிக்கக்கூடாது?''

கணவனும் மனைவியும் தம்மை மறந்த இன்பஜுரத்துக்கு ஆளாகி ஒருவரை யொருவர் நோக்கிப் புன்னகை செய்து கொண்டார்கள்; வாய்விட்டுச் சிரித்துக்கொண்டார்கள். அந்தப் பரிசுத் தொகை எழுபத்தி ஐயாயிரம் ரூபிள்களும் தமக்கு ஏன்கிடைக்கவேண்டும் என்பது பற்றி அவர்களால் கனவு கண்டிருக்கவும் முடியாது; வாய் விட்டுச் சொல்லவும் முடிந்திருக்காது. அவர்கள் மனத்தில் இருந்ததெல்லாம் 9499, 75000 என்ற எண்கள் மட்டும்தான்.

பத்திரிகையைக் கையில் எடுத்துக்கொண்டு ஐவான் தன்னிடத்தை விட்டு எழுந்து

அந்த அறையில் மேலும் கீழும் நடக்க ஆரம்பித்தான்.

''நாம் மட்டும் ஜெயித்திருந்தோமானல், நமக்கு மட்டும் பரிசு விழுந்திருக்குமானல்!'' என்று கூறத் தொடங்கினன் அவன்: ''பரிசு விழுந்திருந்தால் நமக்கு இனிமேல் ஒரு புதிய வாழ்க்கையே ஆரம்பமாகி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். லாட்டரிச் சீட்டு உன்னுடையதுதான். அந்தச்சீட்டு மட்டும் என்னுடையதாயிருந்து, எனக்குப் பரிசும் கிடைத்து விட்டால், நான் என்ன செய்வேன் தெரியுமா?... முதன் முதலில் இருபத்தி ஐயாயிரம் ரூபிளில் ஒரு பெரிய பங்களா வாங்குவேன். அப்புறம் இன்னொரு பத்தாயிரத்துக்கு பங்களாவுக்கு வேண்டிய மேஜை நாற்காலிகள், தட்டுமுட்டுச் சாமான்கள் முதலியன வாங்குவேன்; பிரயாணத்துக்கும் கடன் பாக்கிக்கும் செலவு செய்வேன்...மீதி நாற்பதாயிரத்தையும் ஒரு பாங்கில் போட்டு வைத்து வட்டி வாங்கிச் சம்பாதிப்பேன்!''

''ஆமாம். பங்களா! பங்களா வாங்கினல் நன்ருய்த்தான் இருக்கும்!'' என்று அந்த நினைவிலேயே கறங்கிச் சுழன்றவாறு தலையை ஆட்டி யசைத்துக் கொண்டே சொன்னள், அவன் மனைவி.

''துலா அல்லது ஓரியோல் மாகாணத்தில்தான் எங்காவது ஒரு இடத்தில் வாங்க வேண்டும்....''

ஐவானின் கற்பனையில் பல் வேறு விதமான சித்திரங்கள் குவிந்து தோன்றின; அந்தச் சித்திரங்கள் ஒன்றுக்கொன்று மிஞ்சுவதாகவும், இன்பமும் பரவசமும் தருவதாகவும் தோன்றிக்கொண்டிருந்தன. அந்தக் கற்பனை லோகத்தில் அவன் உண்டு கொழுத்த சுகஜீவியாகக் காட்சியளித்தான். பனிக்கட்டியைப் போன்று குளிர்ந்திருந்த வேனிற் காலப் பழரசத்தைப் பருகிவிட்டு, தன் வீட்டுத் தோட்டத்திலுள்ள எலுமிச்சை மர நிழலில் ஆயாசம் திர மல்லாந்து படுத்துக்கிடக்கிருன். உஷ்ணம் அதிகமாயிருக்கிறது...சிறுவனும், சிறுமியுமான அவனுடைய குழந்தைகள் இரண்டும் அவனருகே விளையாடிக் கொண்டிருக்கின்றன; அவை இரண்டும் மணலைத் தோண்டியோ அல்லது புல்லந்தரிசிலுள்ள வீட்டில் பூச்சிகளைப் பிடித்தோ விளையாடுகின்றன... அவனுக்குத் தூக்கம் கண்ணைச் சொக்குகிறது... மனம் நிச்சிந்தையாக இருக்கிறது... இன்றோ, நாளையோ அல்லது இனிமேல் என்றுமோ தான் ஆபீசுக்கே போகவேண்டியதில்லை என்ற உணர்வு மட்டுமே அவன் மனத்தில் நிரம்பி நிற்கிறது...

''ஆமாம். பங்களா வாங்குவது நல்ல யோசனைதான்!'' என்று மீண்டும் சொன்னள் அவன் மனைவி. அவளும்கூட அந்த அதிருஷ்டக் கனவின் மயக்கத்தில் ஆழ்ந்து விட்டாள் என்பதை அவளுடைய குரலின் பாவமே தெரிவித்தது.

ஐவான் இலையுதிர்காலத்தையும், இலையுதிர்கால மழையையும், குளிர்நடுக்கும் இரவுகளையும் கற்பனை பண்ணத் தொடங்கினன். இலையுதிர்காலத்தில், அவன் தன் பங்களாத் தோட்

டத்தின் வழியாக வெகுதூரம் நடந்து சென்று, ஆற்றங்கரைக்குச்செல்வான். ஒரு பெரிய கோப்பை நிறைய ஒட்கா மதுவைக்குடிப்பான்; பின்னர் உப்பிட்ட பொறியலைத் தின்பான்; பின்னர் மீண்டும் ஒரு முறை ஒரு கோப்பை மதுவைக் குடிப்பான்... அப்புறம், அவன் சோபாவின் மீது நீட்டி நிமிர்ந்து சாவதானமாகப் படுத்துக் கொண்டு, படங்கள் நிறைந்த ஏதாவது ஒரு பத்திரிகையை எடுத்து, மெல்லப் புரட்டிப் பார்ப்பான். அல்லது அந்தப் பத்திரிகையைக்கொண்டு தன் முகத்தை மூடிக்கொண்டு, தன் சட்டைப் பொத்தான்களைக் கழற்றி விட்டுவிட்டு, சொக்கி வரும் தூக்கத்தில் ஆழ்ந்து விடுவான்......

ஆனால், இலையுதிர்காலமென்றால், பொழுதும் கும்மிட்டு இருண்டு போய்விடும். இரவும் பகலும் ஓயாத மழை பெய்யும்; மொட்டை மரங்களெல்லாம் சொட்டுச் சொட்டாய்க் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கும்; காற்றும் கனத்துக்குளிர்ந்து வீசும். நாய்கள், குதிரைகள், கோழிகள் எல்லாமே குளிர் தாங்கமுடியாமல் கூனிக் குறுகிக் கிடக்கும்; வீட்டுக்கு வெளியிலோ நடக்கக்கூட முடியாதவாறு தெருவெல்லாம் சேறு படிந்திருக்கும்;... நாள் கணக்கில் வெளியேபோக முடியாது... நாள் கணக்காய் வீட்டுக்குள்ளேயே மேலும் கீழும் நடந்து நடந்து அலுப்பதும், பனித்திரை மூடிய ஜன்னலையே பார்த்துக் கொண்டிருப்பதும் தான் நடக்கக் கூடிய காரியங்கள். சே! எவ்வளவு மோசமான பருவம்!......

ஐவான் டிமிட்ரிச் திடீரென்று நின்றான்; தன் மனைவியை ஏறிட்டு நோக்கினான்.

"இதோபார், மாஷா! நான் வெளிநாடு செல்ல விரும்புகிறேன்!" என்றான்.

'எங்காவது ஒரு அயல் நாட்டுக்கு... பிரான்சுக்கோ, அல்லது இத்தாலிக்கோ அல்லது இந்தியாவுக்கோ... எங்காவது ஒரு வெளிநாட்டுக்குச் சென்று வந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்' என்று எண்ணத்தொடங்கினான் ஐவான்.

"எனக்கும் கூட, வெளிநாட்டுக்குச் சென்றுவர விருப்பம் தான்!" என்றாள் அவன் மனைவி: "சரி, நமது சீட்டின் நம்பர் வந்திருக்கிறதா, பாருங்கள்!"

"பொறு, பொறு......"

மீண்டும் தன் கற்பனை வெள்ளத்தில் மூழ்கியவாறே அவன் அறைக்குள் மேலும் கீழும் நடக்கத் தொடங்கினான். அவன் வெளிநாடு செல்லும்போது, அவனுடைய மனைவியும் அவனுடன் வந்தால் என்ன? பிரயாணம் செய்வதென்றால் தன்னந்தனியாகச் செல்லவேண்டும்; அல்லது அழகும் பருவமும் சொகுசும் வாய்ந்த பெண்ணின் துணையோடு செல்லவேண்டும். அதுதான் இன்பம்! எப்போது பார்த்தாலும் தன் குழந்தைகளைப் பற்றியே எண்ணுவதும் பேசுவதுமாகவுள்ள பெண்ணோடும், எடுத்ததற்கெல்லாம் துட்டைக் கணக்குப்பார்த்துச் செலவழிக்கும் பெண்ணோடும் போவதிலே என்ன இன்பம் இருக்க முடியும்?..எண்ணற்ற மூட்டை

முடிச்சுக்களோடும், கூடை களோடும், அவன் தன் மனைவி யோடு ரயிலில் போய்க்கொண் டிருப்பதாகவே கற்பனை செய் யத் தொடங்கிவிட்டான் ...... அவள் எதையோ எண்ணிப் பெருமூச்சு விடுகிருள்... ரயில் பிரயாணம் அவளுக்குத் தலை வேதனை தந்துவிட்டதாகப்புகார் கூறுகிருள்...... எவ்வளவோ பணத்தை விரயமாக்கி விட்ட தாகச் சொல்லிச் சலித்துக் கொள்கிருள்... ஸ்டேஷன்கள் தோறும் அவன் ரொட்டிக்காக வும், வெண்ணெய்க்காகவும், தண்ணீருக்காகவும்இடையருது பிளாட்பாரங்களில் ஓடியாடித் திரிகிருன்... அவளோ அவனை ஒரு நல்ல சாப்பாட்டைக்கூட வாங்க விடாது தடுக்கிருள்... சாப்பாட்டின் விலை அதிக மாம்!...

''ஒவ்வொரு காசு செலவழி யும்போதும், அவள் ஒரு மூச் சுக்கு மூக்கால் அழுவாள்!'' என்று அவன் தன் மனைவியை ஓரக்கண்ணுல் பார்த்தவாறே தன்னுள் சிந்தித்தான்: ''என்ன இருந்தாலும் லாட்டரிச் சீட்டு அவளுடையதுதான். என்னு டையது அல்ல! மேலும், அயல் நாட்டுக்கு அவள் வருவ தால் என்ன பயன் விளையப் போகிறது? அவளுக்குத்தான் என்ன பிரயோஜனம்? அவளைக் கூட்டிக்கொண்டு போனுல், அவள் நாங்கள் தங்கியுள்ள ஹோட்டலுக் குள்ளேயே அடைந்து கிடப்பாள்; என் னையும் அப்புறம் இப்புறம் அசையவிடமாட்டாள்!...''

தன் மனைவிக்கு வயதாகி விட்டதென்றும், அவள் ஆடி யோடி அமர்ந்து விட்டாள் என்றும், சமையலறைக் குள்ளேயே பழகிப் பழகி அத னேடேயே சமாப்தியாகி விட் டாள் என்றும், ஆனுல் அதே சமயம் தான் மட்டும் இன்னும் இளமை குலையாமலும், கட்டு விடாமலும், இன்னெரு கல்யா ணம் பண்ணிக்கொள்ளக்கூடிய தகுதியோடும் இருப்பதாகவும், ஐவான் உணரத் தொடங் கினுன்; தன் வாழ்நாளி லேயே முதன் முறையாக அந்த உண்மையை உணர்ந் தான்.

''வாஸ்தவத்தில், இதெல் லாம் அர்த்தமற்ற அசட்டுத் தனம்தான்!'' என்று மீண்டும் நினைவுகூரத் தொடங்கினுன். ''அவள் ஏன் அயல் நாட்டுக்கு வரவேண்டும்? நேப்பிலிஸ் ஆனு லென்ன, கிளின் ஆனுலென்ன? உண்மையில், அவளுக்கு எல் லாம் ஒன்றுதான். அவள் என் போக்கிற்குத் தடையாகத்தான் இருப்பாள்...அதை நான் இப் போதே உணர முடிகிறது... எல்லாப் பெண்களையும் போல், அவளும் கையிலே பணம் வந்த வுடன் அதைப் பத்திரமாகப் பூட்டி வைத்துக்கொள்ளத் தான் போகிருள்...அவள் தன் சொந்த இன பந்துக்களைத் தான் கவனிப்பாள்... என் விஷ யத்திலே ஒற்றைக் காசை இழப்பதென்ருலும் மூக்கால் அழுது தீர்ப்பாள்!''

ஐவான் அவளுடைய இன பந்துக்களைப்பற்றிச் சிந்தித் தான். அவளுக்குப் பரிசு கிடைத்து விட்டது என்று தெரிந்து விட்டாலே போதும். இழவெடுத்த அந்த இன பந்துக் களெல்லாம்—அண்ணன் மாரும், தங்கச்சிமாரும், மாமனும், மச்

சானும், அத்தையும் அம் மானும், — உடனே அவர்கள் வீட்டுக்குள் குடிவந்து விடுவார்கள்; பிச்சைக்காரக்கூட்டத்தைப் போல் சுற்றிச் சுற்றி வந்துகொண்டும், பல்லைக் காட்டி முகஸ்துதி பாடிக்கொண்டும் திரியத் தொடங்கி விடுவார்கள்.

ஐவான் தனது பந்து ஜனங்களைப்பற்றியும் எண்ணமிடத் தொடங்கினான். ஆனால், அவர்களது முகங்களை நினைத்ததுமே அவனுக்குத் திடீரென்று அருவருப்பை உணர்ச்சிதான் மனத்தில் தட்டியது.

அவனது மனைவியின் முகம் கூட, அவனுக்கு அருவருப்பைத் தரத் தொடங்கியது. அவன் அவளைப்பார்த்தான். புன்னகையோடு அல்ல; வெறுப்புடன் பார்த்தான். அவளும் அவனைத் திரும்ப நோக்கினாள். அவளுடைய பார்வையிலும் வெறுப்பும் கோபமும்தான் பிரதிபலித்தன. இப்போது அவள் மனத்திலும் பல பகற் கனவுகள், பல திட்டங்கள், பல யோசனைகள், பல கற்பனைகள் குடிகொண்டு விட்டன. தனது கணவனின் கனவுகள் என்ன என்பதையும் அவள் நன்கு ஊகித்து அறிந்து கொண்டாள்.

தன் மனைவியைத் திடுக்கிடச் செய்வதற்காக, ஐவான் கையிலிருந்த பத்திரிகையை உயர்த்திப் பிடித்தான்; பரிசுபெற்ற எண்களைப் பார்த்தான்; பிறகு வெற்றிப் பெருமிதம் தொனிக்க, உரத்த குரலில் வாசிக்கத் தொடங்கினான்.

''எண் வரிசை 9499. நம்பர் 46 தான் வந்திருக்கிறது. 26 இல்லை!

பகைமையும் நம்பிக்கையும் பனியாய் மறைந்தன. தங்கள் வீடு சுருங்கிச் சிறுத்து இருளடைந்துவிட்டது போலவும், தாங்கள் சாப்பிட்ட இரவுச் சாப்பாடு வயிற்றுக்குள்ளே ஜீரணமாகாமல் மந்தித்துப்போனது போலவும், அன்றைய இரவு விடியா இரவாகவும், அசையாத பொழுதாகவும் மாறிவிட்டது போலவும், ஐவானுக்கும் அவன் மனைவிக்கும் திடீரென்று ஒரு உணர்ச்சி ஏற்பட்டது...

ஐவான் மனப் புகைச்சலோடு எரிந்து விழத் தொடங்கினான்: ''இந்த அறைக்குள்ளே எப்போது நுழைந்தாலும், இதே இழவுதானா? எங்குபார்த்தாலும் குப்பை, கூளம், எச்சிற்பருக்கை, பழத்தோல் இவைதானா காலில் படவேண்டும்? இந்த வீட்டைச் சுத்தம் செய்யவா ஒழியவில்லை? என்றாவது இந்த அறையை ஒதுங்க வைத்தால்தானே! நான் எப்படியும் நாசமாய்ப் போனால் சரிதான். அப்படித்தானா? இங்கே இருக்கவே பிடிக்கவில்லை. இதோ போகிறேன். பக்கத்திலுள்ள ஏதாவதொரு மரத்தில் தூக்குப் போட்டுக் கொண்டு சாகத்தான் போகிறேன்!...'' ★

**அனுபவம்**

அனுபவம் என்பது புதுமாதிரியான உபாத்தியாயர்; அது பாடத்தைக் கற்றுக்கொடுத்தபின் பரீட்சையை வைப்பதில்லை; பரீட்சையின் மூலம் தான் பாடத்தைக் கற்றுக் கொடுக்கிறது!

அனுமந்தபுரம் மகாராஜா குரங்குகளையே மனிதனுக்க முயன்றார். அதன் காரணமாக குரங்குகளுக்கும் மனிதர்களுக்கும் போராட்டம் தொடங்கி விட்டது. ஆனால், மிருகங்கள் எவ்வளவுதான் புத்திசாலிகளா யிருந்தாலும், வாழ்க்கைப் போராட்டத்தில் மனிதன் தான் என்றுமே வெற்றி பெறுவான். பிரபல இந்திய எழுத்தாளரான முல்க் ராஜ் ஆனந்த் ஹாஸ்யச் சுவை ததும்ப எழுதியுள்ள இந்தக் கதை மேலே கண்ட உண்மையை ரசமாக எடுத்துக் கூறுகிறது.

# அனுமந்தபுரம் மகாராஜா

முல்க் ராஜ் ஆனந்த்

நம் நாட்டின் பெரும்பான்மையான கனவான்களைப் போலவேதான் அனுமந்தபுரம் மகாராஜா ராஜஸ்ரீ ராஜ ராஜேஸ்வர ராவ் அவர்களும் பழமையான தமது பாரம்பரியத்தைக் குறித்துப் பெருமித உணர்ச்சி கொண்டிருந்தார். நம் நாட்டுச் சீமான்களில் பலரும் தாம் சூரிய குலத்திலோ, சந்திர குலத்திலோ அல்லது முப்பத்துமுக்கோடித் தேவர்களில் யாரேனும் ஒருவரின் வம்சத்திலோ அல்லது பழங்காலத்து வீராதிவீரர்களின், மன்னாதி மன்னர்களின் பாரம்பரியத்திலோ பிறந்ததாகக் கருதிப் பெருமை கொள்வது வழக்கம். ஆனால் அனுமந்தபுரம் ஜமீன்தாரான ராஜராஜேஸ்வர ராவோ தமது வம்சாவளிப் பெருமைக்கே ஒரு நாகரிக மெருகு கொடுத்து விட்டார். ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் மனைவியான சீதா பிராட்டியைக் கவர்ந்து சென்ற ராவணாசுரனைத் தோற்கடிப்பதில் ராமபிரானுக்கு உறுதுணையாய் நின்ற சாக்ஷாத் ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமானின் நேரடியான வம்சபாரம்பரியத்தில் தோன்றியதே ராஜ ராஜேஸ்வரரின் குடும்பம் என்பது ஏற்கெனவே நிலைபெற்று விட்ட உண்மையாகும்; அனுமந்தபுர சமஸ்தானத்தின் அக்கிராம்பூலப் பிரஜை என்பதாலும், அந்த ஜமீனின் பழம்பெருங்குடி வழியில் தோன்றியவர் என்பதாலும் இந்த உண்மை லகுவில் நிலைபெற்று விட்டது.

ஆனால், ராஜ ராஜேஸ்வர ராவ் பங்களூரிலுள்ள விஞ்ஞானக் கல்லூரியில் கல்வி பயின்று வந்த காலத்தில் அவர் மனம் டார்வின், ஸ்பென்ஸர் போன்ற அறிஞர்களின் தத்துவார்த்தக் கொள்கைகளில் மிகவும் ஈடுபட்டு விட்டது. எனவே அவர் 'மேஜராகி' — (ஆம். ராஜராஜேஸ்வர ராவ் ஏழு வயது 'மைன'ராக இருக்கும் போதே, அவரது தந்தை காலமாகிவிட்டார்; அதனால், அவர் மேஜராகும் வரையிலும் 'கோர்ட் ஆப் வார்ட்'ஸின் பாதுகாப்பிலேயே இருந்து வந்தார்.) — தமது சமஸ்தானத்தின் பழம் புகழ் படைத்த அரியா

சனத்தின்மீது மகுடாபிஷேகம் செய்து மன்னராகி அமர்ந்த போதே, அவர் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சாசனப் பிரகடனத்தை வெளியிட்டார்; அந்தப் பிரகடனம் நமது நாட்டின் சரித்திரத்திலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்! அதாவது டார்வினின் பரிணும வளர்ச்சிக் கொள்கைப்படி, மனிதர்கள் அனைவரும் வாலில்லாக் குரங்குகளின் வம்சாவளியில் தோன்றியவர்களே என்ற உண்மையாலும், மகாராஜாவின் குடும்பமோ குரங்குகளுக்கெல்லாம் கடவுளான சாக்ஷாத் ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமானின் நேரடி வம்ச பாரம்பரியத்தில் தோன்றியது என்ற காரணத்தாலும், அவரது குடும்பமே உலகத்தின் மனித வர்க்கத்துக்கே ஆதிக் குடும்பம் எனவும், அதனுல் மனித குலத்தின் பரிணும மாற்றத்தைத் தொடர்பு படுத்திப் பார்ப்பதற்கு அகப்படாதவாறு இருந்த டார்வினின் 'காணுமற்போன தொடர்புக் கண்ணியை' (Missing link) இனங்காணத் தமது குடும்பமே கண்கண்ட அத்தாட்சி எனவும் அவர் அன்று பிரகடனம் செய்தார்.

மகுடதாரண வைபவத்தன்று இந்த மணிவாசகத்தை அவர் பிரகடனம் செய்தபோது ராஜ சபையில் பலரும் குழுமியிருந்தார்கள். ராஜ பரம்பரையைச் சேர்ந்த பிரமுகர்கள், சமஸ்தானத்தின் பெருநிலக் கிழவர்கள், 'எஸ்டேட்'டுகளின் மானேஜர்கள், அதிகாரிகள், அனுமந்தபுரம் நிஜாமின் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசமாதலால், மாட்சிமை தங்கிய நிஜாம் மன்னரிடமிருந்து வந்திருந்த ராஜப் பிரதிநிதி, மற்றும் அனுமந்தபுரத்தின் பிரஜைகள் முதலியோரே கூடியிருந்தார்கள். எனவே ஜமீன்தார் தமது பிரகடனத்தைக் கூறும் போது அவர்கள் அனைவரும், வார்த்தைக்கு வார்த்தை, வாக்கியத்துக்கு வாக்கியம் கைதட்டி ஆரவாரிப்பதும், 'ராஜ ராஜேஸ்வர ராவ் நீடூழி வாழ்க!' என்று கோஷிப்பதுமாக இருந்தார்கள். அதுமட்டுமல்லாமல், டார்வினின் பரிணுமக் கொள்கையைப்பற்றி விளக்க வியாக்கியானங்களோடு நீண்டநேரம் பேசிய அவரது பேச்சைக் கேட்டும் அவர்கள் பரவச மடைந்தார்கள். விஞ்ஞானத்தின் மூலம் சாதித்துள்ள அற்புதங்களையும், அவற்றை நயம்பட எடுத்துக்கூறும் தமது அரசர்பிரானின் அறிவாற்றலையும் கண்டு அவர்கள் அதிசயித்தார்கள்; பிரமித்தார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, வாலில்லாக் குரங்குகளை மரங்களினின்றும் இறக்கி, அவற்றை இரண்டு காலாலும் நிமிர்ந்து நிற்கவும் நடக்கவும் பழக்க முடியும் என்ற உண்மையை ராஜ ராஜேஸ்வரராவ் அவர்களிடம் எடுத்துச் சொன்னபோது, அங்கு கூடியிருந்தவர்கள் வியப்புணர்ச்சியில் ஆழ்ந்து விட்டார்கள். அது மட்டுமல்ல. ராஜ ராஜேஸ்வ ராவ் மேலும் ஒரு பெரிய விஷயத்தைக் குறிப்பிட்டபோது, அவர்களின் அதிசய உணர்ச்சி வெள்

ளம் எல்லை மீறிப் பொங்கி விட்டது. அந்த உணர்ச்சி வெள்ளத்தில் கூடியிருந்தோர் அனைவரும் திக்குமுக்காடிப் போனார்கள். எதிர்காலத்தில் வாலில்லாக் குரங்குகளையும் ராணுவச் சிப்பாய்களைப்போல் எழுந்து நிற்கவும் நடக்கவும் கவாத்து செய்யவும் பழக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். இதனால், அந்தக் குரங்குகளின் சிரசுக்கு அதிகமான ரத்த ஓட்டம் ஏற்படும் என்றும் அதன் மூலம் அவற்றுக்குப் புலனறிவும் விருத்தியடையும் என்றும் அவர் கூறினார். இவ்வாறு அவற்றின் மூளை விருத்தியடைந்து பலப்பட்டால், புலனுணர்ச்சிகள் தீக்ஷண்யமும் தெளிவும் பெற்றுச் சிறப்புற்றால், சாதாரண வாலில்லாக் குரங்குகளுக்கும் கூட, ஒரு சாதாரண சிப்பாய்க்கோ அல்லது விவசாயிக்கோ உள்ள அறிவாற்றல் ஏற்படுவதற்கு ஏதுவாகும் என்றும், எனவே ஏறுக்குமாறாக 'இடக்கு'ப் பண்ணும் சிப்பாய்களுக்கோ விவசாயிகளுக்கோ பதிலாக, அந்த வாலில்லாக் குரங்குகளைக்கொண்டே காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்கும் சாத்தியமாகும் என்றும் அவர் அறிவித்தார்.

தர்பார் ஹாலில் நடந்த மகாராஜாவின் பிரசங்கத்தைக் கேட்டுக் கைதட்டி ஆரவாரம் செய்த வேளையில், மனித அறிவைப் பற்றிய மன்னரின் கொள்கையினால் ஏற்படக்கூடிய விளைவுகளை அங்கு கூடியிருந்த மக்கள் உணரவில்லை. ஆனால், மன்னர் தமது பிரசங்கத்தை முடிக்கப் போகும் சமயம் ஒரு புதிய பிரகடனத்தையே திருவாய் மலர்ந்துவிட்டார்! அந்தப் பிரகடனம் ரொம்பத் தெளிவானது! அன்று முதல் தமது சமஸ்தானத்தில் பாதிப் பகுதியைக் குரங்குகளுக்குத் தாம் உரிமையாக்குவதாகவும், குரங்குகளும் ஏனைய மனிதர்களோடு சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் எனவும், அவையும் தானியங்களையும் கனிகாய் கிழங்கு வர்க்கங்களையும் தின்று செழித்து வளர வேண்டும் எனவும், அதன் மூலம் தமது மூதாதையர்கள் எவ்வாறு முன்னொரு காலத்தில் பரிணாம வளர்ச்சியில் படிப்படியாக முன்னேறி மனிதர்களாக மாறினார்களோ, அதுபோலவே அந்தக் குரங்குகளும் மெல்ல மெல்லப் பரிபக்குவம் பெற்று, மனிதத் தன்மைக்கும் மிருகத் தன்மைக்கும் இடையிலுள்ள பரிணாம கட்டத்தைக் கடந்து மனிதர்களாக மாறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் எனவும் அவர் அறிவித்தார்!

இந்தப் பிரகடனத்தைக் கூறி முடித்தபோதோ, சபையில் முன்னைப்போல் கை தட்டும் ஆரவாரமோ, மன்னரை வாழ்த்தும் வாழ்த்தொலிகளோ ஒலிக்கவில்லை. ஏனெனில், மகுடாபிஷேக வைபவத்தைக் கண்டு களிக்க வந்திருந்த ஜமீன் விவசாயிகளின் கண்முன்னே அவர்களின் எதிர்காலமே காட்சியளித்தது. நிலவாடகைச் சுமையாலும், நிலச்சுவான்தாருக்கும் விவசாயி

களுக்குமுள்ள உறவினல் ஏற்பட்ட வேறுபல கடன் சுமையாலும் அவர்களின் வாழ்க்கை ஏற்கெனவே சீர்குலேவின் உச்சநிலேயை எய்தியிருந்தது. ஏதோ தமது புதிய மகாராஜா பீ. ஏ. வகுப்பு வரையிலும் படித்தவர் என்றும், பண்டித ஜவாஹர்லால் நேருவின் வழியைப் பின்பற்றுகிறவர் என்றும் கேள்விப்பட்டிருந்த காரணத்தால், மகாராஜா நில வாடகைப் பாக்கிகளேயும் வட்டிக் கடன் சுமைகளேயும் ரத்துச் செய்வதாகவும் தரிசு நிலங்களே நிலமில்லாத விவசாயிகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதாகவும் தமது மகுடதாரண வைபவத்தில் பிரகடனம் செய்யக்கூடும் என்று எதிர்பார்த்துத்தான் அவர்கள் வந்திருந்தார்கள். ஆனல் மகாராஜாவோ ஜமீனின் பாதிப் பகுதியைக் குரங்குகளின் க்ஷேமநலத்துக்காக ஒதுக்கியிருப்பதாக அறிவித்துவிட்டார்!

ஆனல் முதலில் இந்தப் பிரகடனத்தை எல்லோரும் ஒரு வேடிக்கையாகத்தான் கருதினர்கள்; யுவராஜா வந்திருந்த பொதுமக்களிடம் 'சும்மா விளேயாடிப் பார்க்கிருர்' என்றுதான் கருதினர்கள். நிறைவேற்றி வைக்க முடியாத வெறும் வாக்குறுதிகளே அள்ளி வீசி, தடபுடல் பிரசங்கங்கள் செய்வது மகாராஜாவுக்குப் பிடிக்காது என்று அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள்; எனவே மகாராஜாவின் பிரகடனத்தைக் கண்டு யாரும் திடுக்கிட்டுவிடவில்லே. ஆனல், மகாராஜாவின் பிரகடனத்தின் படியே காரியங்கள் உண்மையிலேயே நிறைவேறத் தொடங்கிய போதுதான் அவர்களுக்கு மகாராஜா 'சும்மா விளேயாடவில்லே' என்ற உண்மை தெளிவாயிற்று. ஆம். மகாராஜா தமது பிரகடனத்தை நடைமுறையிலும் நிறைவேற்றத் தொடங்கி விட்டார்!

பல மைல்களுக்கு அப்பாலிருந்தெல்லாம் குரங்குகளேப் பிடித்துக்கொண்டுவந்து, அவற்றை ஆற்றங்கரையில் உள்ள காளியம்மனின் குடியிருப்பாகக் கருதப்பட்டு வந்த பாழடைந்த பிரதேசத்தில் குடியேற்றி வாழ வைத்ததோடு, அந்த வருஷத்து விளேச்சலில் பாதிக்கு மேற்பட்ட தானியத்தையும் அந்தக் குரங்குகளுக்காகக் களஞ்சியத்தில் சேகரித்து வைத்து விட்டார் மகாராஜா. எனவே, சிணுங்கிக் குணங்கும் செல்லக் குமரியைப் போல் பருவ மழை பூமியின்மீது பெய்ய மறுத்து ஒதுங்கியதாலும், பின்னர் வெறிபிடித்தது போல் சோனமாரியாய்ப் பெய்து பொழிந்து வெள்ளக்காடாக்கியதாலும், விவசாயிகள் பாடு திண்டாட்டமாயிற்று; விவசாயிகள் பட்டினி கிடந்தார்கள்; கொஞ்ச நஞ்சம் விளேந்த தானியமும் மகாராஜாவால் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டது.

தமது மூதாதையர்களுக்கு மகாராஜா காட்டிய மரியாதையும், மனித அறிவைப்பற்றிய அவரது புதிய கொள்கையும் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வில் மண்ணேயடித்

தது. நூற்றுக்கணக்கான குரங்குக் கூட்டங்கள் தமது கண்டு முதல் தானியத்தை யெல்லாம் தின்று தீர்ப்பதையும், தானியத்தைப் பறவைகளுக்கு அநியாயமாக அள்ளி யெறிந்து கும்மாளமடிப்பதையும் கண்டு அவர்கள் வயிறெரிந்தார்கள்; விவசாயிகளின் பெண்டு பிள்ளைகளோ மகாராஜாவை மண்ணை வாரித் தூற்றி வசைமாரி பாடினார்கள்; 'ஒரு கொடுங்கோலன் மறைந்து மறு கொடுங்கோலன் வந்து தம்மைக் கொடுமைப் படுத்துகிறானே' என்று புழுங்கித் தவித்தார்கள். ஆனால், விவசாயிகளோ பரம்பரையாகவே சாதுவானவர்கள்; மேலும் குரங்குகளையும் அவர்கள் புனிதப் பிறவிகளாகக் கருதினார்கள்; அதுமட்டுமல்லாமல் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் வானர சேனையில் பிறந்த வழித்தோன்றல்கள் என்ற காரணத்தால் அந்தக் குரங்குகளை மதித்து நடந்தார்கள். எனவே அவர்களில் சிலர் பட்டினிக் கொடுமையால் செத்து மடிய நேர்ந்த போதும், அவர்கள் செயலிழந்து வாளாவிருந்தார்கள்.

இவ்வாறாக, குரங்குகளின் கும்மாளம் நாளுக்குநாள் பெருகியது. அந்தக் குரங்குகளும் தோள்களை நிமிர்த்தி, நிமிர்ந்து நடக்கத் தொடங்கின; இவையெல்லாம் அவற்றுக்களித்த கௌரவத்தால் ஏற்படாவிட்டாலும், தின்று கொழுத்த ஊக்கத்தால் அவை அவ்வாறு மாறத் தொடங்கின. இவ்வாறாக, அந்தக் குரங்குகள் அறிவாற்றலின் பரிபக்குவத்தை அடையத் தொடங்கின! ஆனால், அந்தக் குரங்குகளை வயல்வெளிகளிருந்தும், குடியிருப்புக்களிலிருந்தும் 'சூ' காட்டி விரட்ட முனைந்த விவசாயப் பெருமக்களான மனிதர்களோ தலைமீது கையாய் உட்காந்து விட்டார்கள்; அந்தக் குரங்குகளின் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் அப்படியே மண்ணில் சோர்ந்து சாய்ந்து விட்டார்கள்.

இம்மாதிரியான நிலைமை நீடிக்க நீடிக்க ஒரு உண்மை தெளிவாயிற்று. குரங்குகள் பரிணமித்து வளரத் தொடங்கின; மனிதர்களோ சீரழிந்து மறையத் தொடங்கினர்! ஏனெனில் நிமிர்ந்து நடக்கும் குரங்குகளின் தொகை அதிகரிக்க அதிகரிக்க, விவசாய உற்பத்திச் சாதனங்களை கை மாறத் தொடங்கின; மகாராஜா ராஜ் ராஜேஸ்வராவின் ஆக்கினைப்படி அடுத்த வெள்ளாமைக்கு விதை விதைப்பது, உழுவது முதலிய காரியங்களும் குரங்குகளுக்கே உரிமையாக்கப்பட்டன.

இந்த வேளையில் தான் ஒரு சம்பவம் நடந்தது. அந்தச் சம்பவம் தான் பரிணாம வளர்ச்சியையும் சீரழிவையும் யார் தீர்மானிப்பது என்ற விஷயத்தை வெட்ட வெளிச்சமாக்கத் தொடங்கியது. தாக்குர் என்ற விவசாயியின் மகனான கோபால் என்ற இளைஞன் ஒருநாள் அரண்மனைக் களஞ்சிய முற்றத்தில் சிதறிக் கிடந்த தானிய மணிகளைக் கூட்

டிப் பெருக்கி வீட்டுக்குக் கொண்டு போக முனைந்தான்; இதைக் கண்ட ஒரு கோபக் காரக் குரங்கு அவன் மீது பாய்ந்து விழுந்து, அவனது வலது கையில் ரத்தம் காணக் கடித்துக் குதறி விட்டது.

இந்த நிகழ்ச்சியால் அனுமந்த புரத்திலுள்ள இளைஞர் கூட்டத் துக்கு குரங்குகளின் மீதிருந்த மதிப்பு காற்றாய்ப் பறந்தோடி விட்டது. இந்த மதிப்புணர்ச்சி குடியோடிப் போனதும்,மனிதர் களுக்காகச் சேமித்து வைக்கப் பட்டிருந்த தானியத்தைக் குரங் குக் கூட்டங்கள் தின்று கொழுப்பதைக் கண்ணால் கண் டும் வாளாவிருந்த செயலற்ற தன்மையும் செத்துப் போய் விட்டது. எனவே குரங்குகளுக் கும் மனிதர்களுக்கும் நேரடி யான போராட்டமே ஏற் பட்டு விட்டது; இந்த யுத்தத்தில் இருசாராரும் தங்கள் தங்கள் எதிரிகளின் மீது கற்களையும் செங் காங் கட்டிகளையும் கம்புகளையும் விட்டெறிந்து போரிடத்துணிந்து விட்டார்கள்.

குரங்குகள் புனிதப் பிறவிகள் என்ற நீண்ட நெடுங்கால மூட நம்பிக்கையில் மூழ்கியிருந்த பெரியவர்கள் முதலில் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள் ளாமல் ஒதுங்கியிருந்தார்கள்; ராமபிரானின் திருவடிச் சேவக னின் திருப்பரம்பரையில் உதித்த அந்தத் தெய்வப் பிறவிகளை எதிர்ப்பது தவறு என்றும் தமது பிள்ளைகளைக் கண் டித்தார்கள். ஆனால், தமது பிள்ளைகளிடம் நித்தநித்தம் குரங்குகளிடம் அடிபட்டும் கடி பட்டும் ரத்தம் சொட்ட வருவ தைக் கண்டதும், அவர்களும் இளைஞர்களோடு சேர்ந்து, குரங் குகளைக் களஞ்சியத்திலிருந்து தூரத்திலுள்ள வயல் வெளிகளுக் குள்ளும், மகாராஜாவின் அரண் மனைக்குள்ளும் விரட்டியடிக்க முனைந்தார்கள்.

கிராம மக்களின் தாக்குதலால் தமது தாயாதிகளான குரங்குகள் அல்லோல கல்லோலப் படுவ தைக் கேள்விப்பட்ட மகாராஜா கடுங்கோபம் கொண்டுவிட்டார். உடனே கிராமத்தின் மதக்குருக் களான பண்டிட் ஹரிதாஸ் என் பவரை வரவழைத்து, ஆஞ்ச நேயக் கடவுளின் திருவவதார மூர்த்தங்களான குரங்குகளை எவரேனும் துன்புறுத்துவார்க ளானால், அவர்கள் சமூகப் பிரஷ் டம் செய்யப்படுவார்கள் என் றும், தீண்டாதாராகி, மிலேச்சப் பிறவியாகப் பிரகடனப் படுத்தப் படுவார்கள் என்றும் தண் டோரா போட்டு அறிவிக்கச் சொன்னார்.

ஜாதிப் பிரஷ்டத்துக்கு அஞ்சி வயதான விவசாயிகள் போர்க்களத்திலிருந்து பின்வாங் கிவிட்டார்கள்; எனவே குரங்கு கள் மீண்டும் களஞ்சியத்தில் புகுந்து ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின. எனினும் ஒரு முறை குரங்குகளை வெற்றி கண்ட அனுபவமும், அவர்கள் வயிற்றிலே பற்றி யெரிந்த கும் பித் தியும்,மீண்டும் இளைஞர்களைக் கொதித்தெழச் செய்தது; மத

நம்பிக்கையையும், மிருக பலத்தையும் எதிர்த்துக்கிளம்பச்செய்தது. எனவே அவர்கள் ஒரு பெரிய சுவரையே இடித்துத் தள்ளி அதிலுள்ள செங்கல்களைக் கொண்டு, குரங்குகளைச் சரமாரியாகத் தாக்கத்தொடங்கினுர்கள். இந்தக் கடும் தாக்குதலைச் சமாளிக்க மாட்டாமல் அந்தக் குரங்குகளில் பெரும் பகுதி பக்கத்திலுள்ள மரங்களில் ஏறி ஒடியொளிந்துகொண்டன.

குரங்குகளுக்கும் கிராமத்து இளைஞர்களுக்கும் மீண்டும் போராட்டம்தொடங்கிவிட்டதை அறிந்த ராஜ ராஜேஜஸ்வர மகாராஜா தமது அரண்மனைச்சேவகர்களோடும் போலீஸ் படையினரோடும் வந்து, அந்த இளைஞர்களைத் துப்பாக்கிகளாலும், குண்டாந்தடிகளாலும் தாக்கி விரட்டத் தொடங்கினுர். போலீஸாரைப்பற்றிய பயம் கிராமத்து மக்களின் நெஞ்சில் உறைந்து போயிருந்ததால், அவர்களில் எவரும் போலீஸாரின் தடியடிப் பிரயோகத்துக்கு எதிரே நிற்க முடியவில்லை. குரங்குகள் மீண்டும் களஞ்சியத்தில் குடியேறின; இளைஞர்களும் முதியவர்களும் அடங்கி ஒடுங்கிவிட்டார்கள்.

சில நாட்களுக்கு அனுமந்தபுரத்தில் அமைதி நிலவியது. வயதானவர்களும் சரி, குழந்தை குட்டிகளும் சரி, எல்லோரும் போதிய உணவின்மையால் செயலற்றுச் செத்து மடிந்துகொண்டிருந்தார்கள்; எனவே அங்கு நிலவிய அமைதி சுடுகாட்டு அமைதியாகவே இருந்தது.

இந்த நிலைமையை மாற்றுவதற்காக, கிராமத்துமக்கள் பஞ்சாயத்துக்கூடி ஆலோசித்தார்கள்; அரசரின் புதிய ஆக்ஞையால் தமக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களையும், துன்ப துயரங்களையும் மகாராஜாவின் சமூகத்தில் நேரில் எடுத்துக் கூறுவதென்று முடிவு செய்தார்கள்; மகாராஜாவைக் கண்டு நேரில் விண்ணப்பித்தும் கொண்டார்கள். ஆனல், ராஜ ராஜேஜஸ்வரப் பிரபுவோ சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை. மகாத்மா காந்தியடிகளின் உபதேசப்படி, மனிதர்களையும் குரங்குகளையும் சரி நிகர் சமானமான சகோதரர்களாக வாழவைப்பதே தமது நோக்கம் என்றும், விளைச்சலில் சரிபாதியைக் குரங்குகளுக்காக வசூல் செய்ய வேண்டுமென்று தாம் உத்தரவிட்டிருப்பதாகவும், அதன் மூலம் தமது சமஸ்தானத்தில் ராமராஜ்யத்தை நிலைநாட்டப் போவதாகவும் கூறிவிட்டார்; மேலும், தமது கொள்கையின் மூலம் விஞ்ஞானத் துறைக்கே புதியதொரு உண்மையை நிரூபித்துக் காட்டப் போவதாகவும், அதன் மூலம் மனித சமுதாயத்துக்கே அளவிடற்கரிய நன்மைகள் விளையப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

மன்னரைப் பேட்டி காணச் சென்ற தூதுகோஷ்டி வெற்றியடையாது திரும்பிச் சென்றது. அந்தத் தூது கோஷ்டியாரிடம் தாம் அளவுக்கு மீறி ஏதேதோ பேசி விட்டதாக மகாராஜா உணர்ந்தார்; எனவே அவர் ஏதோ ஒரு மாதிரியான மன உளைச்சலுக்கு ஆளாகித் தவித்

தார். இந்த மன உளைச்சலின் போது, அமெரிக்கர்கள் குரங்குகளுக்கு நல்ல விலைகொடுத்து வாங்கத் தயராயிருக்கிறார்கள் என்று பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளையும் அவர் எண்ணிப்பார்த்தார். எனவே குரங்குகளை அமெரிக்கர்களுக்கு விற்று விடுவது என்றும் கூட அவர் எண்ணினார். அதுமட்டுமல்லாமல் குரங்களை எவ்வாறு ராணுவப் பயிற்சி கொடுத்துப் பயன்படுத்த முடியும் என்பது பற்றியும் ஒரு பிரத்யேகமான அறிக்கையைத் தயார் செய்து அமெரிக்க சர்க்காருக்கு அனுப்பிவைக்கவும் அவர் தீர்மானித்து எழுதவும் உட்கார்ந்து விட்டார். எனினும் அவரது அரைகுறை ஆங்கிலப் படிப்பு அந்த அறிக்கையை எழுதுவதற்குத் தடையாக இருந்து விட்டது!

இதற்கிடையில் அனுமந்தபுரத்தில் ஏற்பட்ட கலவரத்துக்கே காரணமாயிருந்த தாக்குரின் மகனை கோபால் தான் பள்ளிக்கூடத்தில் படித்த 'குல்லா வியாபாரியும் குரங்குகளும்' என்ற கதையை நினைவுகூர்ந்தான். குரங்குகள் புத்திசாலித்தனத்தோடிருந்தாலும், மனிதர்களின் செய்கையை அப்படியே காப்பியடிக்கக் கூடியவை என்ற நீதியை அந்தக் கதையின் மூலம் அவன் அறிந்திருந்தான். எனவே அந்தக் கதையின் நீதிப்படி, அவன் குரங்குகளைப் பழிவாங்குவது பற்றி, தனது சகாக்களான கிராமத்து இளைஞர்களோடு ஆலோசனை செய்தான்.

கடைசியாக அவர்கள் ஒரு க்ஷவரத்தொழிலாளியின் மகனைப் பிடித்து, அவனது தந்தையின் பையிலிருந்த க்ஷவரக் கத்திகளையெல்லாம் கொண்டு வருமாறு செய்தார்கள். அந்தக் கத்திகளில் ஒன்றைக் களஞ்சியத்தின் முற்றத்தில் குடியிருந்த குரங்குகளிடம் விட்டெறிந்தார்கள். அந்தக் குரங்குகளின் முன்னிலையில் அமர்ந்தவாறு, கோபால் இன்னொரு கத்தியை எடுத்து தனது முகத்தை க்ஷவரம்செய்யத் தொடங்கினான். அவ்வாறு செய்யும் போது, தொண்டைக் குழியின் அருகே அந்தக் கத்தியை விறுட்டென்று அழுத்தி இழுப்பது போல் பாசாங்கு செய்து கொண்டான்; பின்னர் அவன் தனது அருகிலிருந்த இளைஞனிடம் கத்தியைக் கொடுத்து தன்னைப் போலவே பாசாங்கு செய்யச் சொன்னான்.

கோபாலின் செய்கையைக் கண்ட ஒரு குரங்கு முற்றத்தில் கிடந்த கத்தியை எடுத்துத் தானும் அது போல் செய்து, தொண்டைக் குழியை உண்மையிலேயே அறுத்துக் கொண்டு செத்து விழுந்தது. இவ்வாறு ஒவ்வொரு குரங்கும் தொண்டையை அறுத்துக்கொண்டு செத்து விழத்தொடங்கியது. தமது அற்புதமான அறிவுப் பரிணமக் கொள்கையை நிரூபிப்பதற்காக ராஜ ராஜேஸ்வர ராவ் கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்த குரங்குகள் மனிதர்களின் செய்கைகளைத் தாமும் செய்யும் தமது பிறவிக் குணத்தின் காரணமாக,

கிராமத்து இளைஞர்கள் செய்த 'தற்கொலைப்பாசாங்கு'ச் சூழ்ச்சிக்கு இரையாகி மடியத் தொடங்கின. இவ்வாறாக, அனுமந்தபுரத்தின் அரச குடும்பத்தின் தாயாதிகளான அந்த இளவரசுக் குரங்குகள் களஞ்சியத்தின் முற்றத்தில் செத்துவிழத் தொடங்கின.

தங்கள் புத்திரர்களின் சாமர்த்தியத்தால் குரங்குக் கூட்டம் செத்து விழுந்ததைக் கண்டு, இத்தனை நாளும் கோழையாக முடங்கிக் கிடந்த அனுமந்தபுரத்துப் பிரஜைகளான பெரியவர்களும் ஒன்று திரண்டு சென்று தானியக் களஞ்சியத்தைச் சூறையாடினார்கள்!

உயிர்தப்பிப் பிழைத்த ஒன்றிரண்டு குரங்குகளும் மகாராஜாவின் அரண்மனைக்குள் அடைக்கலம் புகுந்து கொண்டன; மேலும் களஞ்சியத்தை மீண்டும் தமக்கே உரிமையாக்க வேண்டும் என்றும் அவை மன்னருக்கெதிராக உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கின. ஆனால், ஊரிலுள்ள இளைஞர்களுக்கு எதிராக, மீண்டும் களஞ்சியத்தைக்குரங்குகளுக்கு உரிமையாக்க மகாராஜாவால் முடியவில்லை.

பின்னர் ராஜ ராஜேஸ்வரராவின் அபாரமான மூளையில் திடீரென்று ஒரு அற்புதமான யோசனை மின்வெட்டியது! தாம் முன்னர் யோசித்தவாறே உடனடியாக அமெரிக்காவுக்கு 'கேபிள்' தந்தி கொடுத்து, அந்தக் குரங்குகளைப் பரிசோதனைக் காரியங்களுக்காக விற்பனை செய்வதற்கான பேரத்தைத் தொடங்க வேண்டுமென்றும், அதன் மூலம் குறிப்பிடத்தக்க அளவு டாலரை விலையாகப் பெற வேண்டும் என்றும் அவர் திட்டமிட்டார். மேலும் விழித்தெழுந்து விட்ட கிராம மக்கள் தம்மை சமஸ்தானத்தை விட்டே வெளியே விரட்டியடித்து விடுவார்கள் என்றும் அவர் உணரத் தொடங்கினார். எனவே அந்தப் பேரத்தை உடனடியாகத் தொடங்கி வைத்தார்.

ஆனால், அதிசயிக்கத்தக்க விதமாக, அமெரிக்காவிலிருந்து அவரது பேரத்தை ஏற்றுப் பதிலும் வந்து விட்டது. அது மட்டுமல்ல. குரங்குகளைத் தலை நிமிர்ந்து நடக்கச் செய்யும் ராஜ ராஜேஸ்வர ராவின் கொள்கையும், குரங்குகளை வீட்டு வேலைக்காரர்களாகவும் சமையல்காரர்களாகவும் பழக்கிவைக்க முடியும் என்ற தமது கொள்கையும் ஒன்றுபட்டிருக்கும் உண்மையையும் வெர்ஜீனியா சர்வகலாசாலையைச் சேர்ந்த ஒரு உடலியல் நிபுணர் கண்டறிந்து விட்டார். எனவே அனுமந்தபுரம் மகாராஜாவுக்குக் கூடிய சீக்கிரமே அமெரிக்காவிலிருந்து 'ஸ்காலர்ஷிப்' கொடுக்கப்பட்டது! அனுமந்தபுரம் மகாராஜா ராஜஸ்ரீ ராஜ ராஜேஸ்வரராவ் அவர்களும் புதிய உலகமான அமெரிக்காவுக்குச் சென்று, மனித அறிவின் பரிணாம தத்துவம் பற்றிய தமது அபூர்வமான கொள்கையை மேலும் மேலும் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார்! ★

# நம் நாடு

திருச்சிற்றம்பலக் கவிராயர்

---

நாட்டுக்குச் சுதந்திரம் வந்த புதிதில், 1948-ம் ஆண்டு பொங்கல் தினத்தன்று வானொலி நிலையத்தார் 'நம் நாடு' என்ற பொருளைக் குறித்து ஒரு கவியரங்கம் நடத்தினார்கள். அந்த அரங்கில் நமது கவிராயரும் பங்கெடுத்துக் கொண்டார். அன்றைய கவியரங்கில் பாடிய பாடல் சிற்சில ஒட்டு வெட்டுக்களோடு இங்கு வெளியிடு யிடப்படுகிறது.

இந்தப் பாடல் இப்போதுதான் முதன்முறையாக அச்சேறுகிறது. ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் பாடப் பெற்ற பாடலே எனினும், நாட்டின் நிலைமை பாட்டின் கருத்தை இன்றுவரை பொய்யாக்கி விடவில்லை யல்லவா?

---

**1**

நமஸ்காரம்.

அன்பார்ந்த பெரியோரே!
அரங்கோரே! நம் நாட்டின்
பண்பார்ந்த செந்தமிழின்
பாவலரே! ஒரு வார்த்தை.

போன நவம்பர் தனில்
பொருள் குறித்து, எந்தனுக்கு
வானொலியார் அரங்குக்கு
வளமான நற்கவியைத்
தேனெழுக, உங்கள் மனம்
தித்திக்க, மகிழ்வூற
நானெழுத வேண்டுமென
நாளும்கு றித்து விட்டார்.

நானோ —
பேனா பிடிச்செழுதிப்
பேரெடுத்து அரசாளும்
தானபதி அல்ல.
ஆனாலும், நம் நாட்டை
அறைகின்றேன் கேளுங்கள்!

**2**

நம் நாட்டில்—
வெள்ளி மலை உருகி
வீழ்ந்தென்ன, வெள்ளருவி
துள்ளி விழுந்திறங்கித்
துயரம் களைந்துவரும்
வெள்ளப் பெருக்கத்தை,
வியன் கங்கை ஆற்றொழுக்கின்
வள்ளற் பெருந்தனத்தை,
வாசம கோசரமாய்க்
கொள்ளை மகிழ்ச்சிதரக்
கூறிடவும் திறமுண்டு.

குறைவற்ற செல்வங்கள்
குவிந்தும், வயற்புறத்தில்
நிறைவயிற்றுச் சூலியைப்போல்
நெற்கதிர்கள் தலைசாய்த்தும்,
அரைவயிற்றுக் கஞ்சிக்கும்
ஆலாய்ப் பறக்கின்ற
குறைவயிற்று ஏழைகளைக்
கூறுதிருந்திடவோ?

ஆறுண்டு; குளமுண்டு;
அணியணியாய் நெல்வயல்கள்
வீறுடனே ஒளிபரப்பி
விளைவதுண்டு!

என்றாலும்,

சோறுண்டோ? வாழ்வில்
சுகமுண்டோ? இதையெல்லாம்
கூறுதிருந்து விட்டால்
குறைவிழுந்து போகாதோ?

## 3

விண்காட்டும் விரலென்ன,
விமலன் திருவடியைக்
கண் காட்டும் அருட்சோதிக்
கதிரென்ன நிமிர்ந்தோங்கும்
மண் கோட்டைக் கோபுரத்தை,
மதிமயக்கும் மாடத்தை,

கல்லைக் கனியாக்கி
கவிப்பொருளை உருவாக்கும்
மல்லைக் கடற்கரையின்
மானுடத்தின் வெற்றிதனைச்
சொல்லைக் குழைத்தெடுத்துச்
சொக்குங் கவி திட்ட
எல்லையற்ற பேராவல்
எனக்குண்டு!

என்றாலும்
வானுயர்ந்த மாடங்கள்
வளர்ந்தும், குடியிருக்கச்
சாணிலமும் இல்லாமல்
சந்துகளில் பொந்துகளில்
கூனிக் கிடந்துழன்றுக்
குற்றுயிராய் வாழ்வதையும்
ஆணித் தரமாக
அறையாதிருந்திடவோ?

## 4

வானத்து வில்லழகின்
வண்ணத்தை, தினைப்புனத்துக்
கானமயில் தோகைக்
கண்ணுயிரங் கோடி
மீனக்குலத் துடிப்பை,
மின்னொளியை ஒன்றாக்கி,
பஞ்சுப்புகை உலைத்துப்
பனிப்புகைபோல் நூல்நூற்று
மஞ்சுவண்ணத் தன்மையிலே
மஸ்லின் துணி நெய்த
கஞ்சமலர்க் கரத்தைக்
கண்ணேற்றிப் புகழ்ந்திடவும்
நெஞ்சில் இடமுண்டு!
இன்றைக்கு —
‡ அஞ்சு கஜத் துணிக்கும்
அடித்துப் புரண்டோடிக்
கெஞ்சுவதை, கலிசூழ்ந்து
கேடுற்ற நளனைப்போல்
கொஞ்சத் துணி யுடுத்திக்
குன்றியுடல் தாங்குவதைச்
செஞ்சொற் கவியரங்கில்
செப்பாதிருந்திடவோ?

## 5

தொட்டுத் தாலி கட்டித்
துணையான நாயகற்குக்
கட்டுக் கடங்கி, அவர்
கற்பின் திறம் காத்து
மட்டற்ற வலிபெற்று
மதுரை நகர் சுட்டெரித்த
கண்ணகியை, கதிரோனின்

கருமத்தைத் தடைசெய்த
பெண்ணரசி நளாயினியின்
பேரறத்தை, அருந்ததியாள்
விண்ணரங்கில் இடம்பெற்ற
வென்றி எடுத்துரைத்துக்
கற்புக் கதை சொல்லிக்
கவிகூறத் திறமுண்டு!

இன்றைக்கோ — பாரதத்துப்
பொற்கிளிகள் தம்முடலைப்
பொருளுக்காய், அரிசிக்காய்,
அற்பர்களின் இச்சைவெறி
ஆசை தணிப்பதற்காய்
விற்கின்றார்! பிச்சை
வீழ்கின்றார்! இதையெல்லாம்
சொற்களிலோ திட்டாமல்
சும்மா இருந்திடவோ?

## 6

வெள்ளையரின் ஆட்சிக்கு
வேட்டுவைத்து, அடிமையெனும்
பள்ளத்தே கிடந்துழன்ற

‡ 1948-ல் மில் துணிக்கும் ரேஷன் இருந்தது ஞாபகமிருக்கும்; ஒவ்வொருவருக்கும் ஐந்து கஜம் துணிதான் கொடுக்கப்பட்டது.

பாரதத்தை விழிப்பூட்டி
உள்ளக் கனலேற்றி,
உதிரப் புனல் பெருகும்
வெள்ளத்தே முங்குளித்து
வெளிக்கொணர்ந்த விடுதலை
யைத்
துள்ளும் கவி மொழியில்
தொழுதேற்ற ஆசையுண்டு!

என்ருலும் —
கள்ளக் கடை நடத்தக்
கச்சை கட்டும் பாவியர்கள்
வெள்ளை மனத்தவர்போல்
வெளிவேஷம் போட்டாடிக்
கொள்ளையடித்து தினம்
கொழுக்கின்ற சூழ்வினைக்கும்
பள்ளம் பறிப்பதற்கோர்
பாட்டெழுதா திருந்திடவோ?

## 7

பன்னூறு காலமதாய்
பருவ நலம் குலையாத
கன்னித் தமிழ்மகளின்
காதல் திருமகனும்
பன்னீராயிரத்துப்
பாட்டெழுதிப் புகழ்பெற்ற
பாவலனை,
ஈரடியில்

பாரையெலாம் அளந்தறிந்த
நாவலனும் வள்ளுவனை,

பாரதத்துத் தீமையெலாம்
பறந்தோட, அன்னியரின்
வேரதிரப் பாட்டெழுதி
வீரம் விளைத்தவனும்

பாரதியின் கவித்திறத்தைப்
பைந்தமிழில் சொல்லுதற்கும்
ஆராத பேராவல்
ஆசை எனக்குண்டு!

என்ருலும் — இன்றைக்குச்
செங்கல் அடுக்கி, தமிழ்ச்
செய்யுள் என்று கூறி, நமைப்
பொங்கல் வைக்க வரும்
புல்லுருவிக் கூட்டத்தை,
தங்கக் கவியெனவே
தமுக்கடித்துச் சொல்லி வரும்
வெங்கத் திருக் குழுவை
'வீடு'பெறச் செய்வதற்கும்
கங்கெரியும் வார்த்தையில்
கவிகூரு திருந்திடவோ?

## 8

இப்படியாய் —

பண்டுதொட்டு வழங்கும்
பாரதத்துப் பெருமைகளை
'வண்டு கட்டி'க் கொண்டு வந்தே
வைத்தாலும், அவையெல்லாம்
பிண்டு விழுகுதையோ!
பெரியோரே! என் செய்வேன்?

ஆதலினுல் —
எந்தன் திருநாட்டின்
இயல்பையெலாம் உங்களுடைச்
சிந்தைக்கே விட்டுவிட்டுச்
செல்கின்றேன்! வாக்களித்த
† அந்தப் பரிசு தனை
அடியேனுக்குடன் ஈந்து
வந்த வழி மீளுதற்கு
வகைசெய்து தாருமையா! ★

† கலந்து கொண்ட கவிஞர்களுக்கு, வாஞெலியார் தரும் சன்மானம்.

**செங்கோட்டைச் சாமியாருக்கும் செல்லிக்கும் ஏற்பட்ட சத்தியசோதனைகள் வெவ்வேறு திசைகளிலிருந்துதான் ஏற்பட்டன. எனினும், இருவருக்கும் ஒரே மாதிரியான சத்தியசோதனைதான். அந்தச் சத்தியசோதனைக்குரிய மூல காரணம் மட்டும் வெவ்வேறானதா? அதுவும் ஒரே மாதிரிதான். வாழ்க்கையிலே ஏற்பட வேண்டாத இந்தச் சத்தியசோதனைகளுக்கெல்லாம் பிறப்பிடமான அந்த மூல காரணத்தைப் பிடுங்கி எறிந்தாலல்லவா, வாழ்க்வக உருப்படும்! இல்லையா?**

# சத்திய சோதனை

டி. செல்வராஜ்

★

**'ஊற்றைச் சரீரத்தை, ஆபாசக்**
**கொட்டிலை ஊன்பொதிந்த**
**பீற்றல் துருத்தியை, சோறிடும்**
**தோற்பையை, பேசரிய**
**காற்றில் பொதிந்த நிலையற்ற**
**பாண்டத்தைக் காதல் செய்தே**
**ஏற்றுத் திரிந்து விட்டேன்**
**இறைவா! கச்சி ஏகம்பனே!'**

பட்டினத்தடிகளின் ஏகம்பமாலையை முணுமுணுத்த வண்ணம் செங்கோட்டைச் சாமியார் நீருக்குள் மூழ்கி எழுந்தார். அவர் தலையைத் தூக்குவதற்கும் பேராய்ச்சியம்மன் கோவிலிலிருந்து கல்லுப்பட்டிச் சாமிகள் வந்து சேர்வதற்கும் சரியாக இருந்தது.

"என்ன? கல்லுப்பட்டிச் சாமி! இத்தனை நாழி எங்கே போயிருந்தது?" என்று தலையைத் தண்ணீருக்கு மேல் தூக்கிய வண்ணம் செங்கோட்டைச் சாமி கேட்டது.

"இந்தக் கட்டை ஒரு கட்டைப் பிடியைத் தேடிக்கிட்டு இப்படிச் சுத்தி வந்தது!" என்று கூறிக்கொண்டு நெருங்கி வந்தது கல்லுப்பட்டிச் சாமி.

உயர்திணை அஃறிணை என்ற உலக மாயைகளையெல்லாம் கடந்த அத்வைத நிலையிலுள்ள சுத்த சச்சிதானந்த சொரூபிகள் அவர்கள்! எனவே அவர்களுக்குள் அவ்வாறு பேசுவதுதான் மாமூல். ஆனால், உலக பந்தங்களை அந்தச் சாமிகள் இரண்டும் உதறி விட்டு வந்த கதையோ பெரிய திருத்தொண்டர் புராணமேதான்.

செங்கோட்டைச் சாமி காவி தரித்துக் கமண்டலமும் கையுமாக வீட்டை விட்டு வெளியேறிய சமயமும், இந்தியாவுக்குச் சுதந்திரம் வந்த ஆகஸ்ட் பதினைந்தின் அர்த்த ராத்திரிப் பொழுதும் ஒன்றாக இருந்தது. சாமி அவர்கள் புத்தனைப் போன்று ஞானமார்க்கத்தைத் தேடியோ, பட்டினத்தடிகளைப் போன்று 'பெண்ணாகி வந்த மாயப் பிசாசை'க் கண்டு மருண்டோ, வீட்டை விட்டு வெளியேறிவிடவில்லை. அதற்கு மாறாக, ஆசைக்கொரு மனைவியும் வீடு நிறைந்த புத்திர பாக்கியமும் அவருக்கு இருக்கவே செய்தனர். எனினும் தென்னை மரத்தில் தேள் கொட்ட, பனை

மரத்தில் நெறி கட்டிய கதை யாக, மேற்கே நடந்த உலகமகா யுத்தத்தால் பாதிக்கப்பட்டுச் சீர்குலைந்த பல்லாயிரக் கணக் கான இந்தியக் குடும்பங்களில் சாமியவர்களின் குடும்பமும் ஒன்றாயிருந்தது. எனவே ஐ. பி. கொடுப்பவர்கள் சில சமயம் தீர்க்க புத்தியுடன் பின்பற்றும் விமோசன மார்க்கத்தைக் கடைப் பிடித்து, சாமிகள் 'சிவனே' என்று உலகத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டு விட்டார்.

கல்லுப்பட்டிச் சாமியின் குடும்பமும் பெரிய குடும்பம் தான். ஆனால் அவர் துறவறம் பூண்டதோ, இந்தியாவுக்குச் சுதந்திரம் வந்த பின்னர்தான். சுதந்திரம் வந்த பின்னர் ஏற் பட்ட பஞ்சத்தில் அடிபட்ட கல்லுப்பட்டிச் சாமி, நாட்டின் விடுதலையை அனுபவிக்க முடி யாமல், உலகத்தின் பந்தபாசங் களை யெல்லாம் கடந்த 'பெரு விடுதலை'யைத் தேடி வீட்டை விட்டு நடையிறங்கி விட்டார்.

தாமிரபருணியாற்றுக்கு மத் தியிலே நிற்கும் தைப்பூச மண் டபம்தான் இம்மாதிரியான சாமிகளுக்கெல்லாம் பூலோக கைலாசமாக, 'ஈசனின் இணையடி நீழலாக' விளங்கி வந்தது. 'வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்' வந்து உலவும் தைப்பூச மண்டபத் தில்தான் கல்லுப்பட்டிச் சாமி களும் செங்கோட்டைச் சாமிக ளும் சந்தித்து உறவு பூண்டன.

''சாமி இன்னிக்கு எந்தப் பக்கம் போயி வந்திச்சு?'' என்று வினவியது கல்லுப்பட் டிச் சாமி.

''இப்படி உடையார்பட்டிப் பக்கம் போயி, மத்தியான போசனத்தை ராசவல்லிபுரத் திலே கழிச்சிட்டு, தாழையூத்து போயி, அங்கிருந்து தெற்கே வார வண்டியிலே வந்திச்சு. சாமி எந்தப் பக்கம் போனுப் பிலே?'' என்று பதிலளித்தது செங்கோட்டைச் சாமி.

''இது குறுந்துடையார்புரம் போயி, கருப்பன் துறைமேலே.. அப்படியே மடங்கிட்டுது. சரி. இன்னிக்கி வைத்திய முறை ஏதாச்சும் உண்டா?''

''ரெண்டு சவத்துக்களுக்கு உண்டு. சிறுக்கிக! தைப்பூச மண்டபத்திலே இருக்கா. பார்த்தாப்போவுது!'' என்று கூறிக்கொண்டே மீண்டும் தண்ணீருக்குள் தலையை இழுத் துக்கொண்டது செங்கோட் டைச் சாமி.

செங்கோட்டைச் சாமியின் இந்த ஐந்தாவது வருஷ அனுப வம் அபூர்வமானது. சகவாசம் காரணமாக அவருக்குச் சிற்சில சித்தர் பாடல்களும் அனுபோக வைத்திய முறைகளும், செந் தூரம், சூரணம் முதலிய மருந்து வகைகளும் பரிசயமாயின. இதனால், 'காத்து, கறுப்பு' முதலியவற்றை விரட்டுவதும், வெள்ளை, வெட்டை, சூடு, மேகம், கிரந்தி போன்ற நோய் களுக்கு மருந்து கொடுக்கவும் அவருக்குத் தெரிந்திருந்தது. எனவே வயிற்றுக்கில்லாமல் சோரம் போகும் பெண்கள் வாங்காத நோயை யெல்லாம் வாங்கிக் கட்டிக்கொண்டு, உயிர் மீதும் உடல்மீதும் வைத்துள்ள ஆசையினால் சம்பாதித்த காசைச் சாமியவர்களிடம்

கொடுத்து விட்டு, 'பத்தியம்' காப்பார்கள். முற்றும் துறந்த முனிவேடம் தாங்கினுலும், மடியில் இரண்டு காசு இருந்தால் தான் எந்தப் பயலாவது எடுத்துப் புதைக்கவாவது முன்வருவான் என்ற திட்சண்ய புத்தியின் காரணமாக, சாமியவர்கள் இவ்வாறு தமது வருமானத்தை அதிகரித்து வந்தார். இதனுல், சாமியவர்களுக்கு 'பிக்ஷாந்தேகி!' என்று ஊர்த் தெருக்களைப் பிரகாரம் சுற்றி வரவேண்டிய நிர்ப்பந்தம் அவ்வளவாக இல்லை; இருப்பினும் பழக்கதோஷத்தின் காரணமாக சாமியவர்கள் பகல் வேளையில் ஊர் சுற்றுவதும், மாலையில் பேராய்ச்சியம்மன் படித்துறையில் முழுக்குப் போடுவதும், இரவில் தைப்பூச மண்டபத்தில் கட்டையைச் சாய்ப்பதுமாகக் காலம் தள்ளி வந்தார்...

மேலைமலைச் சிகரங்களினுடே அஸ்தமித்துக் கொண்டிருந்த சூரிய ஒளி ஆற்றுப் படுகையிலே ஆடகப்பொடி தூவியதுபோல் ஒளிசெய்து கொண்டிருந்தது. குளிப்பை முடித்து விட்டுக் கரையேறிய செங்கோட்டைச் சாமி கல்லுப்பட்டிச் சாமிக்காகக் காத்து நின்றவாறே, தமது ஜடா முடியையும் தாடியையும் சிக்கெடுத்து உலர்த்திக் கொண்டிருந்தது.

அப்போது, பக்கத்துப் படித்துறையில் குளித்து முழுகி எழுந்து வந்த பெண்களின் கலகலப்பொலி அவர் காதில் விழுந்தது. சாமியவர்களின் கண்கள் தம்மையறியாமலே அந்தப் பக்கம் திரும்பின.

ஏதோ ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த மாணவிகள் ஈரப் புடவையில் நீர் சொட்டச் சொட்ட, உடம்போடு ஒட்டிக் கிடக்கும் துணிமணிகளின் மறைவில் அங்க லாவண்யங்கள் துலங்க, படிக்கொரு அசைவும் அடிக்கொரு அழகும் காட்டி, கரையேறிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண்களைப் பார்க்கப் பார்க்க, சாம்பிக் கூம்பிப் போன சாமிகளின் உள்ளத்தில் ஏதோ ஒரு புதிய மலர்ச்சி தென்பட்டது. வீட்டை விட்டு வெளியேறிய தினத்திலிருந்து அவரது உள்ளத்தின் ஒரு மூலையிலே கருக்கலைந்து போய்விட்ட க்ஷணப் பித்தம் மீண்டும் உருக் கொண்டு தலை தூக்கியது. அந்த யுவதிகளை அவர் வெறிக்க வெறிக்கப் பார்ப்பதுவும், அவர்கள் அவரைப் பார்த்தால் தரையைப் பார்ப்பதுவுமாக நின்ருர். இதற்குள் அந்தப் பெண்கள் கரையேறி, வண்ணூர்பேட்டைக்குச் செல்லும் ரோட்டுத் திருப்பத்தில் திரும்பிவிட்டார்கள்.

எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விட்ட நரியைப்போல் தவித்த செங்கோட்டைச் சாமி மனத்தில் கிளைத்தமாமிச வேட்கையை மாற்றுவதற்காக,

பையரவம் பூண்ட
  பரமர் திருப் பொற்ருளை
துய்யமலர் பறித்துத்
  தொழுது வணங்காமல்
கையில் அணி வளையும்
  காலிலிடும் பாடகமும்
மெய்யென்று இறுமாந்து
  விட்டனையே நெஞ்சமே!

என்று மீண்டும் பட்டினத்தடிகளின் பாடலை 'நெஞ்சொடு

கிளத்தித் தமது இதய அரிச்சலைப் போக்க முயன்றார். எனினும், அவரது மனக் குரங்கோ அவரை 'மாயைப் படுகுழி'யில், 'பாவசாகர'த்தில் தான் பிடித்துத் தள்ளவே முனைந்தது.

''சே! சே! இதென்ன சபலம்?'' என்று அவர் தமக்குத் தாமே கூறியவாறு மாயையோடு போராட முனைந்தார்; அந்தப் பாடலை மீண்டும் மீண்டும் முணுமுணுத்தார். எனினும் உடம்பு முழுவதும் பரவி நின்ற காமக்குரோதாதிகளான 'மும்மலங்'களையும் அவர் சுட்டுப் பொசுக்குவதற்குப் பதிலாக, அவை அவரைச் சுட்டுப் பொசுக்கிவிடும் போலிருந்தது. எனவே இன்னது செய்வதெனத் தெரியாமல் மடியிலிருந்த திருநீற்றை எடுத்து நெற்றியிலும் வாயிலும் போட்டுக் கொண்டார்.

இதற்குள் கல்லுப்பட்டிச் சாமியும் கரையேறி விட்டது.

''என்ன, செங்கோட்டைச் சாமி! ஈஸ்வரத் தியானத்திலே ஈடுபாடோ? இந்தக் கட்டை வந்ததைக்கூடக் கவனிக்கக் காணோமே!'' என்று கல்லுப்பட்டிச் சாமி குரல் கொடுத்ததும் தான் செங்கோட்டைச் சாமிக்கு உணர்வு திரும்பியது.

''ஆமாமா...'' என்று கூறியவாறே, கல்லுப்பட்டிச் சாமியுடன் கரையோரமாய் நடக்கலானார் செங்கோட்டைச் சாமியார்.

## 2

சுலோசன முதலியார் பாலத்தின் அடியில் இருள் கவியலாயிற்று.

காற்று வாங்க வந்திருந்தவர்களும், 'பலீன் சடுகுடு' ஆடிய பள்ளிச் சிறுவர்களும், மாலைக் கடனை முடித்துவிட்டு, ஆற்று மணலில் துண்டை விரித்துச் சடைவாறிய பெரிய மனிதர்களும் போய் விட்டனர்; பாலத்தின்மீது திருநெல்வேலிக்கும் பாளையங்கோட்டைக்குமாகப் போய்க் கொண்டிருந்த டவுண் பஸ்களின் உறுமலும் மாட்டு வண்டிகளின் மணியோசையும் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது.

இருளிலே அவர்கள் இருவரும் ஆற்றுப் பாலத்துக் கணவாயின் தூண் மறைவிலே நின்று கொண்டிருந்தார்கள். அவன் அவளது கூந்தலை வாரி முடிந்து கொண்டிருந்தான்; அவள் வாடி வதங்கிப் போன வெற்றிலையை மென்று மென்று அதரச் சாயம் ஏற்றிக் கொண்டிருந்தாள்.

''இன்னிக்கு மட்டும்தானே!'' என்று அவன் அவளிடம் லேசாக முணுமுணுத்தான்.

''ஆமாம். இன்னிக்கு மட்டும் தான். நாளைமுத சொன்னே, சத்தியமா, எங்க அப்பனுணையா எங்கெனயாச்சும் விழுந்து உசுரை மாச்சிக்கிடுவேன். ஆமா!'' என்று சிணுங்கியவாறே அவள் அவன் முகத்தைப் பார்த்தாள்.

கொக்கிரகுளம் சாலையிலிருந்து வந்த மின்சார விளக்கு வெளிச்சத்தில் கண்ணீர் வடிந்து சுவறிப்போன அவள் முகம் தெளிவாகத் தெரிந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவள் கண்களிலிருந்து கண்ணீர் கட்டு மீறிப் பொங்கி வழிந்தது.

அவளது கண்ணீரைத் தன் கையால் துடைத்துக்கொண்டே அவன் சொன்னான்: "என்ன செய்ய? சத்தியமாச் சொல்லு தேன். நீ நினைக்கிற மாதிரி ஏதாச்சும் நடந்திராமெ, நான் பாத்துக்கிடுதேன்!"

அதற்குள் அவன் குரல் கம்மித் தொண்டை அடைபட்டது. அவளோ அவன் தோளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

உண்மையில் அவர்கள் இருவரும் அந்தப் பயங்கரச் செயலைப் புரிவதற்கு அஞ்சினார்கள்; வெட்கப்பட்டார்கள்; கூசினார்கள். எனினும் சாண் வயிறு இருக்கிறதே!...

வீடுவாசல் சொத்துச் சுகத்தை இழந்து தேரோடும் வீதியில் திருவோடும் கையுமாக அலைகின்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தாம் அந்தத் தம்பதிகள். கிராமத்தில் பிழைப்பில்லை. எனவே அவர்கள் பஞ்சம் பிழைப்பதற்காக 'பட்டணக்கரை'யான திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால், திருநெல்வேலி மட்டும் அட்சய பாத்திரமா, என்ன? எனவே வேலை தேடிச் சலித்துப் போனவர்களாக அவர்களும் தைப்பூச மண்டபத்தில்தான் தங்குவது வழக்கம். ஆனால் தைப்பூச மண்டபத்தில் அவர்கள் கண்ட காட்சியோ—?

பகல் முழுவதும் தூங்கி வழிந்துகொண்டிருந்த சிக்கும் சீழும் பிடித்த பெண்கள், ஒட்டி உலர்ந்த கன்னங்களோடு கந்தல் சேலையை உடுத்திக்கொண்டு நாள்முழுதும் ஈ விரட்டிக் கொண்டு வெயிலிலே உடம்பைக் காயவிட்டுக் கொண்டிருந்த பெண்கள், சாயங்காலம் ஆனதும் திடீரென்று கலகலப்புப் பெற்று விடுவார்கள். கந்தல் சேலையை வரிந்து கட்டி தமது உடம்பிலே மோகன சக்தியைஉருவேற்றமுனைவார்கள். காலணாவுக்கு வெற்றிலை பாக்கு வாங்கி உதட்டில் சாயம் ஏற்றி, எண்ணெய்ப்பசை வரண்ட கூந்தலை ஆற்று நீரில் நனைத்து வாரி முடிந்து கொண்டு, வேட்டைக்கு வரும் 'மம்முதர்'களை எதிர்பார்த்துக் காத்து நிற்பார்கள்.

இருட்டி விட்டால் பிறகு ஆற்றங்கரை அவர்கள் ராஜ்யம் தான். இரவு வேளைகளில் அவர்களுடன் யார் யாரெல்லாமோ பேசுவார்கள். சில சமயம் தரகன் ஒருவன் வருவான். கசாப்புக்கடைக்கு இழுத்துச் செல்லப்படும் ஆட்டைப் போன்று பரக்கப் பரக்க விழித்துக் கொண்டு வரும் எவனாவது ஒருத்தனை அழைத்துக் கொண்டு வருவான். அந்தப் பெண்களும் நெடுநாள் பழகி விட்டவர்களைப் போன்று குழைந்து குழைந்து ஆபாசமான வார்த்தைகளைப் பேசுவார்கள்; சரச சல்லாப மாடுவார்கள்.

விபசாரம்தான்! ஆனால் அதற்குத்தான் அந்தப் பெண்கள் தங்கள் உள்ளத்தை எவ்வளவு நாள் பதப்படுத்திக் கல்லாக்கினார்களோ? 'ரிஷிபக்குவம்' என்கிறார்களே, அந்த மாதிரியான ஒரு பக்குவ நிலையைப் பழக்கப் படுத்தி யிருந்தார்கள் அவர்கள்.

சிறிது நேரத்தில் வேசையாடிச் சம்பாதித்த காசுகள்

அவர்களின் கைகளிலே குலுங்கும்...

இந்த 'நித்திய கர்மத்தை' அவனும் அவளும் பல நாட்களாகக் கவனித்தார்கள். உடல் உழைப்பைவிட, உடலை விற்பதில் பணம் சுலபமாக வந்ததைக் கண்டார்கள். எனவே அவர்களும் ஒரு முடிவுக்கு வர ஒரு மாத காலமாயிற்று. இரவு பகலாக அழுதழுது யோசித்து, மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு தீர்மானித்த முடிவு அது.

கிரௌஞ்ச பட்சிகளைப்போல் வாழ்ந்து வந்த அந்தத் தம்பதிகள் இந்தச் செயலின் கொடூரத் தன்மையை எண்ணியெண்ணி, ஒருவரை யொருவர் சாகக் கொடுத்தவர் மாதிரி இருவரும் விம்மி யழுதார்கள்,

பிறகு அவன்தான் அவளைத் தேற்ற முனைந்தான்;

''அழாதேயேன்! யாராவது கேக்கப் போறாங்க!''

''உம்!''

''இப்படிச் செய்யாட்டி, இன்னிக்கும் பட்டினிதான்!''

அவள் ஆமோதிக்கும் பாவனையில் தலையை ஆட்டினாள்.

''இந்தா பாரு, செல்லி. இங்க பாரு. நீ அப்படி எட்டி நில்லு. நான் இப்படி மறைவா நின்னுக்கிடுதேன். சரிதானே'' என்றான் அவன்.

''ம்!''

''பிறகு நானு சொன்ன மாதிரி...''

அவள் யந்திரம் போல் நடந்தாள். மந்திரத்தால் கட்டுண்டவனைப்போல் அவனும் அவள் பின் நடந்தான். இருவரும் ஆற்றைக் கடந்து, ஆற்றின் கீழ்கரையிலுள்ள அடவிப் பிராந்தியத்துக்குள் புகுந்தார்கள்.

## 3

செங்கோட்டைச் சாமிக்கு அன்றிரவு தூக்கமே கொள்ளவில்லை. 'மாய வலை'யில் சிக்கிய அவரது மனக் குரங்கு கட்டுத் தறியிழந்து துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. அந்தக் குரங்கை வசப்படுத்த எண்ணி அவர் நாமார்ச்சனைகள் எல்லாம் உச்சரித்துப் பார்த்தார்; தமக்குத் தெரிந்த யோகாம்ச முறைகளின் மூலம் 'சித்தத்தை ஒடுக்கிச் சிவத்திலே ஈடுபட'ப் பாடுபட்டார். ஒன்றும் பயனில்லை. இனிமேலும் மண்டபத்தில் படுத்திருந்தால் அங்கு நடைபெறும் பாவ கிருத்தியத்தில் தாமும் ஈடுபட நேரிடலாம் என்று அஞ்சினார், செங்கோட்டைச் சாமி. எனவே 'பெண்ணாகி வந்த மாயப் பிசாச'ங்கள் கண்ணில் தட்டுப்படாத பிரதேசத்துக்குச் சென்று புலன்களை ஒடுக்கி அடக்கத் திருவுள்ளம் கொண்டு எழுந்தருளினார்; காவித் துண்டை உதறிக் கட்கத்தில் இடுக்கியவாறு ஆற்றைக் கடந்து அடவிப் பகுதிக்கு வந்து சேர்ந்தார்.

நிச்சயம் அங்கு மனச் சாந்தி கிடைக்கும் என்பது சாமிகளின் நம்பிக்கை.

ஆனால், அப்போதுதான் அவர் அந்த உருவத்தைப் பார்த்தார். அந்தப் பகுதியில் 'கறுப்பு'க்களின் நடமாட்டம் உண்டு என்பதை முன்னமே அறிவார். எனவே அவர் மனம் ஒரு கணம் திடுக்கிட்டுக் குலுங்கியது. எனினும் தைரியத்தை

வரவழைத்தவாறு, ''யாரது?'' என்று துணிந்து கேட்டார்.

பதிலில்லை.

''யாரது?'' இப்போது அவருக்கு வார்த்தைகள் தொண்டைக் குழிக்கு மேல் வரவில்லை.

உருவம் லேசாக ஆடிற்று. உருவத்தின் கால்கள் தரையில் பாவி நிற்பதும் தெரிந்தது. 'பேயில்லை' என்று தெளிவும் தைரியமும் பிறந்தது அவருக்கு. அருகில் நெருங்கிப் பார்த்தார்.

ஒரு பெண்.

அவள் அங்கிருந்து அசையவில்லை; பேசவும் இல்லை.

சாமியாருக்கோ அவளை நெருங்க நெருங்க, சியவன முனிக்கு வாலிபம் திரும்பியது போல் உடம்பில் தெம்பு பிறந்து துள்ளத் தொடங்கியது.

''யாரது?'' இப்போது வார்த்தைகள் கம்பீரமாக ஒலித்தன.

பதிலில்லை.

''நீ எதுக்கு நிக்கிறேன்னு எனக்குத் தெரியும்!''

அவள் இன்னும் பேசாமடந்தையாகவே நின்றாள்; மௌனம் சர்வார்த்தசாதகம்! சாமிகளின் உணர்ச்சிகள் உசும்பிவிட்டன. பலமுறை படத்தைக் கீழே போட்டுச் சோர்ந்து போன அவரது காமாந்தகாரம் இப்போது திடீர் வேகத்தோடு படமெடுத்துச் சீறியது. எந்த எண்ணத்தைக் கொல்ல வேண்டுமென்று ஏகாந்தத்தை நாடி வந்தாரோ, அந்த எண்ணம் இப்போது அவரையே கொன்று விடுவது போல் தகித்தது.

யாரும் காணாத அந்த இருட் பிரதேசத்திலே தமது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வதால் தமது நல்ல பெயருக்குக் களங்கம் எதுவும் ஏற்பட்டு விடாது என்று தோன்றியது அவருக்கு.

மறுகணமே அவர் தமது மடியைத் துழாவி, அதிலிருந்து இரண்டு ஒற்றை ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவளிடம் நீட்டினார்; அவளுடைய கரங்கள் அந்த ரூபாய்களை யந்திரம் திரம் போல் பெற்றுக்கொண்டன. அடுத்த விநாடியே அமைதியற்றுத் தவித்துக்கொண்டிருந்த செங்கோட்டைச் சாமிகள் அவளைக் கட்டியணைத்துக் கொள்வதற்காக, அவளுடைய தோள்மீது கையைப் போட்டார்!...

''ஐயையோ! பாவி கையைப் புடிச்சி இழுக்கானே!'' என்று அந்தப் பெண் திடீரென்று கூச்சலிட்டாள்.

மறுகணமே மரத்துக்குப் பின்னாலிருந்து ஒருவன் துள்ளியோடி வந்து, சாமியாரை வெறி தீரும் மட்டும் பைத்தியம் பிடித்தவனைப்போல் தாக்கிப் புடைத்தான்; அவளுக்கும் சேர்ந்து அடி விழுந்தது. எதிர்பாராது நேர்ந்த தாக்குதலைச் சமாளிக்கமாட்டாமல் சாமியார் தலைதெறிக்க ஓடலானார்...

அவள் அப்படியே ஆற்றங்கரையில் அமர்ந்து கேவிக் கேவி அழுதாள். அவனோ கல்லால் அடித்த சிலையைப்போல் அவளருகே ஆடாது அசையாது உட்கார்ந்திருந்தான். ஒருவர் முகத்தில் ஒருவர் விழிக்கக் கூசியவர்களாக, இருவரும் ஆற்றையே வெறித்து நோக்கிக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் எவ்வளவு நேரம் அப்படி இருந்தார்களோ, தெரியாது.

வானத்திலே விடிவெள்ளி முளைத்தது.

அவன்தான் பேச ஆரம்பித்தான்.

''நானு உன்னை அடிச்சது தப்பு. என்னை மன்னிச்சிரு, செல்லி!''

''நீ என்னேயை அடிச்சிருக்கக்கூடாது; அடிச்சிக் கொன்னுருக்கணும்!'' என்றாள் அவள்.

''பொஞ்சாதியை... இல்லெ.. நானு தான் செத்துப் போவணும்!''

''இல்லே. நானுதான் சாவணும். என் உடம்பை அவன் தொடுகிற வரையிலும் நானு உசுரை வச்சிருந்தேன் பாரு!'' என்று கூறியவாறே அவள் கேவிக் கேவி அழுதாள்.

''குத்தம் எம்பேரிலேதான்... நானு சொல்லித்தானே நீ அப்படிச் செஞ்சே!''

அவள் பதில் பேசவில்லை.

கீழே கிடந்த இரண்டு ரூபாய் நோட்டுக்களையும் எடுத்து அவன் அவளிடம் நீட்டினான்:

''இந்தா!''

''இது யாருக்கு வேணும்?...'' ரூபாய் நோட்டுக்களை அவன் கரத்திலிருந்து அவள் வெடுக்கென்று பிடுங்கி, அவற்றைச் சுக்கு நூறாகக் கிழித்து ஆற்றிலே விட்டெறிந்தாள்!

''செல்லி!'' அவனையும் மீறி அவனுக்கு அழுகை வந்து விட்டது; எதிரேயிருந்த மனைவியை இழுத்து அணைத்தவாறு கேவினான் அவன்; அவளும் அவன் மார்பில் ஆழப் புதைந்தவாறு தன் இதய பாரம் தீரும் வரையிலும் பொருமிப் பொருமி அழுதாள்.

இவர்களது துன்ப துயரங்களையெல்லாம் பொருட்படுத்தாதது போல் தாமிரபருணி நதி களகள வென்று சிரித்து விளையாடியவாறு ஓடிக் கொண்டிருந்தது; காலைக் கதிரவனின் இளங்கதிர்கள் நதிப் பரப்பின் மீது ஜரிகைத் துகள்களை வாரியிறைத்தது போல் ஒளி செய்யத் தொடங்கின.

அருணோதயப் பொழுதின் அமைதியைப் பிளந்துகொண்டு தான் செய்த பாவச் செயலுக்காகக் கசிந்து கண்ணீர் மல்கி, செங்கோட்டைச் சாமியார் பாடிய திருவெண்காடரின் பாடல் ஆற்றுப் படுகையிலே மிதந்து வந்து அடவிப் பிராந்தியத்திலே எதிரொலித்தது:

காதென்றும் மூக்கென்றும்
கண்ணென்றும் காட்டி,
என் கண்ணெதிரே
மாதென்று சொல்லி
வருமாயை தன்னை
மறலிவிட்ட
தூதென்று எண்ணமல்
சுகமென்று நாடும்
இத் துர்ப்புத்தியை
ஏதென்று எடுத்துரைப்பேன்
இறைவா! கச்சி
ஏகம்பனே! ★

★

''கடவுள் எல்லா இடத்திலும் இருக்க முடியாது; எனவே தான் அவர் தாய்மார்களைப் படைத்தார்.''

— யூதப் பழமொழி

ரசிகமணி டி. கே. சி. அவர்கள் காலமாகி ஓராண்டுக் காலம் பூர்த்தியாகிறது. தமிழ்க் கவிதையை எல்லோரும் உணர்ந்து அநுபவிக்க வேண்டும் என்ற உன்னதநோக்கத்தோடு பணிபுரிந்ததமிழன்பர் டி.கே.சி. அன்னாரது நினைவுநாள் கொண்டாடப்பெறும் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் இந்த நினைவுக்குறிப்புக்களை வெளியிடுகிறோம்.

கட்டுரையாளர் சிறந்த தமிழ் வித்வான். டி. கே. சி. யின் அந்திம காலத்தில் அன்னாரது அருகிலேயே சில வருட காலமாக இருந்து, தமிழ்ப் பாடல்களையும், டி. கே. சி. யின் உரையாடல்களையும் கேட்கும் பாக்கியத்தைப் பெற்றவர்.

டி. கே. சி. யைப் பற்றி நாம் அறிந்திராத பல புதிய ரசமான உரையாடல்களை நமக்குத் தருகிறது இந்த நினைவு மணி மாலை.

# டி. கே. சி. — சில நினைவுகள்.

**ல. சண்முகசுந்தரம்**

○

மூன்று வருட காலமாகவே டி. கே. சி. யை மரண பயம் பிடித்துக்கொண்டது. எந்த நேரத்திலும் தம்முடைய உயிர் போய்விடும் என்பதில் டி. கே. சி. க்கு நம்பிக்கை விழுந்து விட்டது. அது காரணமாக டி. கே. சி. யின் உள்ளத்தில் எத்தனையோ மாறுதல்கள் உண்டாகி விட்டன. தம்முடைய நண்பர்கள் காலமான செய்தியின் மூலம் டி. கே. சி. இந்தப் பருவத்தில் தான் மனம் கலங்கினார். டாக்டர் திருமூர்த்தி காலமான செய்தி கேட்டு "மரணம் பொல்லாதது. அதைவிடப் பொல்லாதது மரணமே இல்லாதிருப்பது" என்று சொன்னார். திரு. வி. க. இறந்த செய்தியைக் கேட்டவுடன் "சங்கிலி அறுந்து விட்டது. இனிமேல் சாதுக்கள் மனசை ஆட்டுவதற்கு ஊஞ்சல் இல்லாமல் போய்விட்டது" என்றார்.

★ ★ ★

பேராசிரியர் ஐன்ஸ்டீன் இஸ்ரேல் நாட்டு ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்க மறுத்து விட்ட செய்தியை ஒரு சமயம் டி. கே. சி. யிடம் சொல்ல நேர்ந்தது. அப்பொழுது டி. கே. சி. சிரித்துக்கொண்டே என்னிடம் சொன்னார்:

"மௌனச் சாமி மடத்துக்கு நீங்கள் அதிபதியாக வேண்டுமென்று என்னை அழைத்தால் நான் இணங்க முடியுமா? மௌனத்தைவிட மரணம் உயர்ந்ததல்லவா?"

★ ★ ★

பண்பாடு என்கிற வார்த்தையைத் தமிழில் உண்டாக்கியது டி. கே. சி. தான். வார்த்தையை உண்டாக்கியது பெரிதல்ல. அந்த வார்த்தைக்குரிய அவ்வளவு பொருளையும் டி. கே. சி. தம்முடைய வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினார். ஒரு சமயம் குன்றக்குடி அடிகளிடம்

டி. கே. சி. பண்பாடு என்றால் என்ன என்பதைச் சொன்னார்.

"வாவிலாங்குடி (இது தென்காசியை ஒட்டியுள்ளது) வயல் இருக்கிறதே. அது ஐயாயிரம் ஆண்டுகளாகப் பண்படுத்தப் பட்டு வந்திருக்கிறது. பாண்டியர்கள் காலம் முதலாக உழுது உரம் போட்டு வளமாக்கி இருக்கிறார்கள். விளைவும் ஏராளமாக விளைகிறது. அளவும் படியும் நிலச்சுவான் வீட்டுக்குத் தானாக வந்துவிடும். சரள் தரையில் நெல்லை விதைத்தால் அப்படி வருமா? இனி வாவிலாங்குடி வயலில் ஒரு பிடி மண்ணை எடுத்து வாயில் போட்டுப் பார்த்தால் நிலத்தின் பண்பாடு தெரிந்து விடுமா? நிலத்தின் பண்பாட்டை அதன் விளைவில் பார்க்கவேண்டும்; மக்களுடைய பண்பாட்டை மக்களின் வாழ்க்கையில் பார்க்கவேண்டும்."

★ ★ ★

டி. கே. சி. யினுடைய பேச்சில் எவ்வளவு விஷயம் இருக்குமோ அவ்வளவு ஹாஸ்யமும் இருக்கும். ஒரு முறை அவர் பின்வரும் செய்தியைக் கூறினார்.

"என்னுடைய மகன் கல்யாணத்துக்கு நடனமும் நாதசுரக் கச்சேரியும் ஏற்பாடு பண்ணியிருந்தது. திருநெல்வேலி பாண்டு வாத்தியக்காரன் தன்னுடைய கச்சேரியையும் கல்யாண வீட்டில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினான். உடனே நான் கேட்டேன் 'கச்சேரிக்கு ரூபாய் எவ்வளவு?' என்று. அவன் 'பதினைந்து ரூபாய் போதும்' என்றான். 'அப்படியானால் இருபத்தைந்து ரூபாய் தருகிறேன். நீ வாசிக்காமல் மட்டும் இருந்தால் போதும்' என்று சொல்லி விட்டேன்."

டி. கே. சி. இப்படி பேசுகிற சமயம் தமக்குள்ளாகச் சிரித்துக் கொள்வார். சிரிப்பு முகத்தில் மலர்ந்து பிரகாசிப்பதும் உண்டு. நாணங்கொண்ட யுவதியைப் போல் மீசைக்குள் நெளிந்து கொள்வதும் உண்டு.

'ஒரு அகிலஉலகப் பெண்மணி' யைப்பற்றி ஒருமுறை டி. கே சி. குறிப்பிட்டார்.

"அந்த அம்மாளுக்குத் தமிழ்ப் பண்பாடு என்றால் பிடிக்காது. தமிழ்ப் பெண்தான். நம்முடை பெண்கள் சேலை கட்டினால் அவள் கவுணைப் போடுவாள். செந்தூரப் பொட்டிட்டால் அவள் லிப்ஸ்டிக்கைத் தடவிக்கொள்வாள். நம்முடைய பெண்கள் தலை முடித்துக் கொண்டை போட்டால் அவள் மொட்டையடித்து விடுவாள். அவளைத் திருத்த வேண்டும் என்றால் மற்றப் பெண்கள் மொட்டையடித்துக்கொள்ள வேண்டியதுதான். தப்பித் தவறி அவளுடைய வாயில் தமிழ் வார்த்தை வந்து விட்டாலோ, வாயைக் கொப்புளித்துக்கொள்வாள்!"

★ ★ ★

ஒரு நாள் ஐம்பது வருடங்களுக்கு முன்பு மக்கள் எப்படி வாழ்ந்து வந்தார்கள் என்பதை ரசிகமணி எடுத்துச் சொன்னார்:

"அந்தக் காலத்தில் யாருடைய வீட்டிலும் வெண்கல பாத்திரங்

கள் கிடையாது. தண்ணீர் குடிப்பதுகூட மண் கலயத்தில் தான். சட்டை ரவிக்கை என்பது கிடையவே கிடையாது. வீட்டிலுள்ள சகல சாமான்களும்களும் அடுக்களைப் பலகையில் தான் வைக்கப்படும். வேட்டியும் துண்டும் சேலையும் கொடிகளில் தான் கிடக்கும். பீரோ என்பது இல்லை.சாப்பாடு பழையதுதான். கல்யாண வீட்டில் கூடப் பழையதுதான். தம்பிடிக்கு மூன்று தீப்பெட்டிகள் விற்கப்பட்டன. அப்பொழுதும் தெருக் கடந்து தீ எடுத்து வந்துதான் பல வீடுகளில் தீப்பற்ற வைப்பார்கள். என்னுடைய வாத்தியாருக்கு நாலு ரூபாய் மாதச் சம்பளம். அதில் கோட்டுத்தான்; ஜரிகைத் தலைப்பாகைதான்! மாதா மாதம் இரண்டு ரூபாய் சீட்டு வேறு போட்டு வந்தார். டியூஷனுக்கோ மாதம் கால் ரூபாய்தான். எங்களுடைய வீட்டில் வருஷத்துக்கு ஆறு ரூபாய் பெறுமான ஒரு கோட்டை நெல்லைக் கொடுத்து வந்தோம். அவ்வளவு தான். டியூஷன் டியூஷன் என்று என் உயிரையே வாங்கி விட்டார். அதுமாத்திரமா? பள்ளிக்கூடத்திலிருந்து மணல் சுமந்து வருவதிலிருந்து பெருக்குவதுவரையும் எதற்கும் என்னைக் கட்டளை இடுவதில்லை."

இவ்வாறு சொல்லிவிட்டு டி. கே. சி. லேசாகச் சிரித்துக் கொண்டார். நாணமும் நளினமும் கலந்த பார்வையோடு மேலும் சொன்னார்:

" ஆசிரியர் சில பையன்களைக் கூப்பிடுவார். வீட்டுவரைக்கும் என்னைச் சுமந்து கொண்டு போகும்படியாகவும் கட்டளை இடுவார்."

★ ★ ★

வசனத்தையும் கவிதையையும் பின்வருமாறு சொன்னார்: "வசனம் என்பது ரயிலில் போவது போன்றது. கவிதையோ குதிரைச் சவாரிபோன்றது. ரயிலில் போனால் இறங்குகிற ஸ்டேஷனில் உணர்ச்சி இல்லாமல் இறங்குவோம். குதிரையோ டக் டக்கென்று போய் இறங்குகிற இடத்திலும் டக்கென்று நிற்கும். பிரயாணம் செய்கிறோம் என்பது குதிரைச் சவாரியில்தான் தெரியவரும்."

★ ★ ★

ஒரு நாள் டி. கே. சி. ஒரு பாடலைச் சொல்லிக்கொண்டிருக்கும் போது, ஒரு நண்பர் நாற்காலியிலிருந்து பெஞ்சுக்கும், பெஞ்சிலிருந்து பாய்க்குமாக நிலைகொள்ளாமல் போய்ப்போய் உட்கார்ந்து வந்தார். இதைக் கண்டு சலித்துப்போன டி.கே.சி. " நண்பரவர்களே! வீட்டில் உள்ள எதிலும் உட்காரச் சரிப்படாவிட்டால், வெளியிலிருக்கிற மரக்கிளையில் போய் உட்கார்ந்தாவது பாடலைக் கேளுங்கள்!" என்று சொல்லிவிட்டார்!

★ ★ ★

ரசிகமணியின் முகம் தெளிவும் பிரகாசமும் நிறைந்த முகம்; அகன்ற நெற்றி, முக்கியமான வேளைகளில் அந்த அழகான நெற்றியில் ஒரு சந்தனப் பொட்டு இருக்கும். அந்தப் பொட்டு சிறியதாக இருந்தாலும் முகத்தின் காந்தியையும் நெற்றி

யின் விசாலத்தையும் எடுத்துக் காட்டும்.

டி. கே. சி. சொல்வார்:

"ஒன்றைத் தெரிய வேண்டுமானால் அது மாத்திரம் போதாது. அதோடு வேறொன்றும் இருந்து துணை செய்ய வேண்டும். ஆனால் துணைசெய்ய வருகிற கருவிக்கு ஒரு அளவு இருக்கிறது. அது அளவை மீறிவிடுமானால், அது துணை செய்ய முடியாமல் போவது மாத்திரமல்ல, அதனால் விபரீதமே ஏற்பட்டுவிடும். துணை செய்ய ஒரு சாதனம் கிட்டிவிட்டால் அதையே 'ரிதும்' என்று சொல்லிவிடலாம். உதாரணமாக மலையின் உயரத்தைக் காட்ட வேண்டுமானால் மேகத்தை அதன் ஓரங்களில் வைத்துவிட வேண்டும். மூன்றாம் பிறைச் சந்திரனை ஒரு மூலையில் போட்டுவிட்டாலும் போதும். 'அருவியம் குன்றம்' என்று சொல்லிவிட்டாலும் போதும். அதேபோல் நெற்றியையும் முகத்தையும் எடுத்துச் சொல்ல ஏதாவது ஒரு திலகம்; அளவோடு ஒரு திலகம். அது போதும்."

★ ★ ★

ஒரு நாள் இரவு மணி எட்டு. டி. கே. சி. களைப்போடு ஈசி சேரில் சாய்ந்து படுத்திருந்தார். அப்போது ஒரு கனவான் அங்கு வந்து சேர்ந்தார். அவர் என்னை நோக்கி, "ரஷ்யாவில் ஜனநாயகம் நடக்கிற லட்சணத்தைப் பார்த்தீர்களா? நேற்றுவரை மந்திரியாய் இருந்த பெரியா இன்று துரோகியாய் விட்டார்; சுடப்பட்டும் விட்டார்!" என்று கூறத் தொடங்கினார்.

பதில் சொல்ல வேண்டியது என்னுடைய பொறுப்பு. ஆனால் எதிர்பாராதவிதமாக டி. கே. சி. எழுந்து பதில் சொல்லத் தொடங்கிவிட்டார்: "வாஸ்தவம். பெரியாவை ரஷ்யர்கள் சுட்டுவிட்டார்கள். ரஷ்யாவில் இருந்ததோ ஒரு பெரியாதான். அவனும் ஒழிந்து விட்டான். எவ்வளவோ நல்லதாய் போய் விட்டது, பெரியாவின் மரணம். ரஷ்யா நீங்கலாக, ஒவ்வொரு நாட்டிலும் எத்தனை பெரியாக்கள் இருக்கிறார்கள் தெரியுமா? அத்தனை பேரையும் சுட்டுத் தொலைத்தால் அல்லவா உலகம் ரஷ்யாவைப் போல் சேமமாய் வாழமுடியும்? நம்முடைய நாட்டிலும் வேறு நாடுகளிலும் பெரியாக்களுக்குத்தான் கொண்டாட்டம். ஆனால் ரஷ்யாவில் அப்படியல்ல!"

கனவான் ஒன்றுமே பதில் சொல்லவில்லை. சிறிது நேரத்தில் டி. கே. சி. தமது குரலுக்கே உரிய கம்பீரத்தோடு மேலும் பேசினார்: "மக்களுக்குப் பலன் கொடுக்கிற நல்ல காரியங்கள் தோன்றுகிற பொழுதே அதை ஒட்டித் தீமையான களைகளும் உண்டாகிவிடும். கண்ணும் கருத்துமாக இருந்து களைகளைப் பிடுங்கி எறிந்துவிட வேண்டும். களைகளைப் பிடுங்குவது உயிர்க்கொலை ஆயிற்றே என்று வேதாந்தம் பேசுவது அறிவுடைமையாகாது. அப்படியெல்லாம் வேதாந்தம் பேச ரஷ்யமக்கள் தமிழ் ஆசிரியர்களோ, பி. ஏ.

பி.எல். களோ அல்ல. நம்முடைய அண்ணாத்தைகளோ களைகளுக்குப் பாத்திகட்டித் தண்ணீரும் விடுவார்கள்; களை பிடுங்குகிறவனைப் பார்த்துக் கைகொட்டியும் சிரிப்பார்கள்!"

இதைக் கூறும்போது டி. கே. சி. யின் குரலில் ஏளனமும் நையாண்டியும் கலந்து கிடந்தது. கொதிப்பு அவ்வளவாக இல்லையென்றாலும் சூடு அப்படியே இருந்தது!

★ ★ ★

நமது நாட்டுக் கல்வி முறையைப்பற்றி டி. கே. சி. ஒரு நாள் கூறினார்: "விஷயம் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் சரிதான். மனிதன் அதை அறிகிறபொழுது அது சிறுத்துவிடும். அதாவது விஷயத்தைவிட மனிதன் எவ்வளவோ பெரியவன். ஆனால், நம்முடைய கல்விச்சாலைகளோ மனிதனை அவமானப் படுத்தி விஷயத்துக்கு ஆலத்தி எடுக்கின்றன. அப்படி இருக்க, பள்ளிக்கூடங்களையும் யுனிவர்சிட்டிகளையும் தீவைக்க வேண்டுமென்று நான் சொல்வதில் தப்பென்ன இருக்கிறது? ஆனந்தத்தைக் கொடுப்பதுதான் உண்மைக் கல்வி. பக்குவமாக இதயத்துக்குள் போய் ஜீரணமாகி, இதயத்தை வளர்க்காத எதையும் கல்வி என்றும் ஒப்புக்கொள்ள முடியாது. மனிதனைச் சங்கடப் படுத்துவது, குழப்பத்துக்குள்ளாக்கி மனிதனை மிரட்டுவது, விஷயமே பெரிதென்றும் மனிதன் சிறியவன் என்றும் மனிதனை அவமானப்படுத்துவது ஆகிய இழிவான காரியத்தைச் செய்கிற இன்றைய படிப்பைக் கல்வி என்று யார்தான் ஒப்புக்கொள்ள முடியும்?"

★ ★ ★

ரஷ்யாவைப்பற்றி டி. கே. சி. க்கு மேலான அபிப்பிராயம் இருந்து வந்தது. ரஷ்ய நாட்டுக் கல்வி முறையை அவர் போற்றிப் புகழ்ந்தார். ஒரு முறை ரஷ்யாவைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்:

"எனக்கு ஒரே ஒரு ஆசை. ரஷ்யாவைக் கண்குளிரப் பார்க்க வேண்டும் என்று. ஹெலிக்காப்டர் விமானத்தில் ஏறிக்கொண்டு நீப்பர் அணையையும் ஸ்டாலின் கிராடையும் உக்ரேன் பண்ணைகளையும் பார்த்து வரவேண்டும். ஹெலிக்காப்டரிலிருந்து இறங்கி இளைப்பாறுகிற ஒவ்வொரு இடமும் பள்ளிக்கூடமாக இருக்க வேண்டும். ஆனந்தமாக மக்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளாக இருக்கவேண்டும். அங்குள்ள பள்ளிக் குழந்தைகளும் தொழிலாளிகளும் நமக்கு அதிசயமான பல அனுபவங்களைச் சொல்வார்கள். கேட்கக் கேட்க நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும். ரஷ்ய மக்களுக்கு நம்மைப் போல் சோறும் துணியும் பற்றிய கவலை கிடையாது. பணத்தை எப்படித் திரட்டுவது என்ற கவலையும் கிடையாது. எனவே அவர்களுடைய இதயம் தெளிவாக இருக்கும். வஞ்சனையும் கபடமும் இல்லாத ஒரு சமுதாயத்தைக் காட்டிலும், அதோடு உறவாடுவதைக் காட்டிலும் வேறு என்ன இன்பம் தேவை? ★

★ "புதுமைப் பித்தன்" பாராட்டுக் கதை

வீரமும் புகழும் இரட்டைப் பிறவிகள் என்றுதான் பொதுவாக நாம் கருதக் கூடும். ஆனால் இன்றைய உலகில் உழைப்பும் பயனும் எவ்வாறு ஒன்றோடொன்று இணைந்து நில்லாது, உழைப்பவன் ஒருவனும் உண்பவன் ஒருவனுமான நியதி நீடித்து வருகிறதோ, அது போலவே வீரம் விளைப்பவன் ஒருவனும் புகழடைபவன் வேறொருவனுமாக உள்ள நிலைமையும் நீடிக்கிறது. ரெங்கத் தேவன் விளைத்த வீரத்தால், புகழை அடைந்தது யார்? கதையைப் படியுங்கள்.

* * * * * * * * * * * * *

# வீரமும் புகழும்

சி. சுப்பிரமணியம்

●

கோயில்பட்டித் தாலுகாவிற்கு நிலவளம் நீர்வளம் முதலிய பெருமைகள் இல்லாவிட்டாலும் மலைவளம் மட்டும் நிச்சயம் உண்டு. மலைவளம் என்றதும் வானளாவிய கொடுமுடிகள் நிறைந்த வளம் அல்ல. அவ்வளவு பெரிய பூகோளப்பெருமைக்கு இடமில்லாவிட்டாலும், இதிகாசப் பெருமை படைத்த மலைவளம் உண்டு.

அந்த மலைவளத்தின் பூர்விக வரலாறு ராமாயண காலம் தொட்டுத் தொடக்கம் என்பது கர்ண பரம்பரை வழக்கு.

அதாவது நாகபாசத்தால் கட்டுண்டு விழுந்த லஷ்மணுதி வானரர்களை எழுப்புவதற்காக அனுமான் சஞ்சீவி மலையைப் பேர்த்து எடுத்துக்கொண்டு வந்தபோது, அந்த மலையில் குடியிருந்த அகஸ்தியரையும் மலையோடு தூக்கிக் கொண்டு வானமண்டலம் வழியாகப்புறப்பட்டு வந்தானும். மலை அசைவதைக்கண்ட அகஸ்தியர் 'கைலாசநாதனுக்கு மறுமணமா என்ன?' என்று ஒரு கணம் ஆலோசனை செய்தாராம். ஆனால், மலை இடத்தை விட்டுக் கிளம்பி மேலே பறப்பதைக் கண்டதும், அவர் நடுநடுங்கிப் போய்விட்டாராம். இருப்பினும் பழைய நினைப்பில் தமது பெருவிரலை மலைமீது அழுத்தி ஊன்றினராம். உடனே அவர் கால் சுளுக்கிக்கொண்டதோடு அகஸ்தியரும், அவரிருந்த பகுதியான மலையும் பெயர்ந்து பூமியில் விழுந்ததாம். மிஞ்சிய பகுதியை மட்டும் அனுமான் கையோடு கொண்டு சென்று விட்டானும்.

அகஸ்தியரோடு விழுந்த மலைப் பகுதி கோயில்பட்டிப் பகுதியில் விழுந்து 'குருமலை' என்று பெயர்பெற்றதாம்.

இதுதான் இன்றுவரை நிலைத்து வந்துள்ள இதிகாசப் பெருமை.

எனவேதான் இன்றும், யாருக்காவது நாகப்பாம்பு தீண்டி விட்டால்,அவர்களை இம் மலையடிவாரத்தில் உள்ள கல் மண் மண்டபத்தில் படுக்க வைத்து விட்டால் குருமலைக் காற்று பட்டவுடனே விஷத்தின் வேகம் இறங்கிவிடுவதாக ஊர் மக்கள் பேசிக்கொள்கிறார்கள். குருமலையில் சஞ்சீவி மூலிகையில் கொழுந்து எங்கோ இருக்கிறதாம்...

குருமலை அடிவாரத்திலிருந்து ஒரு கல் தொலைவிற்கு, சுற்றிலும், கிளுவை மரங்களும், பொத்தைக் கள்ளியும், குறுஞ் செடிகளும் இலந்தைஞ் செடிகளும் அடர்ந்து கிடக்கிறது.

பகலில் ஆடுமாடு மேய்க்கும் மாட்டுக்காரச் சிறுவர்களைத் தவிர, பாரஸ்ட் ஆபீஸரின் கண் பார்வைக்குத் தப்பி விறகுக் கட்டுகளை திருட்டுத்தனமாகக் கடத்திச் சென்று வயிறு வளர்க்கும் சுற்றுப்பட்டி ஏழை எளியவர்களைத் தவிர, மற்ற மனிதர்களைப் பார்ப்பதென்பது அபூர்வம்.

பக்கத்தூர் பெரிய பண்ணை நாயக்கரின் மாடுகளை மேய்க்கும் ரெங்கத்தேவனின் ஆட்சி பெரும்பாலும் இங்குதான்; அவன்தான் சுற்றுப்பட்டி மாட்டுக்காரச் சிறுவர்களின் ஏகச்சக்ராதிபதியாக விளங்கினான். சல்லடத்தை வரிந்து கட்டி அதன் மேல் சாயத் துண்டைக் கோவணம் பாய்ச்சியிருப்பான். தலையிலே ஒரு முண்டாசு, பண்ணை நாயக்கரின் தலையைக் கண்டாலொழிய முண்டாசு இறங்காது.காலில் முள்குத்தாமலிருக்கச் செருப்பு. கரத்திலே லாகவமாகச் சுழன்று கொண்டிருக்கும் பாலாத் தடி. இடுப்பிலே கவட்டையில். கஞ்சிக் கலயம் யாராவதொரு மாட்டுக்காரச் சிறுவன் தலையில்.

ரெங்கத் தேவனின் கவட்டை வில்லிலிருந்து கல் புறப்பட்டு விட்டதென்றால் அர்ச்சுனனின் காண்டீபத்திலிருந்து விடுபட்ட கணைமாதிரி குறி தப்பாது. மலையில் அவன் செய்யும் காரியங்கள் எல்லாம் கிளைக்குக் கிளை தாவும் 'கிளைஞரை'யும் தோற்கடித்துவிடும்.

பண்ணையார் வீட்டு மாடுகளோ ஒரு நிலையில் நின்று மேயாது. திசைகொன்றாகத் திரியும். தூரத்துப் பச்சையைக் கண்டு மலைக்கு மறுபுறம் கூடச் சென்றுவிடும். பண்ணையாருக்குச் செல்லப் பிள்ளையாக விளங்குவது அதிருஷ்டச் சுழியுள்ள செவலைப் பசுதான். பண்ணைக் குடும்பமே கொழுத்து வளர்வது இதன் பால், தயிர், நெய்யில்தான்.

மலைமேலுள்ள செங்குத்தான பாறை நிழலில் உட்கார்ந்துகொண்டு தில்லானா பாடிக்கொண்டிருக்கிறான் ரெங்கத்தேவன்.

மேற்கே மஞ்சள் வெயில் இளந்தளிர்களின் மேல் பொன் முலாம் பூசிக்கொண்டிருக்கிறது. செம்மண் தரை மேலுள்ள காக்கைப் பொன் மஞ்சள் வெயிலின் மகத்துவத்தால் ஜொலிக்கிறது.

கிழக்கே கறுத்த மேகக் கூட்டத்தின் படையெடுப்பு.

வானக் கருமையையும், வாடைக் காற்றையும் கண்ட

ரெங்கத்தேவன் தன் சகபாடிகளைக் கூவியழைக்கிறான். மாடுகள் மலை விட்டிறங்கி ஊரை நோக்கி நடை போடுகின்றன.

மந்தை பாதித் தூரம் சென்றிருக்கும். சடசடவென மழை பூமியில் இறங்குகிறது. ரெங்கத்தேவன் எப்பொழுதுமே மாடுகளை உடனிருந்து பத்துவதில்லை. அடிவாரத்தில் இருந்து தனது வழக்கமான குரலில் கத்துவான். மாடுகளும் பழக்கமான குரல் கேட்டு ஊர் எல்லையில் உள்ள குளக்கரையில் தண்ணீருக்கு வந்து நின்று விடும். பண்ணையார் வீட்டு மாடுகளும் கன்றுகளுமாகச் சேர்ந்து எண்ணிக்கை ஐம்பதாகும். துறையில் மாடுகள் தண்ணீர் குடிக்கும் பொழுதே, இன்ன மாடு வரவில்லை என்று கண் பார்வையில் கண்டுகொள்வான். இது அவனது பதின் மூன்று வருட ஊழியத்தில் கிடைத்த அனுபவம்.

மாடுகளும் வழக்கம் போல் தண்ணீர்த் துறையில் வந்து சேர்ந்தன. மழையின் வேகம் சற்று தணிந்தது. அவனும் மந்தையின்மீது தன் கண்ணோட்டத்தைச் செலுத்தினான்.

பெரிய பண்ணை எஜமானரின் கவனத்திற்கும் அடிமை ரெங்கத்தேவனின் அன்பிற்கும் பாத்திரமான செவலைப் பசுவைக் காணவில்லை.

தண்ணீர் குடித்து விடாய் தீர்ந்த ஆயாசத்தில் வீட்டை நோக்கிப் புறப்படத் தயாராய் இருந்த மந்தையைப் பத்திக் கொண்டு போய் ஊரின் தெற்குக் கோடியிலிருந்த தொழுவத்தில் அடைத்து விட்டு, மலையை நோக்கி ஓட்டமும் நடையுமாக விரைந்தான். தூறல் லேசாகப் பெய்துகொண்டிருந்தது. குளக்கரையோரத்திலிருந்த வாழைத் தோட்டத்திற்குக் காவல் இருந்த பெருமாள் குடும்பனிடத்தில் இருந்த ஐந்துகட்டை டார்ச் லைட்டையும், வேல்கம்பையும் வாங்கிக்கொண்டு கரை மேல் நடந்தான். வாடைக் காற்று சில்லெனத் தாக்கியது. இருள் தன் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறது. 'செவலைக் கண்ணூ... செவலைக்கண்ணூ' என்ற ரெங்கத்தேவனின் குரல் காட்டில் எதிரொலிக்கிறது.

ரெங்கன் செல்லமாக இட்ட பெயர்தான் 'செவலைக்கண்ணூ. ரெங்கனின் குரல் கேட்டதுமே செவலைப் பசு 'ம்மா...ம்மா' என குரல் கொடுக்கத் தவறுவதே இல்லை. இன, அறிவு வித்தியாசங் கடந்த அவ்வளவு பாசம்.

'செவலைக்கண்ணூ....' என்று ரெங்கன் வாயிலிருந்து கிளம்பும் ஒலியும், கரத்திலுள்ள டார்ச் விளக்கின் ஒளியும் ஒன்றையொன்று முந்திக்கொண்டு செவலைக்கண்ணுவைத் தேடுவதில் விரைந்தன.

நரிகளின் ஊளை காட்டையே ஒரு உலுப்பு உலுப்பிற்று. ரெங்கத் தேவனின் உடம்பும் க்ஷண நேரம் ஆடியது. செவலை ஒருவேளை நரிக் கூட்டத்தின் மத்தியில் சிக்கிக்கொண்டதோ என்ற சந்தேகம் எழுந்தது. ஊளை வந்த திக்கிலே வெளிச்சத்தைப் பாய்ச்சினான். இருளை விரட்டிக் கொண்டு

போன ஒளி நரிக் கூட்டத்தின் மேல் விழுந்ததும் நரிகள் கலைந் தோடின. செவலை அங்கில்லை என்றவுடன் அவனுக்குச் சற் றுத் திருப்தி ஏற்பட்டது.

வேறு திசையில் தேடப் புறப் பட்டான். மூன்றும் பிறை மூளி நிலவு வானத்தில் தள்ளாடிச் சென்று கொண்டிருந்தது. மங் கிய நிலவொளி மரங்களினூடே புகுந்து இருட்டை ஓடிப்பிடித்து கண்ணும்பூச்சி விளையாடிக் கொண்டிருந்தது.

போகும் வழியில் ஓர் புத ரருகே சலசலப்பு. 'உர்ர்ர்...' என்ற உறுமல். விளக்கின் ஒளி புதரை ஊடுருவுகிறது. ஒரு ஜோடிக் கண்கள் தீப்பிழம் பாய் ஜொலிக்கின்றன. புலியின் உருவம் செடி கொடிகளுக் கிடையே விட்டு விட்டுத் தெரி கிறது. முரட்டுத்தனமும், துணிச்சலும் ரெங்கத் தேவ வனுக்குப் பிறவிக் குணம். புலி வேட்டைக்குப் புறப்பட்டு விட்டான். டார்ச் லைட்டை அணைத்தான். இருளில் பதுங் கிப் பதுங்கி வசம் பார்த்தான்.

தொலைவில் 'ம்மா......ம்மா...' என்ற செவலைக் கண்ணு வின் பரிதாபமான குரல். புலி யின் மூச்சு சற்று வேகமாக வெளியேறுகிறது. புதரிலிருந்து வெளியேறிக் கிளம்பி குரல் வந்த திக்கை நோக்கிக் கிளம் பியது. குரல் வந்த திக்கை நோக்கி நடை போட்டது. எச் சரிக்கையுடன் வேல்கம்பை வலுவாகப் பிடித்த வண்ணம் பின் தொடர்ந்தான். இடுக்க மான பாறை. அதன் ஊடே ஒற்றையடிப் பாதை. புலி அத னுள் புகுந்து பாய்ச்சலுக்குத் தயாராக நிற்கிறது. ரெங்கத் தேவன் புலி பதுங்கியுள்ள இடத்திற்கு நேர் எதிராக உள்ள குத்துப்பாறையின் மறைவில் தாக்குவதற்குத் தயா ராய் வேல்கம்பைப் பிடித்த வண்ணம் மண்டியிட்டு உட் கார்ந்து கொண்டிருக்கிறான்.

கணவாயை அடுத்துள்ள பாதையருகே 'ம்மா...ம்மா....' என்ற குரல். புலி தன் உடலைப் பின்னுக்கு வளைத்து, உடல் தரையில் பட்டும் படா மலும் உள்ள நிலையில் பாய்ச் சலில் நிற்கிறது. புலியும், செவ லைக்கண்ணும் பத்தடி வித்தி யாசத்தில் இருக்கின்றன. ஆனால் செவலை நிற்குமிடம் மேடு; புலி நிற்குமிடம் பள்ளம். பாய்ந்தால் மேட்டின் மேல் தான் பாய வேண்டும். மேட் டை அடுத்துள்ள பாறை மறை வில் ரெங்கத்தேவன். புலி தன் ஆவேச உறுமலுடன் முன்னங் கால்களைத் தூக்கிய வண்ணம் மேட்டை நோக்கிப் பாய்ந்தது. எதிர்ப்புற மறைவிலிருந்து வேல் புலியின் அடிவயிற்றை ஊடுருவுகிறது. க்ஷணத்தில் காடே சிலிர்க்கும்படி புலியின் மரண அலறல். புலி துள்ளி எழுந்து பாறை இடுக்கில் வீழ்ந்து சிக்கிக்கொள்கிறது. ரத்தம் பீறிட்டுப் பாய்கிறது. ஒருகணம் ரெங்கத் தேவனின் உடல் நடுங்குகிறது. செவலைக் கண்ணு மிரண்டோடுகிறது. 'செவலைக்கண்ணு......' என்ற குரல் கேட்டுப் பசு 'ம்மா...... ம்மா...'...என்று பதில் கொடுக்கிறது.

சற்று நேரத்தில் இருவரும் ஊரை நோக்கிக் கிளம்பினர். பறித்து முடிந்த மல்லிகைத்

தோட்டத்தைப் போன்று வான் மலர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக பூத்திருக்கின்றன. குளிர்ந்த பூமியின் மேல் வீசும் இளந்தென்றல் அவனுக்குக் களைப்பைப் போக்கித் தெம்பூட்டியது. இருவரும் மெல்ல மெல்ல ஊர் வந்து சேர்ந்தார்கள். செவலைக்கண்ணுவைத் தொழுவில் அடைத்து, தீனிவைத்து, தண்ணீர் காட்டிவிட்டு, தொழுவை மூடிவிட்டு கஞ்சிக் கலயத்துடன் பண்ணை வீட்டின் வாயிலை அடைந்தான்.

வழக்கம் போல் ஒரு கட்டி கேப்பைக் களியும், புளித்த நீரும், பழைய குழம்பும் ஊற்றப்பட்டது. மறுபுறம் தூணில் கட்டப்பட்டிருந்த நாய்க்கும் களித் துண்டு கல்சட்டியில் போடப்பட்டிருந்தது. இருவரும் அருகருகே உட்கார்ந்து ஒருவரை யொருவர் மாறி மாறிப் பார்த்தவண்ணம் உணவருந்திக் கொண்டிருந்தனர். சமூகத்தில் ரெங்கத் தேவனின் வர்க்கத்திற்குள்ள அந்தஸ்தை இந்தக் காட்சி நன்கு எடை போட்டுக் காட்டியது.

‘பரம்பரை பரம்பரையாக என் போன்ற உழைப்பாளர்களின் நிலை இது தானா?’ என்று தங்கள் மனத்திலே எழும் கேள்விக்கு விடை காணக்கூட நேரமின்றி உழைத்துழைத்து ஓடாகிப்போன உழைப்பாளர்களில் ரெங்கத் தேவனும் விதிவிலக்கல்ல.

பொழுது விடிந்தது. குருமலையின் அடிவாரத்தில் காலைக் கதிரவனின் ஒளி தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. திருட்டுத்தனமாக விறகு வெட்டிச் செல்லும் அன்றாடங் காய்ச்சிகளின் மடியில் இருக்கும் சில்லறையைத் தட்டிப் பறிப்பதற்குத் தன் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் பாரஸ்ட் ஆபீஸர் வீரையாத் தேவரவர்கள், சிப்பந்திகள் புடைசூழ வந்து கொண்டிருந்தார். சேவகர்களைக் காவலுக்கு அனுப்பி விட்டு ஆபீஸர் தேவர் அவர்கள் மட்டும் அங்கு உலாவிக் கொண்டிருந்தார். ஆபீஸர் என்ற பட்டத்தின் கௌரவத்தையும் அந்தஸ்தையும் காப்பாற்ற, மேல் நாட்டு நாகரிக பாணியில் கோட்டும், சூட்டும், பூட்டுமாகத்தான் காட்சியளிப்பார். ஆனல் தோற்றம் என்னவோ தமிழ் நாட்டுப் பிள்ளையாருக்கு வெள்ளைக்கார வேஷம் போட்ட மாதிரி தான் இருக்கும். காட்டிலாகாவில் வீரையாத் தேவருக்கு கொடுக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றும் எப்பொழுதும் அவரது கைவசம் உண்டு.

அன்று அதே போல் ஆபீஸர் தேவரவர்கள் துப்பாக்கியைத் தோளில் மாட்டிக்கொண்டு கணவாய் பக்கம் தன் பார்வையைச் செலுத்தினர். புலி இருந்ததை அவருடைய விழிகள் எப்படியோ புலப்படுத்தி விட்டன. மறு நிமிடம் தேவரின் உடல் நடுநடுங்கியது. ஒரு வேளை அப்போது அடித்த வாடைக் காற்றால் ஏற்பட்டிருந்தாலும் ஏற்பட்டிருக்கலாம். சற்று நேரத்தில் எதையோ கண்டு தெளிந்ததைப் போல் அவர் முகம் மலர்ந்தது. அடிமேல் அடிவைத்துப் புலி இருந்த இடத்தை நோக்கிச் சென்றார். இரத்தம் உலராமல் ஈரப் பசையுடன் உறைந்து கிடப்பதும்

வேல்கம்பு ஊடுருவிப் பாய்ந்திருப்பதும் விழிகள் நிலை குத்தி நின்றிருப்பதும் அவர் பார்வையில் தெளிவாய்ப் பட்டன.

மறு வினாடி வீரையாத் தேவர் புலியின் அருகில் சாவதானமாக நின்று கொண்டு உடலைத் துளைத்து உயிரை விரட்டி, குருதியை ருசி பார்த்துக் கொண்டிருந்த வேலை உருவினார். உருவின வேகத்தில் புலியின் பருவுடல் சற்றே உயர எழும்பித் துள்ளி விழுந்தது. அவ்வளவுதான்! கைகால் உதற லெடுக்க, வேலுடன் வீழ்ந்து பட்டார் வீரையாத் தேவர்! கண்கள் தாமாக இறுக மூடிக்கொண்டன. சில வினாடிகள் அசைவற்றுக் கிடந்தார். எதிரியின் எந்த விதமான எதிர்த் தாக்குதலும் இல்லை என்பது நிச்சயமான பின்னரே முதுகுமண்ணைத் தட்டி விட்டுக் கொண்டு எழுந்தார். அவசர அவசரமாக வேல்கம்பைத் தூக்கி, புதர்மறைவில் எறிந்து விட்டுத் தனது துப்பாக்கியிலிருந்து ஆகாயத்தை நோக்கி ஒரு வெத்து வேட்டுத் தீர்த்தார்.

போலி வேட்டையாடிய வீரையாத் தேவர் புலியின் தலைமேல் துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டு பாறையின் மேல் கம்பீரமாக வீற்றிருந்தார்!

வெடியின் சப்தம் கேட்ட ஆபீஸரின் சிப்பந்திகள் அடிவாரத்திலிருந்து மலையை நோக்கி ஓடினார்கள். அடிமை ரெங்கத்தேவன் வழக்கம்போல் தன் சகபாடிகளுடன் மலையை நோக்கி மந்தையை ஓட்டிக் கொண்டு செல்கிறான். ஏனோ அவன் இரவு நடந்த நிகழ்ச்சியை யாரிடமும் தெரிவிக்கவில்லை.

புலியருகில் பொலிவுடன் வீற்றிருக்கும் எஜமான்! எஜமானின் வீரத்தைப் பார்த்து ஒரே வியப்பும் திகைப்பும் ஏற்பட்டு அவர்களைப் பிரமிக்கச் செய்கின்றன. எப்படி இருப்பினும் வீரையாத் தேவருடைய வீரத்தின் பூராயத்தை வெளிப்படுத்தித் தங்கள் பிழைப்பில் மண்ணைப்போட்டுக் கொள்ள அவர்கள் 'விவரம் தெரியாதவர்'களா என்ன?

இதைக் காட்டிலும் தங்கள் எஜமானின் புலி வேட்டையை ஜெகப்பிரசித்தம் செய்வதின் மூலம் தங்கள் வருமானத்திற்கு வழியுண்டு என்பதைக் கண்டு கொண்டார்கள். உடனே மலைக்கு வந்தமாட்டுக்காரச் சிறுவர்களைக் கூவியழைத்தனர்.

கணவாயருகே சென்ற வண்டித் தடத்தின்வழியாகச்சென்று கொண்டிருந்த இரட்டை மாட்டு வண்டியில் புலி யேற்றப்பட்டு, ஊர் மந்தை வெளிக்குக் கொண்டுவரப்பட்டது. செய்தியைப் பறையறைவிக்கும்படி சுருளியாண்டிக் குடும்பனுக்கு உத்தரவு பிறந்தது. சுற்றுப்புறக் கிராமத்து ஜனங்களும், பெரிய தனக்காரர்களும்கூடி அன்றைய நிகழ்ச்சியைப் பெரிய விழாவாகக் கொண்டாடினார்களென்றால், ஆபீஸர் தேவரவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைச்சொல்லவா வேண்டும்! ஆனால் ஏனோ அவர் விழிகள் மருள மருள விழித்தன. இருந்தபோதிலும் 'இவ்வளவு ஆர்ப்பாட்டத்துக் குப்பிறகும் எவனுக்குத்தான் முன்வந்து உண்மையை வெளிப்

படுத்த துணிச்சல் இருக்கும்?' என்ற நினைப்புத் தோன்றவே, கிருதாவைச் சற்று வேகமாக முறுக்கிவிட்டுக் கொண்டார். விசேஷமாக வரவழைக்கப் பட்ட போட்டோகிராபரைக் கொண்டு, புலியுடன் புகைப் படம் ஒன்றும் எடுத்துக் கொண்டார்.

பத்திரிகைகள் தேவரின் புலி வேட்டையைப்பற்றி புகைப் படத்துடன் செய்திகளைப் பிர மாதமாக வெளியிட்டிருந்தன.

அடிமை ரெங்கத் தேவனின் வீரமும் திறமும் ஆபீஸர் விரை யாத் தேவரின் புகழுக்கும் பெருமைக்கும் படிக்கட்டு களாயின.

இவ்வளவு ஆர்ப்பாட்டங்களும் ஆரவாரங்களும் நடைபெற்ற பின்னர் அடிமை ரெங்கத் தேவ னின் வாய் அடைத்துப் போன தில் வியப்பில்லை.

ரெங்கத் தேவன் போன்ற சமூகத்தின் படிக்கட்டுகளாக விளங்கும் உழைப்பாளர்களின் உழைப்புக்கும், வீரத்திற்கும் உரிய மதிப்பைக் கொடுக்க ஒரு கூட்டம் மறுக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு ரெங்கத் தேவன் ஞானஸ்தனாக இல்லாவிட்டாலும், நடைமுறை அனுபவம் அவன் எண்ணத் தைக் கிளறி, சிந்தனையைத் தூண்டத்தான் செய்தது! ★

●

### உலகம் போற்ற!

"நீ இறந்த பின்னும் இந்த உலகம் உன்னை மறக்காதிருக்க வேண்டுமானால், படித்துப் போற்றுதற்குரிய விஷயங்களை எழுது; அல்லது எழுதிப் போற்றுதற்குரிய காரியங்களைச் செய்."

—பெஞ்சமின் பிராங்க்ளின்

○

### வாழ்க்கை

"வாழ்க்கைதான் மனிதனுக்குக் கிடைத்த அரிய பொக்கி ஷம். இந்தப் பொக்கிஷத்தை மனிதன் ஒரே ஒரு முறைதான் வாழ்ந்தனுபவிக்க முடியும். எனவே எவ்வளவு காலம் செயலற்று இருந்துவிட்டோம் என்று பிற்காலத்தில் வருந்தக்கூடிய நிலையிலோ, எவ்வளவு சில்லறைத் தனமான, கேவலமான முறையில் நடந்துகொண்டு விட்டோம் என்று வெட்கப்படக் கூடிய நிலையிலோ அவன் வாழக் கூடாது. அதற்கு மாறாக, சாகும்போது மனச்சாந்தியோடு, 'என் வாழ்நாள் முழுவதை யும், என் சக்தியை முற்றும் மனித குலத்தின் விடுதலைப் போராட்டம் என்ற உலகின் ஒப்பற்ற பணிக்காகவே பயன் படுத்தினேன்' என்று சொல்லக்கூடிய முறையில் மனிதன் வாழ வேண்டும்."

— ஆஸ்ட்ரோவஸ்கி

★ குட்டிக் கதை

# பேராசைக்காரனும் பசுக்களும்

○

முன்னொரு காலத்தில் பேராசைபிடித்த பண்ணைக்காரன் ஒருவன் இருந்தான்; அவனிடம் சில பசுக்கள் இருந்தன. அந்தப் பசுக்கள் அனைத்தும் அவனுக்கு ஏராளமான பாலைக் கொடுத்து உதவிவந்தன. அவனும் அதன் மூலம் ஏராளமான பாலும் தயிரும் வெண்ணெயும் பெற்று, அவற்றை நல்ல விலைக்கு விற்று, கொள்ளை லாபம் அடைந்து வந்தான். எனினும் அவனுடைய லாபஆசை அளவுக்கு மீறி இருந்தது. மேலும் மேலும் லாபம் அடைவதற்கு ஆசைப் பட்டான்.

எனவே அந்தப் பசுக்களுக்கு வாங்கிப் போடும் வைக்கோல், பிண்ணாக்கு, பருத்திவிதை முதலியவற்றைக் கூட மிச்சம் பிடித்து லாபம் தேட முனைந்தான். பசுக்களுக்கென்று சேமித்து வைத்திருந்த வைக்கோல் போரையும் விற்றுப் பணமாக்கி வந்தான். அந்தப் பசுக்கள் தமது இரையைத் தாமே தேடிக் கொள்ளுமாறு வெளியே விரட்டி விட்டான்.

ஆனால் வரண்டுபோன அந்தப் பிரதேசத்தில் அந்தப் பசுக்களின் கண்களுக்குப் புல் பூண்டுகள் கூடத் தட்டுப்பட வில்லை. எனவே அந்தப் பசுக்கள் வயிற்றுக்குப் போதுமான வைக்கோலோ புல்லோ கிடைக் காது திண்டாடின. பண்ணைக் காரனோ, வழக்கம்போல் அந்தப் பசுக்களிடமிருந்து ஏராளமான பாலைக் கறந்து பெரு லாபம் அடைந்து வந்தான்.

தமக்கு இரையும் போடாமல் தம்மிடமிருந்து பண்ணைக்காரன் ஈவிரக்கமின்றி நித்த நித்தம் பாலைக் கறந்து கொண்டு செல் வதைக் கண்டு அந்தப் பசுக்கள் மனம் புழுங்கின; அந்தக் கல் நெஞ்சக்காரனை எப்படிப் பழி வாங்குவது என்று தெரியாமல் மனம் கலங்கின.

கடைசியாக, இரையும் கிடைக் காமல் பாலையும் பறிகொடுத்து வந்த அந்தப்பசுக்கள் அனைத்தும் ஒன்று கூடி ஆலோசித்து, ஒரு தீர்மானத்துக்கு வந்தன. அதன் படி, அந்தப் பசுக்கள் தமது மடுவில் சுரக்கும் பாலைத் தமக் குள்ளாகவே ஒன்றுக்கொன்று ஊட்டி, தமது வயிற்றுப் பிரசினை யைக் கவனித்துக் கொண்டன; அத்துடன் தமதுஎஜமானனுக்கும் பாலும் கிடைக்காமல் செய்து பழி தீர்த்துக் கொண்டன. ★

**சென்ற மாத இதழில் மருதுபாண்டியரைப்பற்றி, 'கட்டபொம்மு சரித்திரக் கும்மி'யில் காணும் பாடல்களை அறிமுகப் படுத்தி வைததோம். கும்மிப் பாட்டில் காணும் கதைக்கும் சரித்திரம் கண்ட வரலாற்றுக்கும் பெரும் வித்தியாசங்கள உண்டு என்றும் குறிப்பிட்டிருந்தோம். எனவே இந்த இதழில் மருதுபாண்டியரின் வரலாற்றை வெளியிடுகிறோம்.**

# சிவகங்கைச் சிங்கங்கள்

*ரகுநாதன்*

**1799-ம்** ஆண்டு செப்டம் மாதம் 4-ம் தேதியன்று பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுத்துச் சென்றார்கள் வெள்ளையர்கள்; எனினும்பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை அவர்கள் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர் 1801-ம் ஆண்டு மே மாதம் 24-ம் தேதிதான் பரிபூரணமாகக் கைப்பற்றினார்கள். துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும், நன்கு பயிற்றப்பட்ட படை வீரர்களையும் தன்பக்கம் கொண்டு நின்ற வெள்ளையரை எதிர்த்து, வில்லும், வாளும், வேலும், வீரமுமே துணையாகக் கொண்டு அத்தனை காலம் வரையிலும் போரிட்ட பாஞ்சாலங்குறிச்சியாரின் வீரம் சாமானியமானதன்று. கோட்டையை வெள்ளையர்கள்கைப்பற்றி விட்டாலும், கோட்டைக் குள்ளிருந்த ஊமைத்துரையைக் கைப்பற்ற முடியவில்லை. வெள்ளையர் சேனை கோட்டையைக் கைப்பற்றுவதற்குள்ளாகவே அவன் கோட்டையை விட்டு வெளியேறித் தப்பிவிட்டான். எனவே கோட்டையைக் கைப்பற்றியதோடு யுத்தம் முடிந்தது என்ற நிலைமைக்கு இடமில்லை. வெள்ளையருக்கெதிராக வுள்ள பாளையக்காரரிடத்தில் சுமார் இருபத்திரண்டாயிரம் ஆயுதம் தாங்கிய வீரர் பெருஞ்சேனை இருந்ததாக வெள்ளையதிகாரியான லூஷிங்டனே கணக்கிட்டு வைத்திருந்தான். எனவே கும்பினியானுக்கு ஊமைத்துரை தப்பிச்சென்றதைக் கண்டதுமே ஆபத்து நீங்கவில்லை என்ற நிலைமைஏற்பட்டுவிட்டது. ஆம். ஆபத்து நீங்காதுதான். சுதந்திர உணர்ச்சி படைத்த சுத்தவீரர்கள் உயிர்சுமந்து திரியும்வரை, சுரண்டிக்கொழுக்கும் நயவஞ்சகர்களுக்கு என்றுமே ஆபத்துத்தான்!

ஆனால் வெள்ளையர்கள் அஞ்சி எதிர்பார்த்த ஆபத்து எந்தத் திசையில் தலை தூக்கியது? மீண்டும் பாஞ்சாலங்குறிச்சியிலா? அல்ல. தென் திசையில் நீங்கியதுபோல் தோன்றிய ஆபத்து, மீண்டும் வடதிசையில், சிவகங்கைச் சீமையில் தென்பட்டது. உடன்பிறந்த அண்ணன் கட்ட

பொம்மனைத் தூக்குமரத்துக்கு இரையாக வாரிக்கொடுத்து விட்டு, சிவகங்கைச் சீமைக்கு வந்து சேர்ந்தான் ஊமைத் துரை. அவனை வாரியணைத்து வரவேற்று ஆள்பலமும் தோள் பலமும் கொடுத்து ஆதரிக்க முன்வந்தார்கள், சின்னமருவது பெரிய மருது என்னும் சகோதரர்களான மருது பாண்டியர். எனவே சுதந்திரப்போர்க்களம் திசை மாறியது. சிவகங்கை போர் முனையாயிற்று. வெள்ளையர்களை இந்த நாட்டில் வேரூன்ற விடமாட்டோம் என்ற ரதம் பூண்டு, ஊமையனுக்கு உறு துணையாக நின்று, வீரப் போர் நிகழ்த்தி, நாட்டின் சுதந்திரத்துக்காகத் தமது நல்லுயிரையும் ஈந்த இந்திய மண்ணின் கடைசி மன்னர்களாகப் புகழ் பெற்றார்கள் மருது பாண்டியர். மருது பாண்டியரின் வீழ்ச்சிக்குப் பின்னரே தென்னாடு வெள்ளையரின் பரிபூரணமான ஆதிக்கத்துக்குள் சிக்கியது.

### சிவகங்கைச் சீமை

மருது பாண்டியரின் வீர வரலாற்றைத் தெரிந்து கொள்ளு முன்னர் நாம் சிவகங்கைச் சீமையின் சரித்திரத்தையும் ஓரளவு தெரிந்துகொள்ள வேண்டும். 1733-ம் ஆண்டு வரையிலும் சிவகங்கையும் ராமநாதபுரமும் ஒரே பாளையப் பட்டாகத்தான் இருந்து வந்தது. 1733-ம் ஆண்டில்தான் இரண்டும் தனித் தனிப் பாளையங்களாகப் பிரிந்தன. பிரிக்கப்பட்ட சிவகங்கைப் பாளையத்துக்கு சசிவர்ணத் தேவன் என்பவன் அதிபதியானான். சசிவர்ணத்தேவன் சுமார் 25 ஆண்டுகள் ஆண்டு மடிந்த பின்னர், அவனுடைய மகன் முத்துவடுகநாத உடையணத்தேவன் ஆட்சிக்கு வந்தான். முத்துவடுகநாதனின் ஆட்சிக் காலத்தில் அவனுக்கு உற்ற துணையாக இருந்தவர்களே மருது பாண்டியர். ஆனால் வடுகநாதன் ஆட்சிக்கு வந்த சமயத்திலோ வெள்ளைக்காரக் கும்பினியாரும் ஆற்காட்டு நவாபும் சேர்ந்து கூட்டுக் கொள்ளையடிக்கும் கோர நிலைமை முற்றிவிட்டது. 1773-ம் ஆண்டிலேயே ஆற்காட்டு நவாபின் சேனையோடு, ஜோஸப் ஸ்மித் என்ற வெள்ளைக்காரத் தளபதி ராமநாதபுரத்தைத் தனது நேரடி ஆளுகையின்கீழ் கொண்டு வந்து விட்டான். ராமநாதபுரத்தை அடிமை கொண்ட அதே வெறியோடு, அதே ஆண்டில் சிவகங்கைச் சீமையையும் அடிமை கொள்ள முனைந்தான். ஆனால் ராமநாதபுர சேதுபதியைப் போல் சிவகங்கை மறவன் அன்னியரின் முன்னால் தலை வணங்கி விடவில்லை. மருது பாண்டியரின் துணையோடு நின்ற சிவகங்கை உடையணத்தேவன் வெள்ளையனையும் நவாபின் சேனையையும் எதிர்த்து நின்றான். காடுகள் அடர்ந்த காளையார்கோவில் கோட்டைக்குள்ளிருந்தவாறு எதிரிகளின் தாக்குதலைச் சமாளித்தான். அப்போது அவனுடன் அவனது மனைவி வேலு நாச்சியாரும், மருது பாண்டியரும் இருந்தார்கள். ஆனால், காளையார்கோவில் அரணைப்பற்றிய உளவை அறிந்த நவாபின் சேனை அதனைத் தாக்கியது.

அப்போது நடந்த கடும் போரில் வடுகநாதன் வீர மரணம் அடைந்து விட்டான். ஆனால் வேலு நாச்சியாரும் மருதுபாண்டியரும் எதிரிகளின் கையில் சிக்கி விடவில்லை. அவர்கள் கோட்டையைவிட்டு வெளியேறித் தப்பித்து, வெள்ளையரை அப்போது எதிர்த்து நின்ற மைசூர் அதிபதி ஹைதர் அலியிடம் போய்ச் சேர்ந்தார்கள். எனவே சிவகங்கை ஆற்காட்டு நவாபின் வசமாகியது. ஆற்காட்டு நவாபோ சிவகங்கைச் சீமையைக் குத்தகைக்கு விட்டு விட்டான். அன்னியரின் கைக்குள் தமது நாடு சிக்கிக்கொண்டதை யறிந்து சிவகங்கை மக்கள் மனம் புழுங்கினார்கள். தாங்கள் நவாபுக்கு அடங்கி நடப்பதாக அவர்கள் சொல்லிக் கொண்டாலும்கூட, உண்மையில் அவர்கள் குத்தகைதாரனின் ஆட்சி அங்கு நிலைபெற விடாதவாறு, பல தாக்குதல்களையும் தொல்லைகளையும் கொடுத்து வந்தார்கள். எனவே சிவகங்கைச் சீமையை நவாப் குத்தகைக்கு விட்டும், அங்கு வரிவசூல் செய்யவோ, ஆட்சி செலுத்தவோ இயலாததாயிருந்தது.

இந்த நிலைமையில் ஹைதர் அலி கர்நாடகத்தின் மீது படையெடுத்து வெள்ளையரை முறியடித்து முன்னேறி வரத் தொடங்கியபோது, அவனோடு வேலுநாச்சியாரும், மருதுபாண்டியரும் மீண்டும் சிவகங்கை வந்து, மீண்டும் சிவகங்கையின் அரசுரிமையைக் கைப்பற்றினார்கள். அதன்பின் வேலு நாச்சியாரே சிவகங்கையின் அதிபதியானாள்; மருது சகோதரர்கள் அவளது அமைச்சர்களாக இருந்து அரசியல் கருமங்கள் அனைத்தையும் கவனித்து வந்தார்கள். வேலு நாச்சியாரின் காலத்திலேயே அரசாங்கத்தின் பெரும் பகுதிப் பொறுப்பை ஏற்றுவிட்ட மருது பாண்டியர், அவளுடைய மறைவுக்குப் பின்னர் தாமே அதிபதிகளானார்கள்.

## மருது சகோதரர்கள்

மருது சகோதரர்கள் இருவரும் சிவகங்கைச் சீமையைச் சேர்ந்த சிறுவயல் என்னும் ஊரில் பிறந்து வளர்ந்தவர்கள். மருது என்பது அவர்களது இயற்பெயரல்ல; நயினார் கோவிலில் உள்ள மருதேஸ்வர சுவாமிதான் சிறுவயல் மக்களின் குல தெய்வம். எனவே தங்கள் குல தெய்வத்தின் பெயரைத்தான் அந்தச் சகோதரர்கள் கொண்டிருந்தார்கள். அவர்களில் மூத்தவன் பெயர் வெள்ளை மருது என்றும் இளையவன் பெயர் சின்ன மருது என்றும் வழங்கப்பட்டு வந்தது. சிவகங்கைச் சீமைக்கு பெரிய மருதுதான் அதிபதியாக இருந்து வந்த போதிலும், சின்ன மருதுதான் நாட்டின் நிர்வாகப் பொறுப்பையெல்லாம் கவனித்து வந்தான்; பெரிய மருதுவோ தம்பியின் கையில் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, வேட்டையிலும் விளையாட்டிலும் ஈடுபட்டுப் பொழுதைப் போக்கி வந்தான்.

வெள்ளை மருது வீரத்திலும் உடல் வலிமையிலும் நிகரற்றவனாக விளங்கினான். அவனைப் பற்றி ஜெனரல் வெல்ஷ் என்னும் வெள்ளையர் தளகர்த்தன்

''அசாதாரணமான ஆஜானுபாகுவான தோற்றமும்வலிமையும் கொண்டவன் அவன்; காட்டு மிருகங்களை வேட்டையாடிக் களிப்பதே அவனுக்குப் பிடித்தமான முக்கிய விளையாட்டு. மேலும், ஆற்காட்டு நவாபின் ரூபாய் நாணயத்தை அவன் தன் கைவிரலாலேயே வளைக்கும் ஆற்றல் படைத்தவன் என்றும் கேள்வி'' என்று குறிப்பிடுகிறான். புலிவேட்டையிலும் அவன் நிகரற்றவனாய் விளங்கினான். வேட்டையின்போது புலி எதிர்ப்பட்டால், அவன் ஏனைய வேட்டைக்காரர்களின் துணையை நாடாமலே தன்னந்தனியனாகப் புலியை எதிர்த்துப் போரிட்டு வெல்லும் திறமை படைத்தவன் என்பதை வெள்ளையர்களே கண்டறிந்து போற்றியிருக்கிறார்கள்.

சின்ன மருதுவோ இம்மாதிரியான வேட்டைக் காரியங்களில் ஈடுபடாது, நாட்டைக்கவனித்து வந்தான். ஜெனரல் வெல்ஷ் சின்ன மருதுவைப்பற்றிக் குறிப்பிடும்போது பின்வருமாறு எழுதியுள்ளான்:

''சின்ன மருது கரிய நிறத்தோனாயினும், அழகும் எடுப்பும் அடக்கமும் நிறைந்தவனாகவும், நல்ல பண்பும், எளிமையும் படைத்தவனாகவும் இருந்தான். தனது தலையசைப்பையே நாட்டின் சட்டமாகக் கருதும் மக்களை அவன் ஆண்டு வந்த போதிலும், அவன் வாயிற் கதவு அடைக்கப்பெறாத ஓர் திறந்த அரண்மனையில், பாதுகாவலர்கள் ஒருவர் கூட இல்லாது, தன்னந்தனியனாகத் தான் வாழ்ந்து வந்தான். 1795-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் நான் அவனைக் காண்பதற்காகச் சென்றபோது, அந்த அரண்மனையில் எவரும் எவருடைய உத்தரவுமின்றி உள்ளே போகவும் வெளியே வரவும் கூடும் என்பதைக் கண்டு கொண்டேன். அதுமட்டுமல்ல, நாட்டு மக்களின் தலைவனாக விளங்கும் அவனுக்குக் கடவுளின் கிருபா கடாட்சம் மேலும் மேலும் கிட்டவேண்டும் என்று அந்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் வாய்விட்டு பிரார்த்திப்பதையும் நான் கண்டேன்.''

வெல்ஷின் குறிப்பிலிருந்து சின்ன மருது நாட்டு மக்களிடம் பெருமதிப்பும் செல்வாக்கும் பெற்றிருந்தான் என்பது தெளிவாகிறது. ஜெனரல் வெல்ஷ் சிவகங்கைச் சீமைக்குச் சென்று சின்ன மருதுவைக் கண்டு திரும்பியதிலிருந்து, சின்ன மருது வெல்ஷுடன் நட்புக் கொண்டான். மதுரையிலே தங்கியிருந்த வெல்ஷுக்கு நல்ல ஆரஞ்சுப் பழங்களும் அரிசியும் அவ்வப்போது அனுப்பி வந்தான். அதுமட்டும் அல்ல; அவனுக்கு ஈட்டி எறியவும், கதாயுதத்தைச் சுழற்றி வீசவும் கற்றுக்கொடுத்தான். ஆனால் சின்ன மருதுவிடம் இவ்வாறு சிநேகம் பூண்டு, ஆயுத வித்தைகளையும் கற்று, ஆரஞ்சுப்பழங்களையும் வாங்கித் தின்ற அதே ஜெனரல் வெல்ஷ்தான், பின்னால் சின்ன மருதுவைக் காட்டு விலங்கை வேட்டையாடுவது போல் துரத்தியடித்து, அவனது தொடை யெலும்பே முறிந்து நொறுங்குமாறு சுட்டு வீழ்த்தி படுகாயப்படுத்தி, அவனைத் தனது ஏவலாளிகளைக்கொண்டு இழுத்துவரச் செய்தான். அது

மட்டுமல்ல. சின்ன மருதுவும் சின்ன மருதுவின் விரப்புதல்வன் சிவஞானமும் பெரியமருதுவும் திருப்பத்தூர் கோட்டையிலே ஒரே தூக்குமரத்தில் வரிசையாகத் தூக்கிட்டுத் தொங்குகின்ற காட்சியையும் கண்ணால் கண்டான்!

## போர் மூண்டது!

பாஞ்சாலங் குறிச்சியில் கட்டபொம்மனும் ஊமைத்துரையும் கடும்போர் புரிந்து கொண்டிருந்த காலத்தில் லூஷிங்டன் என்பவனே தென்னாட்டின் கலெக்டராக ராமநாதபுரத்தில் இருந்து வந்தான். கட்டபொம்முவுக்கும் மருது பாண்டியருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதையும், வெள்ளையர்களை எதிர்ப்பதில் கட்ட பொம்முவுக்கு மருது பாண்டியர் ஒத்துழைப்பும் உதவியும் நல்கி வந்தார்கள் என்பதையும் லூஷிங்டன் உளவறிந்து வைத்திருந்தான். எனினும் பாஞ்சாலங் குறிச்சியிலே போர் நடக்கும் அதே சமயத்தில்சிவகங்கை மீதும் போர் தொடுத்தால், வெள்ளையர்கள் தாம் இடுக்கித் தாக்குதலுக்கு ஆளாக நேரும் என்றும் அவன் உணர்ந்தான். எனவே கட்டபொம்முவுக்குப் பின்னர் வெள்ளையரை எதிர்க்கக்கூடிய அடுத்த எதிரிகளாகவே மருது பாண்டியரைக் கருதி வந்தான். அதனால், பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை பிடிபட்டது என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடனேயே, லூஷிங்டன் சிவகங்கையையும் உடனடியாகத் தாக்கி, மருதுபாண்டியரைப் பிடிக்கத் தீர்மானித்து விட்டான். அதில் அவன் எந்த விதக் காலதாமதமும் செய்ய விரும்பவில்லை.

எனவே ராமநாதபுரத்திலிருந்த வெள்ளையர் துருப்புக்கள் மருது பாண்டியரின் தலை நகரை நோக்கிப் படையெடுத்துச் சென்றன. ஆனால், இதை அறிந்த மருதுபாண்டியரோ ஒரு கணமும் தாமதியாமல் எதிர் நடவடிக்கை எடுத்து விட்டார்கள். மருதுபாண்டியரின் படை ராமநாதபுரச் சீமையின் வடக்கு எல்லையிலுள்ள சில பிரதேசங்களைக் கைப்பற்றியது. அது மட்டுமல்ல. கர்னல் மார்ட்டின் என்பவன் ஆதிக்கத்திலிருந்த திருப்பத்தூர்க் கோட்டையையும் சுற்றி வளைந்து கொண்டது. அத்துடன் கமுதிக் கோட்டையையும் முற்றுகையிட்டு விட்டது.

## கடற் போர்!

இத்துடன் நில்லாது, மருதுவின் படைவீரர்கள் சிவகங்கைச் சீமைக்குச் சொந்தமான தொண்டி கடற்கரையில் ஒரு சிறு கடற்கண்டையையே நடத்தத் துணிந்து விட்டார்கள். கடலிலே அரிசி யேற்றிச் செல்லும் சகல தோணிகளையும் கைப்பற்றி, சிவகங்கைச் சீமைக்குக் கொண்டு வந்து சேர்க்க முனைந்தார்கள். போர்வலுத்து, முற்றுகையிடப்பட்டால் அல்லது முற்றுகை நெடுநாள் நீடித்தால் கோட்டைக்குள் ஏராளமான உணவுப்பொருள் இருந்தால் தான் நிலைமையைச் சமாளிக்க முடியும் அல்லவா? அதற்காகவே

சிவகங்கைச் சீமையின் வீரர்கள் அரிசியேற்றிச் செல்லும் தோணிகளைக் கொள்ளையிட்டுக் கரை சேர்த்தார்கள். ஆனால், இதை அறிய நேர்ந்த வூஷிங்டன் பாம்பன் துறை முகத்திலுள்ள கப்பல் அதிகாரிக்குத் தகவல் கொடுத்து, சிவகங்கை வீரரைக் கடலிலேயே தாக்கச்சொன்னான். அவனும் அதன்படியே சிறு கத்திக்கப்பல் ஒன்றில் ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு, கரையருகே வந்து சிவகங்கை வீரரைத் தாக்கி, அவர்களுடைய தோணிகளைக் கைப்பற்றித் தீயிட்டுக்கொளுத்தினான். சிவகங்கை வீரர்கள் அந்தக் கப்பலை எதிர்த்துத்தாக்க முடியாமல் பின்வாங்கிவிட்டார்கள். வூஷிங்டன் கடல் மூலமாகத் தாக்கவும், காவல் புரியவும் கப்பலதிகாரிக்கு உத்தரவு கொடுத்ததற்குக் வேறொரு காரணமும் உண்டு. ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைவிட்டு தப்பியோடி விட்டது போல், மருது பாண்டியரும் கடல் வழியே இலங்கைக்குத் தப்பி ஓடி விடக்கூடாதே என்ற எண்ணமும் அதற்கு ஒரு காரணமாகும்.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை பிடிபட்டு ஐந்து நாட்கள் ஆகவில்லை. அதற்குள் மருது பாண்டியருடைய வீரர்களுக்கும் வெள்ளையர் சேனைக்கும் போர் தொடங்கி விட்டது. 24-ம்தேதி பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்கி அதனைக் கைப்பற்றிய அதே வெள்ளையர் படை, 28-ம்தேதி மருதுபாண்டியர் படையால் முற்றுகையிடப்பட்ட கமுதிக் கோட்டையை மீட்பதற்காக, ஓடோடியும் வந்தது! அந்தப் படையினர் ராமநாதபுரம் வந்து சேர்வதற்குள் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. வழி எங்கணும் மருது பாண்டியருடைய வீரர்கள் வெள்ளையர் படையைப் பல இடங்களில் கடுமையாகத் தாக்கினார்கள். திடீர் திடீர் என்று தாக்கினார்கள். எந்தத் திசையிலிருந்து எவ்வாறு தாக்குதல் வருமென்று சொல்ல முடியாத நிலை. இப்படிப் பட்ட தாக்குதலால் கம்பெனிப் படையில் வெள்ளையர் பலர் உயிரிழக்கவேண்டியதாயிற்று. அந்தப் படையினர் ராமநாதபுரத்துக்கு வரும் வரையிலும் அவர்களுக்கு உயிர் கையிலில்லை!

## சிறுவயல் எரிந்தது!

'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று ராமநாதபுரம் வந்து சேர்ந்த படையினர் சில தினங்கள் அங்கு களைப்பாறிக்கொண்டார்கள். அதற்குள் அந்தப் படையின் தளகர்த்தனை, பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையின்மீது நடந்த இறுதித் தாக்குதலுக்குத் தலைமை தாங்கி வெற்றி கண்டவனை கர்னல் ஆக்னியூ என்பவன் கர்னல் மார்ட்டினுடன் கலந்து ஆலோசித்து, சிவகங்கைச் சீமையைத் தாக்குவதற்கான திட்டங்களை வகுக்க முனைந்தான். மருது பாண்டியரும் ஊமைத் துரையும் நிச்சயம் காளையார் கோயில் அரணுக்குள் புகுந்து கொள்வார்கள் என்றும், அவ்வாறு புகுந்து கொண்டால் பாஞ்சாலங்குறிச்சியில் நடந்தது போலவே, அங்கும் கடுமையான போராட்டமே நடத்த நேரும் என்றும் அவர்கள் கண்டுணர்ந்தார்கள்.

எனவே காளையார் கோயில் அரணை எவ்வாறு சுற்றி வளைத்துத் தாக்குவது என்பது பற்றி ஆலோசித்தார்கள். காளையார் கோயில் கோட்டையைக் கிழ்த் திசையிலிருந்து அடைய எண்ணுவது சிரமம் என்றும், எனவே மேலைத் திசையிலிருந்து தாக்க முனைவதே சரி என்றும் தீர்மானித்தார்கள். அதன்படி அந்தப் படையினர் திருப்பத்தூருக்கு அருகிலுள்ள திருக்கடையூருக்கு போய்ச் சேர்ந்தனர்; அங்கு திண்டுக்கல்லிலிருந்து கர்னல் ஜேம்ஸ் என்பவனின் தலைமையில் வேறொரு படையினரும் வந்து கலந்து கொண்டனர். ஆக மொத்தம் சுமார் 7000 பேர்களைக்கொண்ட அந்த வெள்ளையர் படை ஆக்னியூவின் தலைமையில் மருது பாண்டியரின் பிறந்த ஊரான சிறு வயலைத் தாக்குவதற்காக முன்னேறிச் சென்றனர்!

சிறு வயலின்மீது படையெடுத்துச் சென்ற வரலாறு பற்றி, கர்னல் வெல்ஷ் தனது குறிப்புக்களில் பின்வருமாறு எழுதியிருக்கிறான்:

"மருதுபாண்டியனுக்கு நல்ல காலம் பிறந்ததிலிருந்தே இந்த நகரம் (சிறுவயல்) ஓரளவு முக்கியத்துவம் பெற்று விட்டது. மருதுபாண்டியன் (சின்ன மருது) சிறுவயலைத்தான் தனது நிரந்தர வாசஸ் தலமாகக் கொண்டிருந்தான்; எனவே இந்த ஊரைப் பாதுகாக்க அவன் தீவிரமாகப் போராடுவான் என்று ஊகிக்கப்பட்டது. சிறுவயலுக்குச் செல்லும் ராஜ பாட்டை மிகவும் நன்கு அமைந்திருந்த போதிலும், நாங்கள் செல்ல வேண்டிய தூரமும் சுமார் 8 அல்லது 9 மைல்களே இருந்த போதிலும், அங்கு போய்ச் சேர்வதற்கு எங்களுக்கு ஒரு நாள் முழுவதும் பிடித்தது. சுமார் 1200 அல்லது 1500 கஜம் அகலமுள்ள நிலப்பகுதியில் அந்த ஊர் அமைந்திருந்தது; அந்த நகரின் இருமருங்கிலும் உயரமும் அடர்த்தியும் நிறைந்த காடுகள் அமைந்திருந்தன. இடைவெளியிலுள்ள பாதையிலோ எங்குபார்த்தாலும் கண்மாய்க்கரைமேடுகளும், பனைமரக் காடுகளும், சிறு காடுகளும் குறுக்கிட்டன. எனவே பாளையக்காரர்கள் எதிர்பாராத விதமாக திடீர்த் தாக்குதல்கள் நடத்துவதற்கு அந்தப் பிரதேசம் மிகவும் ஏற்றதாயிருந்தது. எதிரியோ (அதாவது மருது பாண்டியர் சேனை) அபரிமிதமான ஆயுதபலம் பெற்றிருந்தான்; மேலும் அவனிடம் ஏராளமான சிறு நாட்டுத் துப்பாக்கிகளும் இருந்தன. அவர்களோ நாள்முழுதும் இடைவிடாது சுட்டுத் தள்ளிக்கொண்டே இருந்தார்கள்; எனவே அந்தச் சத்தத்தைத் தூரத்திலிருந்து யாரேனும் கேட்டிருந்தால் நாங்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம் என்றுதான் கருதியிருப்பார்கள். ஆனால், அது அனைத்தும் வெறும் வெத்து வேட்டுத்தான்; அவர்கள் வெறுமனே குறியற்றுச் சுட்டுத் தள்ளினார்கள். அதனால் எங்களுக்கும் பிரமாதமான சிரமங்கள் எதுவும் ஏற்படவில்லை. எங்களுடைய துப்பாக்கிகளோ எப்போதாவதுதான், அதாவது பாளையக்காரர்கள் கூட்டமாகத் திரண்டு

எங்களை முன்புறமாகவோ, பக்கவாட்டிலோ தாக்கும் போதுதான் வெடிக்கத் தொடங்கும். எப்போதெப்போது எங்கள் படை அவர்கள் பக்கம் நெருங்கித் தாக்குமோ, அப்போதெல்லாம் அவர்கள் வேறிடங்களுக்குத் தப்பித்துச் சென்றார்கள். நாங்கள் செல்லும் திசையில் இடது பக்கமிருந்த பிரதேசத்தில்தான் எதிரி மிகுந்த நம்பிக்கையோடு மறைந்திருக்கிறான் என்று தோன்றியது. எனவே அந்தப் பக்கத்தில் மேஜர் ஷெப்பார்ட் என்பாரின் தலைமையிலுள்ள ஒரு படையை, காவல் படையாக நிறுத்தி வைத்தோம். எங்களுடைய சாமான்களும் மூட்டை முடிச்சுகளும் ஏராளமாக இருந்தன. எதிரிகள் மட்டும் பார்த்தால், அவற்றைக் கொள்ளையடிக்கவே துணிந்து விடுவார்கள். பொழுது சாயும் வேளையில் நாங்கள் சிறுவயல் எல்லையை அடைந்தோம். ஆனால், சிறுவயல் என்ற அந்தப் பேரூர் முழுவதும் செந்திப் பிழம்பாக எரிந்துகொண்டிருக்கும் காட்சியைத்தான் நாங்கள் கண்டோம்!''

ரோட்டுப் பாதை மிக நன்றாயிருந்தும் வெள்ளையர் படை ஒருநாளில் எட்டே எட்டுமைல் தான் முன்னேற முடிந்தது என்ற உண்மையைக் கர்னல் வெல்ஷின்குறிப்பேபுலப்படுத்துகிறது. ஆம். வெள்ளையர் சேனை முன்னேற விடாதபடி, மருது பாண்டியரின் படையாட்கள் பலமாகத் தாக்கினார்கள். 'கொரில்லா யுத்தம்' புரிவது போல் திடீர் திடீரென்று வழி மறித்துத தாக்கினார்கள். எனினும் பெரிய பீரங்கிகளையும் சக்தி வாய்ந்த துப்பாக்கிகளை, யும், ஏராளமான கூலிப்பட்டாளங்களையும் கொண்டு வந்த வெள்ளையரைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. சிறுவயல் நகரத்தை, மருதுபாண்டியரின் பிறப்பிடத்தை, மருது பாண்டியரின் தலை நகரத்தை, வெள்ளையர்கள் அடைந்தே தீருவார்கள் என்று தோன்றி விட்டது. எனவே சிறுவயல் நகரத்தை அப்படியே விட்டு விட்டு, பின் வாங்க மருதுபாண்டியரோ, சிவகங்கைச் சீமை மறவர்களோ விரும்பவில்லை. கொள்ளைக்கார வெள்ளையரின் கையில், வீடோ, வாசலோ, சொத்தோ, பொருளோ எதுவும் கிடைக்கக் கூடாது என்று கருதினார்கள் அவர்கள்.

சென்ற உலக மகா யுத்தத்தின்போது ருஷ்ய நாட்டுக்குள் நாஜிகள் படையெடுத்தபோது ருஷ்ய நாட்டினர் தமது உடைமைப் பொருள்கள் எதுவும் எதிரிகளுக்குக் கிட்டவோ பயன் படவோ கூடாது என்ற காரணத்தால், நாடு நகரங்களையே சுட்டுப் பொசுக்கித் தள்ளி விட்டுப் பின் வாங்கினார்கள் என்பதை நாம் அறிவோம். சிவகங்கைச்சீமை மக்கள் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னமே இந்தப் 'பொசுக்கல் கொள்கை'

> **அறிவிப்பு**
>
> 'மொழிகள் குட்டி போடுமா?'
>
> விவாதக் கட்டுரை
>
> அடுத்த இதழில்
>
> வெளிவரும்.

யைக்கையாண்டார்கள். தங்கள் தங்கள் வீடுகளுக்கும் உடைமைகளுக்கும் தாமே நெருப்பு வைத்துவிட்டு, அவர்கள் காளையார்கோயில் காட்டுக்குள் சென்றுவிட்டார்கள். பேய்க்காற்றும் பெருநெருப்பும் சேர்ந்து அந்த அழகிய நகரத்தை மாபெரும் சொக்கப்பனையாக மாற்றியது! எதிரிகள் சிறுவயல் நகரத்தை 1801-ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் தேதியன்று கைப்பற்றினார்கள். சுட்டுப்பொசுங்கிச் சுடுகாடான நகரத்தைத்தான் அவர்களால் கைப்பற்ற முடிந்தது!

மறுநாளே கம்பெனிப் படை மருது பாண்டியரை எதிர்த்து, காளையார் கோயில் காட்டுக்குள்ளும் படையெடுக்க முனைந்தது. ஆனால் காளையார் கோயில் அரணை வெள்ளையர்கள் அவ்வளவு லகுவில் கைப்பற்றி விட முடியவில்லை. காளையார் கோயில் காட்டில் நடந்த போரில் வெள்ளையர்கள் பட்ட பாடும் துன்பமும் சொல்லும் தரமன்று. போராட்டத்தையே கைவிட்டுப் பின்வாங்கும் அளவுக்கு, அவர்கள் படாத பாடு பட்டார்கள். மருது பாண்டியரின் வீர வரலாற்றிலேயே காளையார் கோயில் காட்டில் நிகழ்த்திய வீர வெஞ்சமர்தான் வியக்கத்தக்கது. ஜூலை 31-ம் தேதி காளையார் கோயில் காட்டுக்குள் புகுந்த வெள்ளையர்கள் செப்டம்பர் 30-ம் தேதி வரையிலும், சரியாக மூன்று மாத காலம் வரையில் போராடியும், காளையார் கோயிலையோ, அங்கிருந்துகொண்டு வெள்ளையரைத் தாக்கிப் படுநாசப் படுத்திய காளையர்களான மருது பாண்டியரையோ, ஊமைத்துரையையோ கைப்பற்ற முடியவில்லை!

காளையார்கோவில் போர் வரலாற்றையும், மருதுபாண்டியரின் வீரமரணம் பற்றிய வரலாற்றையும் அடுத்த இதழில் விரிவாகப் பார்க்கலாம்.

(தொடரும்)

●

### குழந்தையும் மலரும்

ஜார்ஜ் பெர்னார்ட்ஷாவுக்கு மலர்களின்மீது மிகவும் பிரியம் என்று கேள்விப்பட்டிருந்த ஒருவர் அவருடைய வீட்டுக்குச் சென்றிருந்தார். ஆனால் பெர்னார்ட்ஷாவின் வீட்டிலோ மலர்களையே காணோம்; மலர்கள் வைக்கும் அலங்கார ஜாடிகள் எதுவுமே இல்லை. இதைக் கண்டு அதிசயித்தவராய் அவர் ஷாவை நோக்கிக் கேட்டார்: "உங்களுக்கு மலர்கள்மீது மிகுந்த பிரியம் என்றல்லவா கேள்விப்பட்டேன்!"

"ஆமாம். இல்லையென்று யார் சொன்னது? எனக்கு குழந்தைகள் மீதும்தான் பிரியம். அதற்காக அவர்களின் தலைகளைக் கொய்து, என் வீட்டு அலங்கார ஜாடிகளை அழகு செய்ய வேண்டுமென்பதில்லையே!" என்றார் பெர்னாட்ஷா.

**இந்தப் பகுதியில் சில கேள்விகளைத் தருகிறோம். இவற்றுக்குரிய சரியான விடைகளைக் கண்டு பிடியுங்கள். பார்க்கலாம்! எல்லாக் கேள்விகளுக்கும் உங்கள் விடைகளைத் தீர்மானித்துவிட்டு, பின்னர் 80-ம் பக்கத்தைத் திருப்பிப் பாருங்கள்.**

# தெரியுமா?

1. மகாகவி பாரதியார் பிறந்த மாதம் தேதி என்ன?

2. ஆடுசாப்பட்டி அம்மையப்ப பிள்ளை என்பவர் இலக்கிய ரசிகர்கள் மறக்க முடியாத ஒரு கதாபாத்திரம். அவர் எந்தக் கதையில் வருகிறார்?

3. கம்பன் திருநாள் என்று கொண்டாடப்படுகிறது?

4. "சூத்திரனுக்கு ஒரு நீதி—தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் இதுவென்று கண்டால் அது
சாத்திரமன்று, சதியென்று கண்டோம்!"

இந்தப் பாடலைப் பாடியவர் யார்?

5. முதன் முதலில் வெளிவந்த தமிழ் மாதப் பத்திரிகை எது?

6. "பெரியமீன் சின்ன மீனைத் தின்னலாம். ஆனால் சின்ன மீன் அதற்கும் சின்ன மீனைத் தின்றால் பெரிய மீன் 'குற்றம் செய்கிறாய்!" என்று தண்டிக்க வருகிறது. இதுதான் சமூகம்!"

புதுமைப்பித்தன் எழுதியுள்ள ஒரு சிறு கதையில் காணப்படும் வரிகள் இவை. அந்தக் கதை எது?

7. பிரபல கதாசிரியர் ஜான் கால்ஸ்வொர்த்தியின் கதை ஒன்றை அவரது பெயரைக் குறிப்பிடாமலே தழுவி, தமிழில் பிரபலமான சிறுகதை ஒன்றும், நாடகம் ஒன்றும், திரைப்படம் ஒன்றும் வெளிவந்துள்ளன. அவை மூன்றும் எவை என்று கூற முடியுமா?

8. தமிழ் வசன நடையைப்பற்றி, பொறுப்பற்ற முறையில் ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டதால், பத்திரிகை உலகின் பலத்த கண்டனத்துக்கு ஆளானார் ஒரு எழுத்தாளர்; அதன் காரணமாக, அவர் இலக்கிய உலகிலிருந்தே விலகி அஞ்ஞாத வாசம் மேற்கொண்டு விட்டார். அந்தத் தமிழ் எழுத்தாளர் யார்?

9. ஒரு ஆங்கிலப் புத்தகத்தை அப்படியே தமிழில் காப்பியடித்து, மொழிபெயர்ப்பு என்பதையே மறைத்து ஒரு நூலை எழுதி, அந்த நூலுக்கு சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரிடமிருந்து 'இவ்வாண்டு வெளிவந்த சிறந்த விஞ்ஞான நூல்' என்ற வரிசையில் ரூ. 500 பரிசையும் தட்டிக்கொண்டு போய்விட்டார் ஒரு தமிழ் எழுத்தாளர். அப்படிப் பரிசு பெற்ற எழுத்தாளர் யார்?

10. தமிழ் நாட்டில் முதன் முதல் அச்சுக்கூடம் தொடங்கப் பெற்ற இடம் எது?

நாட்டு மக்களின் நலத்தில் வேட்கைகொண்ட 'குற்ற'த்துக்காக, இன்று திரு. பாலதண்டாயுதம் வேலூர் சிறையில் அரசியல் கைதியாக அடைபட்டுக் கிடக்கிருர். சிறந்த இலக்கிய ரசிகரான அவர் 'சாந்தி' இதழ்களைப் படித்து விட்டு எழுதியுள்ள உருக்கமான கடிதத்தையே கீழே தந்திருக்கிறேம். சிறைக் கம்பிகளையும் தாண்டிக்கொண்டு வரும் அவரது இலக்கிய தாகத்தையும் இதய வேதனையையும் இந்தக் கடிதம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

பூனைக் குட்டியைப் பிரிவதிலேயே அவர் இத்தனை மன வேதனையை அடைந்திருப்பாரானல், இல்லாளையும் இனத்தாரையும் நண்பர்களையும் நாட்டுமக்களையும் பிரிந்து தண்டனைக் கொட்டடியில் அடைபட்டுக் கிடக்கும் அவரது இதய வேதனையை அளவிடமுடியுமா? அவரும் பூனைக் குட்டியைப்போல் அவரும் புழுங்கித் தவிக்க வேண்டியவர்தானு?...

# "தாய் உள்ளம்!"

---

கே. பாலதண்டாயுதம்

○

வேலூர் மத்திய சிறை
27—1—54.

அன்புள்ள ரகுநாதனுக்கு,

உங்களுக்கு இவ்விஷயத்தைப் பற்றி எழுதவில்லையென்ருல் என் உள்ளம் உடைந்து போகும் போலிருக்கிறது. ஆகவே என் சொந்த ஆறுதலுக்காகவே இக் கடிதம் எழுதுகிறேன்.

கல் நெஞ்சம் படைத்தவன் என்பது என் குடும்பத்தில் எனக்குக் கிடைத்த பட்டப் பெயர். 'கல் நெஞ்சம் படைத்த அத்தான்' என்ற அடைமொழியுடன் தான் எனக்குச் சிறைக்கு எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் என் மனைவி என்னை அழைக்கின்ருள். என்னைச் சந்திக்கும் உற்ருர் உறவினர்கள் 'பெற்ற தாயை எடுத்து விழுங்கி விட்டு வருகிருன் பார்!' என்று என்னைக் கடிந்து கொள்வதுண்டு. ஏனெனில் எனது அன்னை என் பிரிவாற்ருமையினுலேயே, உடல் மெலிந்து, நோய்வாய்ப்பட்டு, பல மாதங்கள் படுத்த படுக்கையாகக் கிடந்து, கடைசியாக என் கண் முன் உயிர் நீத்தாள். இதனுல் நானும் கூட, சிலசிலசமயங்களில் எனக்குள்ளேயே சந்தேகப்பட்டுக் கொள்வதுண்டு, இவர்கள் எல்லோரும் சொல்வதில் உண்மை இருக்குமோ என்று!

இத்தகைய கல்நெஞ்சனுகிய நான் நேற்று (குடியரசு தினத்தன்று!) இதுவரை அழுதாதற்கு வட்டியும் முதலுமாகச் சேர்த்து அழுதுவிட்டேன். தனிமையில் என்னை வைத்திருப்பதனுல்,

எனது அழுகுரல் கேட்கும் தூரத்தில் கூட அயலார் யாரும் இல்லை. எனது ஆண்மை பூரா வையும் திரட்டி, அழுகையை அமுக்கிப் பார்த்தேன். ஆனல், அது அதிகம் பீறிட்டுக்கொண்டு வந்தது. என்னை இவ்வாறு அழ வைத்தது உங்கள் 'சாந்தி' ஜனவரிப் பிரதியில் வெளியான 'மூரளி' வரைந்துள்ள 'புதுமைப் பித்தன் பாராட்டுக் கதை'யான 'இன்றைய சந்தையில்' ஆகும்.

நான் தற்பொழுது வாழ்ந்து வரும் இத்தனி உலகத்தில் தாய் கள் இல்லை; தங்கக் குழந்தைகள் இல்லை. ஆயினும் கல்நெஞ்சர் உள்ளங்கள் எல்லாம் உரித்து வைக்கப்பட்டிருக்கிறது. அதில் எதும் பட்டுவிட்டால் கூசுகிறது; தொட்டாலோ குலுங்கி விடு கிறது. நான் நாகபுரி மத்ய சிறையில் இருந்த பொழுது, ஒரு சின்னஞ் சிறு வெள்ளைப் பூனைக் குட்டி வெளியிலிருந்து சாக் கடைத் துவாரம் வழியாக விளையாடுவதற்கு எனது தனிக் காம்பவுண்டிற்குள் நுழைந்தது. நான் அதை எடுத்துப் 'பாலூட்டித் தாலாட்டி' வளர்த்து வந்தேன். அதுவும் ஒரு விநடியும் என்னை விட்டுப் பிரியாமல் நாள் முழுதும் என்னு டனே இருந்து வந்தது. பசி வந்தபோது அது என்னைச் சுற்றிச் சுற்றி வளையமிட்டு, என் முகத்தை அண்ணாந்து பார்த்து, பாலுக்கு 'மியூ மியூ' என்று கூவுவதைப்பார்த்தால், குழந்தை தாயைப் பாலுக்கு நச்சரிப்பது போன்ற உருக்கமான காட்சி யாக இருக்கும். நான் எழுந்து நடமாடும் பொழுது, அக்கம் பக்கங்களில் அரவமில்லாமல் பதுங்கி ஒளிந்திருந்து, திடீரென்று நான் வரும்பொழுது என்மீது சாடி, எனது பாதங்களை வேடிக் கையாகக் கடிப்பதைப் பார்க்கும் பொழுது, அது அசல் விளையாட்டுக் குழந்தையாகவே தோன்றும். அப்பொழுது அதை அள்ளி எடுத்து நெஞ்சில் வைத்து அணைத்துக்கொள்ளாமல் இருக்க முடியாது. ஓயாத விளையாட்டு! என்னைப் படிக்கவிடாமல்புத்தகத் தின் மீது படுத்துக்கொண்டு என் முகத்தைப் பார்க்கும். ஆகவே படிக்கும் நேரங்களில் பூட்டி வைக்க, அதற்கென்று ஒரு தண்டனைக் கொட்டரை தயாரிக்க வேண்டியதாயிற்று. குளிப்பு அறையின் கூரைமீது அதை ஏற்றி விட்டுவிட்டால், இறங்க முடியாமல் பேசாமல் அங்கேயே இருந்துவிடும். ஆகவே அதையே அதற்குத் தண்டனைக் கொட்ட ரையாக உபயோகித்து வந்தேன். ஒரு நாள் ஏதோ ஒரு வேலையில் கவனமாக இருந்ததனல், அதைக் கீழே இறக்கிவிட மறந்து போ னேன். ஹிந்தியில், 'லாக்கப் செய்யலாமா, ஸார்!' என்று கேட்டுக்கொண்டு வீட்டுக்குப் போகும் அவசரத்துடன் வார்டர் வந்தார். 'செய்யலாம்' என்று சொல்லிவிட்டு, என் அறைக்குள் நுழைந்தேன். அவரும் என்னைப் பூட்டி விட்டுப் போய்விட்டார். கொஞ்சநேரத்திற்குள் என்று மில்லாத கலவரப்பட்ட தொனி யில் 'மியூமியூ' என்று பூனைக் குட்டியின் அபயக் குரல் வெளி யிலிருந்து கேட்டது. கம்பிக்

கதவின் பக்கம் ஓடி வந்தேன். எனக்கு நேர் எதிரே, குளிப்பு அறையின் கூரைமீது — ஆஹா! பரிதவிப்பின் படம்! கொட்டரை யைச் சுற்றி வந்து காவல் புரிந்து கொண்டிருந்த வார்டரை அழைத்து, அதைக் கீழே இறக்கி விட்டு விடும்படி சொன்னேன். வார்டர் அதன்படி அதன் அருகே நெருங்கினல், அது பயந்துகொண்டு, பின்னல் உயர மாக அவர் கைக்கு எட்டாமல் ஓடி விடுகிறது. வார்டர் அப்புறம் போனவுடன் கீழாக வந்து, மீண்டும் ஓரத்தில் நின்று என்னைப் பார்த்து ஈனக்குரலில் 'மியூ மியூ' என்று கூவுகிறது. கம்பிகளைத் தகர்த்துக் கொண்டு போய் அந்தக்குட்டியை எடுத்து மார் பில் அணைத்துக்கொள்ள வேண்டு மென்று எனது மனம் துடியாய்த் துடித்தது. பலவந்தமாக அதைப் பற்றி இழுத்து, கீழே இறக்கி விடச் சொன்னேன். அவரும் பல முறை முயன்று, கடைசியாக அதைக் கீழே இழுத்து விட்டார். கீழே விட்டதும் ஓடி வந்து என்னிடம் அதுஒட்டிக்கொண்ட அக்காட்சியை என்னல் மறக்க முடியாது!

கொஞ்ச நாட்களில் நான் தமிழ் நாட்டுக்கு என்னை மாற்றும் படியான சர்க்கார் உத்தரவை வலிந்து பெற்றேன். தாய்த்தமிழ கத்துக்குத் திரும்புகிறேம் என்ற பூரிப்பு! ஆனல் இதைப் பூனைக் குட்டிக்கு எப்படிப் புரியவைப் பது? புரிந்து கொள்ளக் கூடிய தாக இருந்தால் அதனிடம் 'என் சொந்தச் சீமைக்குத் திரும்பிப் போகிறேன், பாப்பா! நீ கவலைப் படலாகாது, பாப்பா! எப்பொழு தும்போல், நீ ஓடி விளையாடு பாப்பா!' என்று ஆறுதல் சொல்ல லாம். இதனிடம் எப்படிச் சொல்வது? இதற்கு எப்படிப் புரியவைப்பது? இவ்விஷயத்தில் என்ன செய்வது? ஒன்றும் புரிய வில்லை. திகைத்தேன். தவியாகத் தவித்தேன். என்னுடன் அழைத்து வர வழியில்லை; புறப்படும் நாள். காலையிலிருந்து சிறை அதிகாரி கள் ஒவ்வொருவராக வந்து என்னிடம் விடை பெற்றுப் போகிருர்கள். என் சாமான்களை எடுத்துக்கொண்டுபோகிருர்கள். அடுத்தது நான். எனக்குப்பின் அந்த இடம் இழுத்துப் பூட்டப் படும். இதனை ஒன்றுமே புரியா மல் எப்பொழுதும் போல் விளை யாடிக் கொண்டிருக்கும் பூனைக் குட்டியைப் பார்த்த வண்ணம் நிற்கிறேன். 'லாரி வந்துவிட்டது, கிளம்புங்கள்' என்று சிறை அதி காரி என்னை அக்குட்டியிட மிருந்து பிய்த்துக் கொண்டு போகிருர். போலீஸ் லாரி; ஜனத் திரள்; ரயிலடி. நான் வாசலைக் கடப்பதைப் பார்த்த பூனைக் குட்டி, நான் வழக்கம்போல் அவ்வழியே மீண்டும் திரும்பு வேன் என்று எதிர்பார்த்து ஒளிந்திருந்து, வரும் பொழுது என்மீது திடீரென்று பாய்ந்து களிக்க எண்ணி, வாசலோரத்தில் எவ்வளவு நேரம் பதுங்கியிருந்து ஏமாற்றமடைந்ததோ? இன்னும் கொஞ்ச நேரத்திற்குள் பாலுக் காக என்னைத்தேடிக் காணமல், அப் பூனைக்குட்டி எப்படி ஏங் கித் தவிக்கும் என்ற காட்சியை

என் மனக்கண்ணால் ஒரு நிமிடம் பார்த்துப் பதைத்தேன். 'பாவி! நான் என் அக்குட்டியைத் தாயிடமிருந்து பிரித்தேன்?' என்று என்னை நானே நொந்துகொண்டேன். 'என் உள்ளம் இதற்கு இன்று இப்படி வேதனைப்படுகிறதே, என்னை 21 ஆண்டுகளுக்குப் பிறகு பிரிந்த என் பெற்ற தாயின் வயிறு எப்படிப் பற்றி எரிந்திருக்கும்?' என்று எண்ணிப் பார்த்து, என்னையும் அறியாமல் ஒரு சொட்டுக் கண்ணீர் உகுத்து, ஒருவருக்கும் தெரியாமல் பின் சமாளித்துக் கொண்டேன். இந் நிகழ்ச்சிக்குப் பிறகு,நேற்றுத்தான் விம்மிவிம்மி அழுதேன். இந்தப் பாழும் சமுதாயத்தில் அனுதினமும் எத்தனை எத்தனை சீதாலட்சுமிகள் 'இன்றைய சந்தைக்கு, உந்தித்தள்ளப் படுகின்றனர்! தாய் உள்ளத்தை, சாந்தியின் டிசம்பர் இதழில் வெளியான 'தாய் உள்ளம்' என்ற குட்டிக் கதையைக் காட்டிலும் சுருக்கமாகவும் அழகாகவும் ஆணித்தரமாகவும் சித்தரிக்கவே முடியாது.

எனது தனிமையைத் தகர்த்தெறிந்து, என்னை உலகத்தோடு இணைக்கும் எனது உறுதுணைவனை உங்கள் 'சாந்தி' ஒழுங்காக எனக்கு வந்து கொண்டிருக்கிறது.

அடைபட்டுக் கிடக்கும் நான் உங்களுக்கு, உங்கள் 'சாந்தி'க்காக நன்றி கூறுவதன்றி வேறு என்னதான் கைம்மாறு செய்ய முடியும், சொல்லுங்கள்.

'சாந்தி' நீடுழி வாழ்க!

தோழமையுள்ள,

கே. பாலதண்டாயுதம்

★

## வியாபாரக் கலை!

ஒரு மூக்குக் கண்ணாடி வியாபாரி தமது கடையில் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருந்த குமாஸ்தாவுக்கு எவ்வாறு வியாபாரம் செய்ய வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுத்தார். அவர் கற்றுக் கொடுத்த பாடம் பின் வருமாறு:

" கண்ணாடி வாங்க வரும் ஒவ்வொருவரிடமும் நாம் கண்ணாடிகளை அவரவர் தகுதிக்கேற்ற விலைக்குத்தான் விற்க முயல வேண்டும். உதாரணமாக ஒருவர் நம்மிடம் வந்து மூக்குக் கண்ணாடி போட்டுக்கொள்கிறார் என்று வைத்துக்கொள். கண்ணாடியைத் தேர்ந்தெடுத்துப் போட்டுப்பார்த்து, அவர் திருப்தியும் அடைந்து விட்டால் 'என்ன விலையாகிறது?' என்று கேட்பார். உடனே நீ 'பத்து ரூபாய் ஆகும்' என்று சொல்ல வேண்டும். அதைக்கேட்டு அவரது கண்கள் படபடக்கிறதா என்று பார். இல்லை என்றால், உடனே நீ 'பிரேமுக்கு மட்டும்தான் பத்து ரூபாய், லென்சுகளுக்கு இன்னொரு பத்து ரூபாய் ஆகும்' என்று கூற வேண்டும். அதைக்கேட்டும் அவரது கண்கள் பட படக்காவிட்டால், 'ஒவ்வொரு லென்சுக்கும் பத்து ரூபாய்!' என்று திருப்பிச்சொல்ல வேண்டும். இதுதான் வியாபார தந்திரம். தெரிந்ததா ?"

திரைப் படம்

# வள்ளியின் செல்வன்

சமூகப்படம் என்ருல் அடுக்குமொழி வசனம், அரும்பு மீசை வில்லனின் அடாபிடித் தனங்கள், கற்பழிப்புக் காட்சிகள், கோர்ட்சீன், மோட்டார் கார் ரேஸ், ஜிகினு வேலைப்பாடு நிறைந்த கனவுக் காட்சி, அலங்கோல நாட்டியம் முதலியன எல்லாம் இருந்தாக வேண்டும் என்ற ஒரு சம்பிரதாயததை, நியதியை நமது படத்தயாரிப்பாளர்கள் கையாண்டு வருகின்றனர். அதாவது எவ்வளவு தூரம் ஆடம்பரமும் ஆபாசமும் இயற்கைக்கு விரோதமான காட்சிகளும் செயல்களும் இருக்கின்றனவோ, அவ்வளவுக்குக்கொட்டகையில் கூட்டம் நிரம்பி, தங்கள் பணப்பை கொழுக்கும் என்று முடிவு கட்டி விட்டார்கள்.

ஆனல் சமீபகாலத்தில் வெளிவந்த 'ரத்தபாசம்' 'மிஸ்ஸியம்மா' முதலிய படங்களும், இப்போது வெளிவந்துள்ள 'வள்ளியின் செல்வன்' என்ற படமும் இந்தப் போலி மனப்பான்மை மக்களிடம் எடுபடாது என்பதை நிரூபித்து விட்டன.

யுனைடெட் பிலிம் ஆர்ட்ஸின் முதல் தயாரிப்பான 'வள்ளியின் செல்வன்' ஒரு நல்ல திரைப் படமாகும்; வாழ்க்கையை ஒட்டிய, இயற்கையான பேச்சுக்களும் உணர்ச்சிகளும் செயல்களும் சம்பவங்களும் நிறைந்து விளங்குகிறது, வள்ளியின் செல்வன். எனவே நாம் அதனைப் பாராட்டுகிறேம்; வரவேற்கிறேம்.

இந்தப் படத்தின் கதாசிரியர் யார் என்பது திரையில் குறிப்பிடவில்லை. எனினும் இந்தப் படம் ஹிந்தியில் வெளிவந்த 'ஔலத்' என்ற படத்தைத் தழுவி எடுக்கப்பட்டது என்று பல பத்திரிகைகள் கூறியுள்ளன. கதாசிரியர் பெயர் மறைக்கப்பட்டிருப்பதால், மேற்படிப் பத்திரிகைச் செய்திகள் உண்மை என்றே தோன்றுகிறது; மேலும் தமிழில் ஏற்கெனவே வெளிவந்த 'வேலைக்காரியின்

மகள்' என்ற படத்தின் சாயலும் கதையில் தென்படுகிறது.

'வள்ளியின் செல்வ'னின் கதை உள்ளத்தை உருக்கும், உணர்ச்சிப் பரவசத்தில் ஆழ்த்தும் கதை.

பணக்காரன் வீட்டில் நெடுநாளாகக் குழந்தை இல்லை. எனவே அவன் மறுதாரம் கொள்ள நினைக்கிறான். இதனால் குடும்ப அமைதி கெடுகிறது. எஜமான விசுவாசம் மிகுந்த வேலைக்காரன் இந்த அநீதிக்குச் சம்மதிக்கவில்லை. எனவே அவன் ஒரு பெரிய தியாகம் செய்ய முனைகிறான். எஜமானியைக் கர்ப்பவதி என்று நடிக்கச் சொல்லி, தன் மனைவிக்குப் பிறக்கும் குழந்தையை, மனைவியையும் சம்மதிக்க வைத்து, எஜமானியிடம் கொடுத்து விடுகிறான். தன் குழந்தையை எஜமான் குழந்தை என்று சொல்லி விடுகிறான். குழந்தையைத் தூக்கிக் கொடுத்த தாயோ குழந்தையைப் பிரிந்த துக்கத்தாலேயே, உயிரை இழக்க நேரிடுகிறது. பின்னர் எஜமானிக்கு உண்மையிலேயே, கர்ப்பம் தரித்து ஒரு குழந்தையும் பிறந்து விடுகிறது. இரண்டு குழந்தைகளையும் தனது குழந்தைகளாகவே கருதிப் பிரியமாக வளர்க்கிறார் எஜமான். ஆனால் எஜமானியோ பிறப்புக் குழந்தைக்கும் வளர்ப்புக் குழந்தைக்கும் பேதம் பாராட்டி, வேலைக்காரன் குழந்தையை வெறுத்துத் துன்புறுத்துகிறாள். பெற்றவன் மனம் பேதலிக்கிறது. அவன் தன் குழந்தையை எஜமான் வீட்டிலிருந்து தூக்கிக் கொண்டு ஓடுகிறான்; பிடிபடுகிறான்; அடிபடுகிறான்; திருடனாகிறான், வீட்டை விட்டுத் துரத்தப்படுகிறான். பித்தனாகிறான். தனது திக்கற்ற நிலையை உணர்ந்த சிறுவனும் பணக்கார வீட்டைத் துறந்து, தந்தையிடம் ஓடி வருகிறான். இறுதியில் எஜமானருக்கு உண்மை புலனாகின்றது. தன் மனைவியின் கீழ்மைக் குணத்தைக் கண்டிக்கிறார். எஜமானியும் எஜமானும் வேலைக்காரனிடம் மன்னிப்புக் கேட்கின்றனர். மீண்டும் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரே குடும்பமாகின்றனர். இதுவே கதைச் சுருக்கம்.

இவ்வளவு தியாகம் செய்யக் கூடிய வேலைக்காரர்கள் இப்பொழுது இருக்கிறார்களா என்று கேள்வி எழலாம். ஆயினும், குழந்தையை ஸ்வீகாரம் கொடுப்பது நம் நாட்டில் சர்வ சாதாரணம். இப்போதோ குழந்தையை விற்பதும், வீட்டுத் திண்ணைகளிலும், கடைவீதிகளிலும் பிறந்த குழந்தையைப் பெற்றோர் விட்டுச் செல்வதும், ஆறு குளங்களில் குழந்தைகளை எறிவதும் சகஜமாகிவிட்டது. ஆனால் இவ்வாறு நடப்பதற்கு, வாழ்க்கைக் கொடுமைகளின் நிர்ப்பந்த சங்கடங்களே காரணம். ஆனால் அப்படிப்பட்ட நிர்ப்பந்த சங்கடம் எதுவும் இல்லாத காலத்திலும், குழந்தையைத் தானம் செய்வதற்கான அவசியம் தவிர்க்க முடியாத கடமை என்று இல்லாத போதிலும், எஜமான விசுவாசத்தின் காரணமாக ஒரு வேலைக்காரன் இந்தத் தியாகத்தைச் செய்வது சாத்

தியமா என்று கேட்கலாம். ஆனல் எப்படிப்பட்ட மகத்தான, மதிப்பிடற்கரிய அரும் பெருந் தியாகத்தையும் செய்யக் கூடிய உள்ளமும் உணர்வும் படைத்த மனிதர்கள் உழைத்துப் பாடுபடும் மக்கள் குலத்திடையே தான் காணக் கிடைப்பார்கள். எனவே இந்தக்கதையில் காணும் தியாகம் ஒரு அபூர்வ நிகழ்ச்சியாயினும் நடைமுறை சாத்திய மற்றதல்ல.

இந்தக் கதையில் பாராட்டப் படவேண்டிய அம்சம் என்ன வென்ருல், குழந்தையைத் தியாகம் செய்த வேலைக்காரன் தன் உரிமை உணர்ச்சியையோ நியாய வேட்கையையோ தானம் செய்து விட வில்லை. நேர்மையுணர்ச்சியும், உரிமை உணர்வும் உள்ளவனுக இருக்கிருன். தன் மகன் பணக்காரரின் மகளுேடு சம உரிமையும் அந்தஸ்தும் பெற வேண்டும் என்று விரும்புகிருன். அந்த உரிமை கிடைக்காதவரையில் அவன் ஓய்ந்திருக்கவில்லை. பணக்காரருக்குஎன்றுபட்டயம் கட்டி வைத்திருந்தாலும் அவன் தன் குழந்தையை அந்தச் சூழ்நிலையிலிருந்து பிரித்து, தானே வளர்க்க முற்படுகிருன். இறுதியில் பணக்கார வர்க்கத்தை இடித்துரைத்து, அவர்களது சுயநலத்தைக் கண்டிக்கவும் அவன் தயங்கவில்லை. பணக்கார மமதையைப் பணியவைத்த வெற்றி வீரனுகவே அவன் விடுதிரும்புகிருன்.

'வள்ளியில் செல்வ'னில் வரும் வேலைக்காரக் கந்தன்,வேலைக்காரி ஆகிய இருவரும் தியாகத்தின் ஒப்பற்ற சின்னங்கள்; உன்னதமான படைப்புகள். டால்ஸ்டாய், டிக்கன்ஸ், செஹாவ் போன்றமேதைகளின் கதாபாத்திரங்களை நினைவூட்டும் சித்திரங்கள். ஆனல் இவர்கள் உரிமை வேட்கை கொண்டவர்களே யாயினும் வர்க்க உணர்வு பெற்றவர்களல்ல. வேலைக்காரனும், எஜமானும் அண்ணன் தம்பிகள் போல் உறவு கலந்து விடுவார்கள் என்பதும் நம்பமுடியாத, நடை முறை சாத்தியமில்லாத கற்பனை. எனவேதான் அவர்கள் செய்த மகத்தான தியாகம் பயனற்றுப் போகிறது. அவர்கள் யாருக்காகத் தியாகம் செய்தார்கள்? வர்க்க குணமான பணச்செருக்கின் காரணமாக அடைந்த நன்மையின் செய்ந்நன்றியுணர்வையும், ஆறு வருஷமாய் வளர்த்த பாசத்தையும் கூடத்துறந்து, பெண்மைக்கும் தாய்மைக்கும் மனிதத்தன்மைக்கும் இழிவுதரும்விதத்தில் நடந்து கொள்ளும் ஒரு எஜமானிக்காக! ஆண்டாண்டுக் காலமாய் எஜமான விசுவாசத்தோடு சேவை செய்து வரும் வேலைக்காரனையும் வேலைக்காரியையும், காரண காரியத்தைக் கூடத்தெரிந்து கொள்ளாமல் அடித்து விரட்டவும், அறைந்து தள்ளவும் முனைகின்ற ஒரு எஜமானனுக்காக! இப்படிப்பட்ட எஜமானியும் எஜமானனும் திடீரென்று மனிதாபிமான உணர்ச்சிக்கு ஆளாகி, வேலைக்காரனிடம் மன்னிப்புக் கேட்பதோ, அவனைச் சகோதரனுகக் கட்டித் தழுவிச் சம அந்தஸ்து

கொடுப்பதோ நடைமுறை சாத்தியமல்ல. எனவே கதையின் முடிவைக் கதாசிரியரின் 'மங்களக் கற்பனை' யாகவே நாம் கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்தப் படத்தில் எல்லோருமே நன்றாக நடித்திருக்கிறார்கள். வேலைக்காரனாக வரும் சுப்பையாவும் வள்ளியாக வரும் சுந்தரிபாயும் உள்ளத்தை உருக்கும் வகையில் மிக அருமையாக நடித்துள்ளார்கள். அது போலவே மாஜி சிரஸ்தாராக வரும் டி. எஸ். துரைராஜும், மூர்த்தியாகவரும் ஜெமினி கணேசனும், சிறுவர்களாக வரும் முரளியும் பாபுஜியும் அருமையாகநடித்திருக்கிறார்கள். மனித குலத்திற்கே விரோதமான மால்தூஸியக் கொள்கைகளைக் குடும்பக்கட்டுப்பாடு என்ற பெயரால்சர்க்காரே பிரசாரம் செய்து வரும் இந்த நாளில், சிரஸ்தாராக வரும் துரைராஜ் அந்தக் கொள்கைகளை ஹாஸ்ய ரசம் ததும்ப, தாக்கித் தகர்த்துப் பேசுவதும் பாராட்டத் தக்கதாய் உள்ளது.

கொத்தமங்கலம் சுப்புவின் வசனம் இயற்கையோடிசைந்து சினிமா வசனத்துக்கோர் நல்ல உதாரணமாக விளங்குகிறது. பாடல்களும் வசனமும் கதைப் போக்குக்கு உள்ளடங்கிக் கச்சிதமாக அமைந்துள்ளன. கொத்தமங்கலம் சுப்புவின் டைரக்‌ஷனும் பாராட்டத்தக்க வகையில் சிறப்பாய் அமைந்துள்ளது. எனினும் துரைராஜ் ஜோஸ்யம் கேட்கும் காட்சி, சுப்பையா பாடும் பாட்டு, வனஜாவின் ஒன்றிரண்டு நடனங்கள் முதலியனவற்றை நீக்கியிருக்கவேண்டும். வள்ளிக்கு எமன் வழக்கமான கார்விபத்து மூலமாகத்தான் வருகிறான். அதைவிட, பிள்ளைப்பாசத்தால் உருகி உருகி உருக்குலைந்தே அவள் சாகிறாள் என்று காட்டியிருந்தால், கதையின் வலிமை இன்னும் அதிகரித்திருக்கும்.

'கண்கவரும்'(!) காதல் காட்சிகளோ, 'கருத்தைக் கவரும்' (!) அடுக்கு மொழி வசனங்களோ இன்றி, உண்மையிலேயே கண்ணையும் கருத்தையும் கவர்கின்ற சிறந்த சிருஷ்டி 'வள்ளியின் செல்வன்'. தமிழ் மக்கள் அனைவரும் பார்த்து அனுபவிக்க வேண்டிய படம் அது.

'துருவன்'

**இளைஞரும், கிழவரும்.**

கிழவர்கள் கனவுகளைத் தான் காண்பார்கள்; இளைஞர்கள் கற்பனை பண்ணிப் பார்ப்பார்கள்.

—பழைய ஏற்பாடு.

★

**அபிலாஷை**

மனிதகுலத்தின் அறியாமையையும் துன்ப துயரங்களையும் ஏணிப் படியாகக் கொண்டு அடைய விரும்பும் அபிலாஷைகளைத் தவிர, ஏனைய அபிலாஷைகள் அனைத்தும் நியாயமானவையே.

—ஜோஸப் கான்ராட்.

# புத்தக விமர்சனம்



விமர்சனத்துக்கு
இரண்டு பிரதிகள்
அனுப்ப வேண்டும்.

## அன்றிரவு.

[ஆசிரியர்: புதுமைப்பித்தன்; பக்கங்கள்: 187. பிரசுரம்: ஸ்டார் பிரசுரம் திருவல்லிக்கேணி, சென்னை - 5. விலை ரூ. 3—0—0]

இருபதாம் நூற்றாண்டின் புதிய கவிதா பாரம்பரியத்தின் மூலபிதாவாக மகாகவி பாரதியார் எவ்வாறு விளங்குகிறாரோ, அவ்வாறே சிறுகதை உலகில் புதுமைப்பித்தன் ஒரு புதிய பரம்பரையின் பிதா மகனாக விளங்குகிறார். சமுதாயத்தின் உள்ளோட்டங்களைப் புரிந்து கொள்ளாது. அதனை விட்டு விலகி, இதய சாம்ராஜ்யம் என்ற எல்லைக்குள்ளாக எழுப்பிய கனவுக் கோட்டைகளையே கதைகள் என்று பரப்பி வந்த காலத்தில், புதுமைப்பித்தன் வாழ்க்கையைப் புறக்கணிக்காத, அதன் குரூர வசீகரங்களைக் கண்டு கூசி ஒதுங்காத, யதார்த்தவாதியாக விளங்கி, உலக இலக்கியத்திலே நிரந்தர ஸ்தானமும் தமிழுக்குக் கௌரவமும் தேடித் தரும் அற்புதமான கதைக் களஞ்சியத்தையும் வசனச் செல்வத்தையும் அளித்துச் சென்றிருக்கிறார். பாரதியைப் பரிசயம் செய்து கொள்ளாமல், புதுமைக் கவிதைப் பாதையில் எவ்வாறு எவரும் புகமுடியாதோ, அவ்வாறே புதுமைப்பித்தனைக் கற்றுணர்ந்து கொள்ளாமல், எவரும் புதுமைக் கதைப் பாதையிலும் பிரவேசிக்க இயலாது. எனவே மக்கள் குலத்துக்கு அறிவும் தெளிவும் பயனும் அளிக்கக்கூடிய இலக்கியத்தைப் படைக்கவும் படிக்கவும் விரும்புவோர் புதுமைப்பித்தனின் இலக்கிய சிருஷ்டிகளை நன்கு பயில வேண்டியது அவசியம்.

'அன்றிரவு' என்ற மகுடமிட்ட இந்தக் கதைத் தொகுதியில் புதுமைப்பித்தனின் இலக்கியத் திறமையையும் புலமையையும் வெளிப்படுத்தும் பதின்மூன்று சிறுகதைகள் அடங்கியுள்ளன; புதுமைப்பித்தன் ஆரம்பகாலத்தில் எழுதிய சிலகதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளனவெனினும் அவையாவும் அவரது தனித்தன்மையையும் கதைசொல்லும் திறனையும்விளக்குவனவாயுள்ளன. பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடற் புராணக்கதையைப் பின்னணியாகக்கொண்டு பக்தனைச் சோதிக்கும் கடவுள் கடமையில் தாமே தவறினாலும் பிரம்படி பட்டுத்தான் தீர வேண்டும் என்ற கருத்தை வலி

யுறுத்தும் சொல்லாட்சித்திறன் மிகுந்த 'அன்றிரவு', எழுத்தாளரும் பதிப்பாளரும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி உறவு கொண்டாடும் இழிதகை நிலையை இடித்துக் காட்டும் 'நிசமும் நினைப்பும்'. தாழ்ந்தவர்களை வாழ விடாமல் தடுப்பதையே தொழிலாய்க் கொண்ட 'சமூகத்தூண்' களின் அதிகார மனப்பான்மையையும் ஆணவத்தையும் அம்பலப்படுத்தும் 'நாசகாரக் கும்பல்' பூர்த்தியடையாத ஆசாபாசங்களோடு புழுங்கித் தவித்த போதிலும் போலிக் கௌரவத்தைக் கை விடாத மத்தியதரவர்க்க வாழ்வைச் சித்தரிக்கும் 'பொய்க் குதிரை', சுக்குகண்ட இடத்தில் பிள்ளை பெற முயல்வது போல், அச்சுயந்திரத்தின் அசுரப் பசிக்கு இலக்கிய சிருஷ்டியை இரைபோட முனையும் எழுத்தாளரின் கற்பனைச் சிதைவைச் சித்தரிக்கும் 'கருச்சிதைவு முதலிய அற்புதமான சிறு கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்த அருமையான கதைத் தொகுதியை அனைவரும் படிக்க வேண்டியது அவசியம்.

அரிய கலைப் பொக்கிஷமான இந்தக் கதைத் தொகுதியை அழகான முறையில் அச்சிட்டு உதவிய ஸ்டார் பிரசுரத்தார் நமது பாராட்டுக் குரியவர்கள்.

## புதிய பாதை

[ ஆசிரியர் : க. மாணிக்கவாசகன். பக்கங்கள் 32. பிரசுரம் : வறுமைப் பதிப்பகம், சேத்துப்பட்டு சென்னை 10 விலை அணு ஆறு ]

நூலாசிரியர் மக்கள் நலத்தில் நாட்டம் கொண்டவராகவும், ஜனநாயக உணர்ச்சி கொண்டவராகவும் விளங்குகிறார்; தமது நாட்டத்தையும் உணர்ச்சியையும் கவிதை உருவில் கொடுக்க வேண்டும் என்றும் முயன்றிருக்கிறார். அவரது விருப்பமும் முயற்சியும் வரவேற்கத் தக்கதே. எனினும் இதிலுள்ள பாடல்கள் சாதாரணமான கவித்துவப் பண்பு கூட இல்லாதிருப்பது வருந்தத் தக்கது. கவிதை என்பது சொல்ல விரும்பும் கருத்தைக் கலையழகோடும், கற்பனைநயத்தோடும் சொல்லாட்சியும் சந்தமும் நிறைந்து விளங்க உருவாக்குவதே யாகும். ஆனால் ஆசிரியர் தாம் பிரசாரம் செய்ய விரும்பும் கருத்துக்களை கலையழகோ கற்பனை நயமோ தோய்த்து உருவாக்காமல் அப்படியே 'பச்சை' யாகப்பாட்டு என்ற உருவத்தில் பொதிந்துவைத்திருக்கிறார். மேலும் சந்திப் பிழை, சொற்பிழை, சந்தப்பிழை முதலியனவும் மலிந்து காணப்படுகின்றன. எனவே இந்நூலாசிரியர் பாரதியார் தேசிகவிநாயகம் பிள்ளை முதலியோரின் கவிதைகளையும், குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற் பள்ளு போன்ற எளிய இனிய தமிழ்ப் பிரபந்தங்களையும் முறையே நன்கு பயின்று, கவிதா சிருஷ்டியில் இறங்கினால் நல்ல கவிதைகளை இயற்ற முடியும். வருந்தினால் வாராதது ஒன்றுமில்லை. சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்தான். இந்நூலுக்கு திரு. ப. ஜீவானந்தம் ஒரு சிறப்புரை கொடுத்திருக்கிறார். ஜீவானந்தம் நல்ல தமிழ் ரசிகர். எனவே உற்சாகமுள்ள இளைஞரை ஊக்குவிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடேயே 'சிறப்

புரை வழங்கியிருக்கிறார் என்றே நாம் கருதுகிறோம்.

இந்நூலை வறுமைப் பதிப்பக வெளியீடாக வெளியிட்டுள்ளார்கள். ''இல்லை என்ற சொல்லை இல்லையாக வைப்பேன்'' என்றுதான் பாரதி பாடினான். வறுமையை நாம் வெறுப்பதை வாழ்க்கையில்தான் காட்டவேண்டுமேயன்றி, அதற்குக் கோயில் கட்டிக் கும்பிடுவதுபோல் பெயர் வைத்துவிடக் கூடாது.

தொ. மு. சி.

### ஹைட்ரஜன் குண்டு!

ஒரு ஹைட்ரஜன் குண்டு வெடித்தால் வெடித்த இடத்தைச் சுற்றியுள்ள 7000 சதுர மைல் பரப்புள்ள பிரதேசத்தில் அதன் விஷம் விரிந்து பரவும் என்று அமெரிக்க அணுகுண்டு ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

லண்டன் போன்ற ஒரு நகரில் ஒரு ஹைட்ரஜன் குண்டு வீசப்பட்டால் 140 மைல் சுற்றளவுக்குள் உள்ள சகல மக்களும் கொல்லப்படுவர்; ஜீவராசிகள் அழியும். இதிலிருந்து 160 மைல் சுற்றளவுக்குள் இருப்போரில் பாதிப் பேர் அழிக்கப்படுவர். 190 மைல் தூரத்தில் உள்ளவர்களில் 100-க்கு 10 பேர் பலியாவர்.

### 'தெரியுமா?'
### விடைகள்.

(1) டிசம்பர் 11. (2) ராஜமையர் எழுதிய கமலாம்பாள் சரித்திரம். (3) பங்குனி அஸ்தம் (4) மகாகவி பாரதியார் (குறிப்பு: இந்தப் பாடல் பாரதி பாடிய நீளப் பாடலொன்றின் ஒரு பகுதி. ஆனால் இந்தப்பாடல்பாரதியின் கவிதைத்தொகுப்பிலே வெளிவரவில்லை.) (5) ஜன விநோதினி (6) 'வாழ்க்கை என்னும் கதை ('புதுமைப் பித்தன் கதைகள்' என்ற தொகுதியில் உள்ளது.) (7) கல்கி எழுதிய பாரிஸ்டர் அருணாசலம் என்ற சிறு கதை; சிவாஜி நாடக மன்றத்தாரின் 'இருளும் ஒளியும்' என்ற நாடகம்; ராம்நாத் டைரக்ட் செய்த 'விடுதலை' என்ற தமிழ்ப் படம். (8) 'இன்றைய தமிழ் வசன நடை' என்ற நூலை எழுதியவரான மு. அருணாசலம். (9) எழுத்தாளர்: ஜமதக்னி; (பரிசு பெற்ற நூல் என்ற காரணத்தால் இந்நூலை வெளியிட முன்வந்தார் ஒரு பதிப்பக உரிமையாளர்; ஆனால், அந்த நூலின் கையெழுத்துப்பிரதியைப் பரிசோதித்துப் பார்த்தபோதுதான் அது ஒரு அப்பட்டமான மொழி பெயர்ப்பு என்பது தெரிய வந்தது. தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசுக்கு இது ஒரு உதாரணம்.) (10) திருநெல்வேலி.

"SHANTHI" Edited and Published by T. M. C. Ragunathan at 81, High Road, Tirunelveli Jn. Printed by S. Ramiah at Sri Lakshmi Press, 120, High Road, Tirunelveli Jn.



# "புதுமைப்பித்தன்"

## சிறுகதைப் போட்டி — 1955.

★

## பரிசு ரூபாய் நூறு

★

## முடிவு தேதி 10-4-55

### நிபந்தனைகள்

★ மொழி பெயர்ப்போ தழுவலோ கூடாது; சொந்தக் கற்பனை என்ற ஒப்புதலும் குறித்தனுப்பவேண்டும்.

★ ஒன்றுக்கு மேற்பட்ட கதைகள் பரிசுபெறத் தக்கதெனக் கருதப் பட்டால் பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

★ பரிசு பெறும் கதையை முதன்முதலில் பிரசுரிக்கும் உரிமை சாந்திக்கே உரியது.

★ எழுத்துப் பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது. பிரதி எடுத்துக் கொண்டு அனுப்புவது நல்லது.

★ கதைகளை 'பு. பி. சிறுகதைப் போட்டி' என்று குறித்து சாந்தி, 81, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

★ சாந்தி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

★ போட்டி சம்பந்தமான கடிதப் போக்குவரத்து கூடாது.

★ பரிசீலனைக் குழுவினர்: 1. அகிலன் 2. அசோகன் 3. நா. வானமாமலை 4. ரகுநாதன்

அழகுக்கு அழகு செய்ய....

சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டல கேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி என்னும் ஐம்பெருங்காப்பியங்களையும் அணிகலன்களாகப் பெற்ற பாக்கியவதி என்று தமிழன்னையைப் புலவர்கள் பாராட்டுகிறார்கள். ஆம், நல்ல நகைகள் அழகுக்கு அழகு செய்யும் சிறப்புடையவை.

★

திருவாங்கூர் கொச்சியில் உயர்தரமான
தங்கம், வெள்ளி, வைர நகைகளுக்கு பிரசித்தி பெற்ற இடம்

# ஜுவல் மான்ஷன்

50 ஆண்டுகளாகப் பொது மக்களின்
நம்பிக்கையைப் பெற்றுள்ள ஆபரண மாளிகை

★

உரிமையாளர் :

**பி. எம். சி. சுப்பிரமணியன் செட்டியார்**

" ஜுவல் மான்ஷன் "

சாலை : : திருவனந்தபுரம்


WRAPPER PRINTED AT SHANTI PRESS, MADRAS-1